தென்னக வரலாற்றைத் திருத்து !

தெற்கில் ஒலித்த தீன் குரல்

செ.திவான்

தென்னக வரலாற்றைத் திருத்து !

தெற்கில் ஒலித்த தீன் குரல்

வரலாற்று ஆய்வுச் செம்மல்

செ. திவான் எம்.ஏ., எம்.:பில்.,

✆ 0462 - 572665

சுஹைறா பதிப்பகம்

106, எப். 5. திருவனந்தபுரம் சாலை

பாளையங்கோட்டை - 627 002.

திருநெல்வேலி மாவட்டம்

முதற்பதிப்பு	:	6.4.1998
உரிமை	:	ஆசிரியருக்கே
விலை	:	ரூபாய் இருபது மட்டும்

சமர்ப்பணம்

உலகின் ஒழுக்க நெறியை உணர்த்தி

நல்வழிப் படுத்திய நல்லவர்

ஜமாஅத்துல் உலமா ஆசிரியர் மௌலவி

மீ.இ.மு. அபுல் ஹஸன் ஷாதலிஸாகிப்

(நூரிய்யி, பாஜில் பாகவி) அவர்களின் தந்தையார்

முஸல்மான் பத்திராதிபர் ஹாஜி மௌலவி

மீ.இ.முஹம்மது அப்துல் காதிர் ஸாகிப்,

பன்னூலாசிரியர் **A.K. ரிபாயி** *ஆகியோருக்கு*

துவாச் செய்ய வேண்டுகிறோம்.

செ. திவான்

அச்சிட்டோர்:-

கனி ஆப்செட் பிரஸ், திருநெல்வேலி டவுண்.

நன்றி

எனது முயற்சிகளுக்கு ஊக்கமளித்து வரும்

மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச் செயலாளர்

தமிழர் தலைவர் **வைகோ** M.P.

(சிவகாசி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர்) அவர்களுக்கும்

நெல்லை மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் திரு. டி.ஏ.கே. இலக்குமணன்

அவர்களுக்கும்

இதயங்கனிந்த நன்றியினைத்

தெரிவித்துக்கொள்கிறேன்.



செ.திவான்

கல்வித்தந்தை சுலைமான் இல்லம்

106, F-5, திருவனந்தபுரம் சாலை,

பாளையங்கோட்டை - 627 002.

© 572665

வரலாற்று ஆய்வு
முழுமை அடைந்த ஒன்றல்ல....

"வரலாறே சத்தியம். சத்தியமே வரலாறு. கற்றனைத்து ஊறும் அறிவு. மேன்மேலும் கற்பதன் மூலம் மேன்மேலும் அறியப் பெறலாம். வரலாற்றுஆய்வு நிலை பெற்றதோ முழுமை அடைந்ததோ அன்று. வரலாற்று ஆசிரியன் தீர்க்கதரிசியும் அன்று. ஆயினும் ஒரு வித்தைக்காரனைப் போல் பண்டைய நிகழ்ச்சிகள், பல வகைப் பட்ட மறைமுகமான செய்திகளுடன் அவன் அவற்றைச் சுட்டிக் காட்ட முடியும்"

- தென்னக வரலாற்றுத் துறை முன்னேடி
பேராசிரியர் க.அ. நீலகண்ட சாஸ்திரி

"ஆராய்ச்சித் துறையில் கருத்து வேறுபாடுகள் நிகழ்தலும், புதியனவாகக் கிடைக்கும் ஆதாரங்களால் சில செய்திகள் திருத்த மெய்தலும் இயல்பாகும்"

- ஆராய்ச்சிப் பேரறிஞர்
டி.வி. சதாசிவப் பண்டாரத்தார்

"இம்மாதிரியான ஆய்வுகளுக்கு முடிவே கிடையாது. எப்போதும் யாராவது தொடர்ந்து ஆய்வு செய்து கொண்டே இருக்கலாம். புதிய செய்திகளையும் கொண்டு வரலாம்"

- பாண்டியர் வரலாற்று ஆய்வாளர்
குடந்தை N. சேதுராமன்

எண்ண அலைகள்....

"முஸ்லிம் சமூகச் சீர்திருத்தம்" என்ற நூலில் கண்ணியத்திற்குரிய மௌலவி அபுல் ஹஸன் ஷாதலி அவர்கள் தனது தந்தையாரைப் பற்றி எழுதிய கட்டுரையை வாசித்துக் கொண்டிருந்தேன்.

சுல்தான் ஷஹீத் செய்யது இப்ராகீம்

அதில் இராமநாதபுரம் ஜில்லா கீழக்கரையை அடுத்த ஏர்வாடியில் அடங்கப்பெற்றிருக்கும் சுல்தான் ஷஹீத் ஸெய்யித் இப்றுகீம் ஒலியுல்லாஹ் (ரஹ்) அவர்களுடன் ஹிஜ்ரி ஆரும் நூற்றாண்டில் புனிதமிக்க மதீனு முனவ்வராவிலிருந்து நாயகமவர்களின் அனுமதியுடன் புறப்பட்ட ஜமா அத்தில் - தப்லீக், இஷாஅத், ஜிஹாது செய்யவந்த தியாகத் திருக்குழுவில் - முக்கியப் பிரமுகராக இருந்த ஹுஸைன் அரபி அவர்களின் மரபில் வந்தவர்கள் தாம் தென்காசி நடுப்பேட்டைத் தெருவிலுள்ள பங்காரு குடும்பத்தவர். ஹுஸைன் அரபி அவர்களின் புதல்வர் மீரான் ஸாஹிப் அவர்களாவர்.

பங்காரு குடும்பத்தார்

இவர்கள் சுல்தான் ஷஹீத் செய்யிது இப்ராஹீம் வலியுல்லாஹ் (ரஹ்) அவர்களின் உத்தரவின்படி இஸ்லாமியப் பிரச்சார வேலையாக திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசிக்கு வந்து தங்கிஞர்கள். அப்போது பாண்டிய மன்னன் தென்காசியில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த காலமது. இதுபற்றி பல சரித்திரங்கள் கூறப்படுகின்றன. இந்தக் குடும்பத்தின் சரிதை கவியிலும் வசனத்திலும் கையேட்டுப் பிரதிகளாக இன்றும் இருந்து வருகிறது. இந்தக் குடும்பத்துக்கு "பங்காரு குடும்பத்தார்" என்று பெயர் வழங்கப்படுகிறது. இராமநாதபுரத்து மன்னன், மீரான் அவர்களுக்கு "பங்காரு" (தங்கம்) என்று வழங்கிய பட்டம், இந்தக் குடும்பத்தாருக்கு இன்றும் விளங்கி வருகிறது.

தென்காசி நடுப்பேட்டைத் தெருவில் வாசஞ் செய்து வந்த எனது தந்தையவர்களின் தந்தையின் பெயர் இஸ்மாயீல் கனி ஸாஹிப். இவர்கள், மார்க்க விஷயங்களில் நல்லபடி தேர்ச்சி பெற்றவர்களாக இருந்ததுடன் இயற்கைப் புலவராகவும் இருந்தார்கள். இவர்கள் இயற்றிய பாடல்கள், பல இப்போதும்

இக்குடும்பத்தில் பாடப்பட்டு வருகின்றன.* என்று குறிப்பிட்டதை அறிந்தபோது, அந்த வரலாற்றை அறிய வேண்டிய ஆவல் மேலும் அதிகரித்தது.

பழம்பாடலில் பாண்டியரின் புதிய சரிதை

ஹளரத் ஷாதலி அவர்களைச் சந்தித்து அடிக்கடி மார்க்க ஆலோசனைகளைப் பெறும் வேளைகளில் அவர்களிடம் இதுபற்றி கேட்டேன். அவர்களும் தம் பொறுப்பில் வைத்திருக்கும் பழம் பாடல்களைத் தந்து வாசிக்கச் சொன்னார்கள். அந்தப் பாடல் வரிகளின் பின்னணியில் 18.9.93 தினமணி சுடரில் "பழம்பாடலில் பாண்டியரின் புதிய சரிதை" என்னும் எனது நான்கு பக்கக் கட்டுரை வெளியானது. அக்கட்டுரையின் முடிவில் 'தென்காசி பங்காரு முத்துமீரான் குடும்பத்தினர் போற்றிப் பாதுகாத்து வரும் பாடல்களை வரலாற்று ஆய்வாளர்கள் ஆய்வு செய்தால் பாண்டியப் பேரரசு பற்றி வரலாற்றுக்குப் புதிய செய்திகள் பல கிடைக்கக் கூடும்' என்று குறிப்பிட்டிருந்தேன். பாண்டியர் வரலாறு குறித்து மேலும் விவரங்களை சேகரிக்கத் துவங்கினேன். அதன் அடிப்படையில் நடுநிலையில் நின்று சில செய்திகளைத் தந்திருக்கிறேன். "தென்னக வரலாறு" சரித்திர ஆய்வாளர்களால் நிச்சயம் திருத்தி எழுதப்படவேண்டும் என்ற எண்ணம் மேலும் உத்வேகம் பெற இந்த நூல் துளியேனும் காரணமாக அமையுமானல் அதுவே இந்த முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகும்.

இதயத்தில் கொழுந்து விட்டெரியும் எண்ணங்கள் பல விரைவில் நூலாக வெளிவர இறைவன் அருள்புரிவானாக!

செ.திவான்

உள்ளே...

பாண்டியப்பேரரசு	பக் - 7
பாண்டியரின் தாயாதிச் சண்டைகள்	... - 13
ஷஹாதத் நாமா	... - 21
சையிது இப்ராஹீம் ஷஹீது வலி (தெற்கில் ஒலித்த தீன்குரல்)	... - 31
பழம்பாடலில் பாண்டியரின் புதிய சரிதை	... - 37
பங்காரு குடும்ப சரிதப் பாடல்கள்	... - 43
தென்னக வரலாற்றைத் திருத்து!	... -77

---

*மீ.இ.முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் , முஸ்லிம் சமூகச் சீர்திருத்தம், 1986 பக் 300 - 301.

பாண்டியப் பேரரசு

அகிலத்திற்கோர் அருட் கொடையாகத் தோன்றிய அண்ணல் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் போதித்த சத்திய சன் மார்க்க இஸ்லாம் மார்க்கம் அரபு நாட்டில் மட்டுமின்றி கடல் வழியாகவும், தரைமார்க்கமாகவும், உலகமெங்கிலும் பரவிய போது அன்னைத் தமிழகத்திலும் வேரூன்றியது.

முப்பேரரசுகள்

தமிழகம் பழங்காலத்தில் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டிருந்தது. "கல்வெட்டுக்களால் துலக்கமுறும் தமிழ் அரசர்களின் பெயர் அட்டவணைகளும், அவர்கள் வெற்றி வாகை சூடிய போர் விளக்கங்களும், இயேசு பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகட்கு முன்னரே அசோகன் அரசியற் கட்டளைகளில் காணப் பெறும் தென்னுட்டு அரசுகளைப் பற்றிய குறிப்புக்களும் பண்டைக் காலத்துச் செம்மொழிப் புலவர்கள் தமிழ்நாட்டு நகரங்கள் சிலவற்றின் பெயர்களை எடுத்தாண்டிருப்பதும், நாம் காலத் தொடக்கமாக வகுத்துக் கொண்ட காலப்பகுதிக்கு ஐந்து ஆறு நூற்றாண்டுகட்கு முன்பே தமிழகத்து அரசுகள் நிலவியுள்ளனவாகக் கொள்ளத் துணை புரிகின்றன... நமது காலத் தொடக்கத்திற்கு முன்னர்த் தமிழகம் சேர, சோழ, பாண்டியர் கோலோச்சிய முப்பெரும் நாடுகளாகப் பிரிவுற்றிருந்தது " என்பர் குமஸ்தாவ் எலபோன்.*

வரலாற்றுக் காலங்கள்

தமிழக வரலாற்றை "வரலாற்றுக்கு முற்பட்ட காலம், சங்க காலம், பல்லவர் காலம், பாண்டியர் - சோழரின் பேரரசு காலம், மத்திய காலம், பிற்காலம், என்று ஆறு காலங்களாக டாக்டர். கே.கே. பிள்ளை வரையறுப்பார். ** இதில் மூன்ருவதாகக் குறிப்பிடப்படும் பாண்டியர் - சோழரின் பேரரசுக் கால சரித்திரத்திற்கு, அதிலும் குறிப்பாக பாண்டிய மன்னர்களிடையே நடைபெற்ற வாரிசுரிமைப் போரின் காலத்திற்கு நாம் வர இருக்கிறோம். பாண்டிய நாடு எது? பாண்டியர்கள் யார்?

---

* வரத. வீரப்பன், மேனுட்டறிஞர் கண்ட தமிழகம், 1953, பக். 18

** கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், 1975, பக். 2.

பாண்டிய நாடு

திருவழுதி நாடு, தருவடி நாடு, மலவிவளநாடு, செம்பிவள நாடு, மாறு.....நாடு, ராஞ்சிநாடு, வீசுங்கை நாடு, வெம்பரநாடு, பொதிய நாடு, அறந்தாங்கி நாடு, மறபநாடு, தோதகநாடு, வைகைநாடு, குன்றநாடு, போன்ற 18 நாடுகளைக் கொண்டது பாண்டிய மண்டலம். அதற்கு

"கிழக்கெல்லை கீழ்கடல்
தெற்கெல்லைத் தென்கடல்
மேற்கெல்லை மேல் கடல்
வடக்கெல்லை சூருமலையும் வெள்ளாறும்" *
என்று எல்லையும் வரையறுக்கப்பட்டிருந்தது.

" வெள்ளாறது வடக்கா மேற்குப் பெருவழியாந்
தெள்ளாற் புனற்கன்னி தெற்காகும் உள்ளார
ஆண்டகடல் கிழக்காமைம் பத்தறுகாதம்
பாண்டி நாட்டெல்லைப்பதி" என்றும் எல்கை குறிப்பிடப்பட்டது.

காவிரிக்குத் தெற்கே அன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்கள் அடங்கிய தேசம் என்றும், 'வெள்ளாற்றுக்குத் தெற்கு, கன்னியாகுமரிக்கு வடக்கு, பெரு வழிக்குக் கிழக்கு, கடற்கரைக்கு மேற்கிலுள்ள நாடு பாண்டிய நாடு என்று அழைக்கப்பட்டது. **

பாண்டியர்கள்

"தமிழ்நாட்டில் முன்னாளில் இறைமை பூண்டிருந்த முடிமன்னர் மூவகையார். அவருட் பண்டையர் என்ற பெயர்க்குரிமை பெற்றவர் பாண்டியரே." ***

"பாண்டியர்கள் படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டு வரும் தொல்குடியினர். அவர்கள் பழந்தமிழகத்தில் தென்புலத்தை ஆண்டனர். பண்டைக்காலத்தில் தமிழ்நாடு 'பாண்டி' என்று அழைக்கப்பட்டதிலிருந்து பாண்டியர்களின் தொன்மையும் தொல்புகழும் விளங்குகின்றன" *

---

* சி.எம். ராமச்சந்திர செட்டியார், சோழன் பூர்வ பட்டயம், சென்னை, 1950, பக் 228 - 229.

** ந.சி கந்தையா பிள்ளை, தமிழகம், 1934, பக் 78.

*** நா. கனகராஜையர், பாண்டிய மன்னர், 1930, பக் III.

வியாசபாரதம்

வியாசபாரதத்தில் ஆதிபர்வத்தில் (ஸ்வயம்வரபர்வம், பார்த்திபட பிரக்யாபநம்) என்புழி அகத்தியதிக்காகிய தென்றிசையின்கண் உள்ள பாண்டியர் கேரளர், சோளேந்திரர் மூவரும் அவரவர்க்குரிய அணைகளில் மூன்று தீயைப் போல விளங்குகின்றனர் எனக் கூறப்படுவதால்* பாண்டியர்களது தொன்மையை உணர்ந்து கொள்ள முடிகிறது.

வால்மீகி இராமாயணம்

" பின்பு பொன்னிறைந்த தாயும், அழகுடைத்தாயும், முத்துமணி இவற்றால் அணியப் பட்டதாயும் நகரத்து அரணோடு இணைக்கப்பட்டதாயுமுள்ள பாண்டியர் வாயிற் கதவை வானரர்காள்! போய்க் காண்பீர்" என வான்மீகி முனிவர் கூறுகின்றமையால் பாண்டியர் ஆண்ட நாட்டின் தொன்மை புலனுகிறது**

" ததோ ஹேம மயம் திவ்யம் முக்தாமணி விபூஷிதம்
யுக்தம் கவாடம் பாண்டயானும் ததாத்ரக்ஷ்யதவானரா!"*** என்ற வால்மீகியின் இராமாயணத்தின் வரிகளால் பாண்டியர் தலைநகரான கவாடபுரி (மதுரை) பேசப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

புராணங்களில் - பாகவதங்களில்

கிருதமாலை என்ற வையை நதிக்கரையில் இருந்தவனும் அரச முனிவனுமான சத்தியவிரதன் என்ற பாண்டியனே பின் வைவசுவதமனு ஆயினன் என்று மச்ச புராணம் கூறுகிறது.

இந்திர்த்துய்மன் என்ற பாண்டியன் கசேந்திரனுய் முதலை வாயிலிருந்து திருமாலால் காக்கப்பட்டவன் என்று பாகவதம் உரைக்கின்றது.****

இத்தகைய பழமைச் சிறப்புடையவர் பாண்டியர்கள். அவர்களைப் பற்றி எடுத்துரைக்கின் இன்னும் விரிவாகுமென்பதால் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

---

* ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, 1952, பக். 328.

** வி.கோ . சூரியநாராயணசாஸ்திரியார், தமிழ் மொழியின் வரலாறு, பக். 59.

*** சுத்தானந்தபாரதி, தமிழுணர்ச்சி, 1938, பக். 38.

**** மு. இராகவையங்கார், இலக்கியக் கட்டுரைகள், 1954, பக். 46.

தென்புலம்

"சேரநாடு மேல் நாடாகியதனுல் குட புலம் என்று அழைக்கப்பட்டது. சோழ நாடு அதற்குக் கிழக்கே உள்ளமையால் குண புலம் என்றும், அவ்விரண்டுக்கும் தெற்கில் அமைந்தமையால் பாண்டியநாடு தென்புலம் என்றும் கூறப்பட்டது" *

தென்பாண்டிச் சீமை குறித்தும், பாண்டிய மன்னர்கள் குறித்தும் வரலாற்றில் ஆய்வுகள் செய்தவர்கள் யார்?

பாண்டியர் குறித்த ஆய்வுகள்

ஜெர்மன் பேராசிரியர் ஹுல்ஷ், மற்றும் கீல் ஹார்ன் (LORENZ FRANS KIELHORN 31.5 - 1840 - 19.3.1908) ஐகோபி (JACOBI) *(1913)* ராபர்ட் சீவல் (ROBERT SEWELL) *(1915)* எல்.டி. சுவாமிக் கண்ணுப்பிள்ளை *(4.2.1865 - 10.9.1925)* ஆகிய அறிஞர் பெருமக்கள் தென்னக வரலாற்றில் அடிப்படை ஆராய்ச்சியை செய்தனர்.

R. அரிகர மையர்

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தமிழ்ப்புலவர் R. அரிகர மையர் முதன் முதலில் தமிழில் பாண்டியரின் வரலாறு குறித்து 1926 - இல் "பாண்டிய ராஜ வம்ச சரித்திரம்" என்ற நூலை எழுதி மூன்று பாகங்களாக 251 பக்கங்களில் வெளியிட்டார்.

கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி

1926 - இல் சென்னைப் பலகலைக்கழகத்தில் பாண்டியர்கள் குறித்து தான் ஆற்றிய சொற் பொழிவுகளை The Pandyan Kingdom பாண்டியப் பேரரசு என்ற நூலாக *1929* - இல் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த, திருச்சி நேஷனல் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி வெளியிட்டார்.

நா. கனகராஜையர்

பொள்ளாச்சி முனிசிபல் உயர்தர கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் வித்வான்

---

* வி.ரா. இராமச்சந்திர தீட்சிதர், தமிழகமும் சோழரும்(கட்டுரை), ஐயன் பெருமாள் கோனார் தொகுத்த பண்டைத் தமிழர் பண்பாடு, 1951, பக். 98.

நா.கனகராஜையர் 1930இல் "பாண்டிய மன்னர்" என்ற இரு பாகங்களைக் கொண்ட நூலை 266 பக்கங்களில் வெளியிட்டார்.

T.V. சதாசிவப்பண்டாரத்தார்

1940 சூலையில் வரலாற்று அறிஞர் T.V.சதாசிவப்பண்டாரத்தார் (1892 - 1960) பாண்டியர் வரலாறு என்ற நூலை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து பாண்டிய மன்னர்கள் குறித்து சிறு சிறு நூல்கள் தொடர்ந்து தமிழில் வெளிவரத் துவங்கின.

அ.கி.பரந்தாமனுரின் 'தலைசிறந்த பாண்டியமன்னர்கள்' கி.வா.ஜகந்நாதனின் "பாண்டியன் நெடுஞ்செழியன்" எஸ்.வி. வேங்கடராமனின் "பழியஞ்சியபாண்டியர்" 1977இல் கே.வி. இராமனின் "பாண்டியர் வரலாறு" என்று இப்படி பல்வேறு நூல்கள் பாண்டியர் வரலாறு குறித்து தமிழில் தொடர்ந்து வந்துள்ளன: வந்து கொண்டும் இருக்கின்றன.

குடந்தை N.சேதுராமன்

வரலாற்று அறிஞர் குடந்தை N.சேதுராமன், 1978 - இல் The imperial Pandyas, 1980 - இல் Medieval Pandyas, 1989 - இல் பாண்டியர் வரலாறு என்ற நூலையும் வெளியிட்டார். மேலும் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை பாண்டியர் வரலாறு குறித்து எழுதி வெளியிட்டும், தொடர்ந்து எழுதியும் வருகிறார்.

ம. இராசசேகர தங்கமணி

பாண்டியர்களின் வரலாறு குறித்து வரலாற்றாசிரியர் ம. இராசசேகர தங்கமணி 1978 - இல் 'பாண்டிய வரலாறு' என்ற நூலை வெளியிட்டார். 1997இல் க.சண்முகசுந்தரம் எழுதிய சங்க கால பாண்டிய வேந்தர்கள் என்று பாண்டிய மன்னர்களின் வரலாறுகள் குறித்து தொடர்ந்து பல நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இனியும் வெளிவர வேண்டும்; அப்போதுதான் தென்னக வரலாற்றிற்குப் புதிய செய்திகள் கிடைக்கக் கூடும்.

முற்பட்ட பாண்டிய மன்னர்கள்

பாண்டியன் வடிம்பலம்ப நின்றவன், வெள்ளி அம்பலத்துஞ்சியபெரு வழுதி, கூடகாரத்துத் துஞ்சியமாறன் வழுதி, இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன், கீரன்சாத்தன், அறிவுடைநம்பி,

காணப் பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், இளஞ்செழியன், பல்யாக சாலைமுது குடுமிப் பெருவழுதி, ராஜகடுங்கோன், அதிராஜவர்மன் அவனி சூடாமணி, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பூதப்பாண்டியன், அரிகேசரி மாறவர்மன் என்ற கூன்பாண்டியன் கோச்சடையன் இரணதீரன், அரிகேசரிபாரங்குச மாறவர்மன் என்ற முதலாவது இராஜசிம்மன், வேள்விக் குடிச்செப்பேட்டை வரைவித்த நெடுஞ்சடையன் பராந்தகன், இரண்டாவது இராஜசிம்மன், வரகுணமகராஜன், ஸ்ரீ மாறன் ஸ்ரீ வல்லப ஏகவீர பரசக்ரகோலாஹலன், வரகுணவர்மன் பராந்தக வீரநாராயணஉடையன், மூன்றுவது இராஜசிம்மன்சடையன் பராந்தக பாண்டியன், ஆகியோர் முற்பட்ட பாண்டிய மன்னர்கள் ஆவர். *

இடைப்பட்ட பாண்டிய மன்னர்கள்

சோழன் தலை கொண்ட வீரபாண்டியன், அமரபுஜங்கன், ஸ்ரீ வல்லபன், மானுபரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியன், பராக்கிரமபாண்டியன், குலசேகரபாண்டியன், வீரபாண்டியன், விக்கிரமபாண்டியன், ஜடாவர்மன் குலசேகரபாண்டியன், மாறவர்மன் முதலாவது சுந்தரபாண்டியன், இரண்டாவது ஜடாவர்மன் குலசேகரன் மாறவர்மன், இரண்டாவது சுந்தரபாண்டியன் முதலாவது ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் வீரபாண்டின், மாறன் ஸ்ரீ வல்லப பாண்டியன், மாறவர்மன் குலசேகரபாண்டியன், ஜடாவர்மன் இரண்டாவது சுந்தரபாண்டியன், மாறவர்மன் விக்ரமபாண்டியன், ஜடாவர்மன் ஸ்ரீ வல்லப பாண்டியன், வீரபாண்டியன், மாறவர்மன் இரண்டாவது குலசேகர பாண்டியன் ஆகியோர் இடைப்பட்ட பாண்டியர்கள் ஆவர். **

பாண்டியர் உள் நாட்டுப் போர்

இடைக்காலப் பாண்டியரின் காலம் கி.பி. 1000 - 1200 என்று வரையறுப்பர் வரலாற்று அறிஞர் N.சேதுராமன்.

இடைக்காலப் பாண்டியரின் காலத்தில் பாண்டியர்களிடையே உள்நாட்டுப் போர் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. அதனைப்பற்றிய செய்திகள் தமிழக வரலாற்றில் இன்னும் முழுவதுமாகவும், தெளிவாகவும் தெரிவிக்கப்படவில்லை என்பது வரலாற்று ஆசிரியர் பலரின் கருத்தாகும். பாண்டியர்களுக்கிடையே நடைபெற்ற 'உள்நாட்டுப் போர்' குறித்த விஷயத்திற்கு இனி வருவோம்.

---

*R. அரிகரமையர், பாண்டிய ராஜ வம்ச சரித்திரம், முதற் பகுதி, முற்பட்டபாண்டியர், 1926.

**R. அரிகரமையர், பாண்டிய ராஜ வம்ச சரித்திரம், இரண்டாம் பகுதி, பிற்பட்டபாண்டியர், 1926.

பாண்டியரின் தாயாதிச் சண்டைகள்

உலகத்தில் எல்லா அரச குலங்களைவிட வெகு அதிக காலம் வாழ்ந்தது பாண்டியகுலம். கி.மு. 1500 ஆண்டுகளுக்கு முன்னுலே உயர்நிலை பெற்றிருந்ததால் அர்ச்சுனன் பாண்டியகுலக் கன்னியை மணம் புரிந்தான். கி.பி. 1500-க்குப் பின்னுலும் இக்குலமன்னர்கள் மதுரையில் ஆண்டு கொண்டிருந்தார்கள். இவ்வாறு 3000 வருஷங்கள் ஒரே ஊரில் ஒரு இராஜகுலம் வாழ்ந்தது மதுரையில் தவிர வேறெங்கும் நிகழவில்லை. ஆனுல் பாண்டியர்களின் செல்வாக்கு கடலின் அலைபோல் ஒரு பொழுது உயர்ந்ததோங்கியும், மற்றொருபொழுது குறைந்தடங்கியுந்தான் பல காலடிகிடத்திற்று*

ஒரு சமயத்தில் மூவேந்தருள் சேரன் சிறப்புற்றிருந்தான்; மற்றொரு சமயத்தில் சோழன் மேம்பட்டு விளங்கினுன்; வேறொரு சமயத்தில் பாண்டியன் பெருமை பெற்று விளங்கினுன். ஒவ்வொருவனும் மற்ற இரு வரையும் அடக்கி ஆள நினைத்த காலங்களும் உண்டு**

'பன்னிரெண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிந்திய சரித்திரத்திலேயே முக்கியமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. பாண்டிய நாட்டிலே இராஜ குமாரர்களிடையே முப்பது வருடங்களுக்கு மேலாக இரண்டு தலைமுறைகளுக்கு இழுத்துச்சென்ற அப்போர் அந்தக் காலத்தில் தென்னகத்தை ஒரு கலக்குக் கலக்கி விட்டதெனலாம்.

---

* பி.தி. ஸ்ரீ நிவாஸய்யங்கார், கட்டுரைக் கொத்து அல்லது வியாசமஞ்சரி, பக். 56

** மா. இராசமாணிக்கனுர், தமிழக ஆட்சி, 1972, பக். 13,14

பாண்டியரில் இரு சாராரில் ஒருவன் இலங்கை அரசனுடைய உதவியை நாடினன். மற்றொருவன் சோழ மன்னனை அண்டி நின்றான். இவ்விதம் அந்தப் போர் பாண்டியர்களோடு நின்று விடாமல் சோழர்களையும், சிங்களர்களையும் போரில் இழுத்துவிட்டது.

மகா வமிசம்

இந்தத் தாயாதிச் சண்டையின் ஆரம்பப்பகுதி இலங்கைச் சரித்திரமான மகாவமிசத்தில் விரிவாக வர்ணிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசனின் உதவியைப் பராக்கிரமபாண்டியன் வேண்டிக் கொள்வதிலிருந்து அதில் விவரங் கிடைக்கிறது.

பராக்கிரமபாண்டியன்

மதுரையில் பராக்கிரமபாண்டியன் அரசனாக அமர்ந்திருந்தான். திருநெல்வேலியில் குலசேகரன் அரசனாக இருந்தான். இந்த நிலையில் மதுரையைக் கைப்பற்றுவதற்காக குலசேகரன் படையெடுத்து வந்து மதுரை நகரை முற்றுகையிட்டான். வந்த எதிரியைத் துரத்தித் தன் நிலையை ஸ்திரமாக்கிக் கொள்ளுவதற்கு வேண்டிய பலம் கிட்டாத பராக்கிரமன் "எனது எதிரியின் நெருப்பிலே வதைப்படும் புழுவாகிய நான் உங்களின் இரு கால்களையும் வணங்கி அடைக்கலம் கோருகிறேன்" என்று இலங்கை மன்னனை பராக்கிரமபாகுவை வேண்டிக் கொண்டான்.

பராக்கிரமபாகு

இலங்கைவேந்தன் தனது சேனாதிபதி லங்காபுர தண்டநாயகன் தலைமையில் ஒரு படையை அனுப்பிவைத்தான். ஆனால் சிங்களப்படை தமிழ்நாட்டை அடைவதற்கு முன் குலசேகரன் மதுரையைக் கைப்பற்றிக் கொண்டான். அதோடு பராக்கிரமனும், அவனது மனைவி, மக்கள் ஆகியோரைத் திருமலக்கே என்னுமிடத்தில் படுகொலையும் செய்துவிட்டான். இதனைக் கேள்வியுற்ற பராக்கிரமபாகு, குலசேகரனிடமிருந்து மதுரை அரசைத் திரும்பவும் மீட்டுப் பராக்கிரமனின்வமிசத்து அரச குமாரன் ஒருவன் வசம் அளிக்கப்படும் வரைப் போரைத் தொடர்ந்து நடத்திட உத்திரவிட்டான்.

போரின் உக்கிரம்

லங்காபுரனின் உதவிக்காக மேலும் படைகள் இலங்கையிலிருந்து தண்ட நாயகன் ஜகத் விஜயன் தலைமையில் அனுப்பப்பட்டன. குலசேகரன் மூச்சைப் பிடித்துக் கொண்டு இலங்காபரனை எதிர்த்துப் போரிட்டான். லங்காபுரன் கையில் சிக்கிய வீரர்கள் கொல்லப்பட்டார்கள்; அல்லது தமிழர்கள் இலங்கையை ஆண்ட நாளில் சேதமுற்ற புத்த விஹாரங்களைப் புதுப்பிக்கும் திருப்பணிக்காகக் கூலிகளாக அனுப்பப்பட்டார்கள்.

வீரபாண்டியன்

குலசேகரன் செய்த படுகொலையிலிருந்து தப்பிச் சென்ற பராக்கிரம பாண்டியனுடைய மகன் வீரபாண்டியன் மலய நாட்டில் வசிப்பதை அறிந்த லங்காபுர தண்ட நாயகன் அவனை வரவழைத்து, குலசேகரனை ராஜ்யத்திலிருந்து விரட்டிவிட்டு, வீரபாண்டியனை அரசனுக முடிசூட்டி வைத்தான்.

மீண்டும் குலசேகரன்

இந்நிலையிலும் தனது உரிமையை விட்டுவிட விரும்பாத குலசேகரன் தனது படைகளைச் சேர்த்துக் கொண்டு போரில் இறங்கினன். **படைபடையாக அடுத்தடுத்துப் போர்க்களத்தில் குலசேகரன் குவித்தான். மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலும் அவற்றை அடுத்த புதுக்கோட்டை, திருநெல்வேலிப் பகுதிகளிலும் ஒரு கடுமையான போர் மூண்டது** என்பதையும், பாளையக்காரர்கள் முதலிய தமிழ்நாட்டுக் குறுநில மன்னர்கள் அடிக்கடி கட்சிமாறினர் என்பதையும் பார்க்கும் போது குலசேகரனுக்குத்தான் பாண்டிய நாட்டில் அதிக ஆதரவு இருந்தது.*

'**பாண்டிய நாட்டு மக்களும் தலைவர்களும் குலசேகரனைப் பெரிதும் மதித்துப் பாராட்டியதுடன் அவன் பக்கமே சேர்வாராயினர்.** ஆகவே குலசேகரனும் அத்தலைவர்களும் சேர்ந்து நடத்திய போரில் வீரபாண்டியனை வென்று மதுரையிலிருந்து துரத்திவிட்டனர்.**

---

* K.A. நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள் புத்தகம் I, 1989, பக். 503.

** K.K. Pillay, South India and Srilanka, 1975, P. 94

மீண்டும் வீரபாண்டியன்

தான் எண்ணியது போல் குலசேகரனை முற்றிலுமாக வெற்றி கொள்வது என்பது அவ்வளவு எளிதில்லை என்பதைக் கண்டு கொண்ட இலங்காபுரித்தண்ட நாயகன் மேலும் படைத்துணை அனுப்புமாறு பராக்கிரமபாகுவுக்குச் செய்தி அனுப்பினுன். அம்மன்னனும் ஜகத் விஜய தண்டநாயகன் தலைமையில் பெரும்படை ஒன்றை அனுப்பினுன். இந்த இரு பெருந் தண்ட நாயகரும் சேர்ந்து குலசேகரனை வென்று வீரபாண்டியனை மீண்டும் அரசனுக்கி முடிசூட்டு விழாவும் எடுப்பித்தனர். *

பாண்டு விஜயகம்

மதுரையை விட்டு குலசேகரனை வெளியேற்றி, வீரபாண்டியனுக்கு சிங்கள படைத்தலைவர்களான இலங்காபுர தண்ட நாயகனும் ஜகத் விஜயனும் (சோழ சாசனங்களில் ஜயத் ரதன் என்று குறிப்பிடப்படுபவர்) முடிசூட்டி வைத்தனர் பராக்கிரமபாகு இந்த வெற்றியின் நினைவாக பாண்டு விஜயகம் (Pandu Vijaya) என்ற பெயரில் ஒரு நகரை நிர்மாணித்து விழாக் கொண்டாடினுன். அதோடு மகாவமிசத்தில் காணப்படும் விபரம் முடிவடைகிறது.**

எழும் கேள்விகள்

மகாவமிசத்தை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்த ஆசிரியர் இந்த சரித்திரத்திற்குப் பின் ஒரு குறிப்பைத் தருகிருர். அதில் திடுதிப்பென்று இந்த வரலாறு முடிந்துவிட்டது. குலசேகரன் என்ன ஆனுன் என்பதும் தெரியவில்லை. குலசேகரன் - சோழர்களிடம் கூட்டுச் சேர்ந்தது என்ன ஆயிற்று? வெற்றி பெற்ற வீரபாண்டியன் தன்னுடைய ஆட்சியை நிலை நிறுத்திக் கொண்டானு? குலசேகரன் போரிலே மடியவில்லை; ஆதலால் அவன் தனது எதிரியை சமாதானத்தோடு விட்டு வைத்திருந்தானு? லங்காபுரனின் பிற்கால கதி என்ன ஆயிற்று? அவன் இலங்கைக்குத் திரும்பியதாக சொல்லப்படாதது வியப்பாகவே இருக்கிறது. எனவே இந்த வரலாற்றை எழுதியவர் பராக்கிரமபாகுவின் முதல் வெற்றிக்குப் பின்னுல் அடைந்த தோல்விகளை மறைத்திருப்பார் என்று தெரிகிறது.

---

* முற்கூறிய நூல்.

** CULAVAMSA Being the more Recent Part of the Mahavamsa Translated by Wilhelm Geiger and from the German in to English by C.Mabel Rickmors in Two Parts, Part II, 1992, P. 64 - 100.

It is Pretty clear that the chronicler has concealed the failure which overtook the expedition after its initial success. *

சோழ சாசனங்கள்

பாண்டியரின் தாயாதிச் சண்டையின் முற்பகுதிக்குப் பின்னல் நடந்தவைகளைத் தெரிந்து கொள்ள சோழர் சாசனங்கள் பயன்படுகின்றன. ஆர்ப்பாக்கக் கல்வெட்டு, பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு, வடதிருவாலங் காட்டுக் கல்வெட்டு, திருக்கடவூர் மாயனக் கல்வெட்டு, திருக்கடவூரில் சற்றுப் பிந்திய கல் வெட்டு ஆகியவை, பாண்டிய நாட்டுப் போரின் பிற்பகுதி வரலாற்றைக் கூறுகின்றன. **

குலசேகரபாண்டியன்

இலங்கைப் படையினரால் மதுரையிலிருந்து விரட்டப்பட்ட குலசேகரபாண்டியன் சோழ நாட்டில் தஞ்சம் புகுந்தான்; பாண்டிய அரசுரிமையை மீண்டும் பெற சோழ மன்னனின் உதவியை நாடினுன்.

இலங்கைப் படையினர் வெற்றிமேல் வெற்றி கொண்டு, பாண்டிய நாட்டின் எல்லையில் இருந்த சோழப்படைகளையும், தளபதிகளையும் துரத்தியது. மேலும் இலங்கைப் படைகள் சோழ ராஜ்யத்திற்கு உள்ளும் படையெடுத்து வரக் கூடிய நிலையும் உருவாகியது.*** இரண்டாம் இராசராசன் இராசாதிராசன் நிலைமையை உணர்ந்தான். பாண்டிய நாட்டிற்கு படையெடுத்துச் சென்று இலங்கைப் படையினரை எதிர்த்து முறியடிக்கத்திட்டம் தீட்டிச் செயலாற்றினுன்.

பெருமான் நம்பிப்பல்லவரையன்

திருச்சிற்றம்பலமுடையபெருமான் நம்பிப்பல்லவரையன் தலைமையில் சோழன் பெரும்படையை பாண்டிய மண்டலத்திற்கு அனுப்பிவைத்தான். அவனுக்கு உதவியாகச் சென்ற மற்றொரு தலைவன் நரசிங்கவர்மராயன். திருக்கானப்பேரி, தொண்டி, பாசிபொன் அமராவதி, மணமேற்குடி, மஞ்சக்குடி என்னும் இடங்களில்

---

* I bid, P. 100.

** கே.கே. பிள்ளை, சோழர் வரலாறு, 1977, பக். 367 - 368.

*** N. சேதுராமன், அருளுடைச் சோழமண்டலம், 1976, பக். 157.

போர் நடந்தது. இறுதியில் இலங்கைப் படை தோற்று ஒழிந்தது. குலசேகரன் அரியணை ஏறி அரசாளத் தொடங்கினான். *

குலசேகரனின் மனமாற்றம்

குலசேகரபாண்டியனை சோழப்படைகள் திரும்பவும் மன்னனாக்கிய வேளையில் இலங்கைத் தளபதிகள் கொல்லப்பட்டு, அவர்களது தலைகள் மதுரைக் கோட்டை வாயிலில் வைக்கப்பட்டது. ஆனால் மதுரையில் அரியணை ஏறிய குலசேகர பாண்டியன் சோழர்கள் செய்த உதவியை மறந்து இலங்கை மன்னன் பராக்கிரமபாகுவுடன் தொடர்பு கொண்டான். பராக்கிரமபாகு குலசேகரனுக்கு அனுப்பிய பரிசுப் பொருள்களையும் கடிதங்களையும் பல்லவராயன் கைப்பற்றிய போது குலசேகரனுடைய துரோகம் வெளியாயிற்று. **

ஸ்ரீவல்லபன்

இலங்கை மன்னன் பராக்கிரமபாகுவின் சகோதரியை மணந்த மானாபரணனின் மகனான ஸ்ரீவல்லபன் இலங்கை அரசுக்கு உரிமை கொண்டாடினான். இலங்கை அரசனை எதிர்த்திட காலத்தை எதிர்பார்த்திருந்த சோழமன்னன் ஸ்ரீவல்லபனைத் தனது பக்கம் சேர்த்துக் கொண்டான். சோழர் படையும், ஸ்ரீவல்லபனின் படையும் இலங்கையில் புகுந்து பலபகுதிகளை தீக்கிரையாக்கி அழித்தது.

திரும்பவும் வீரபாண்டியன்

சோழர்களின் படைத் தளபதியான அண்ணன் பல்லவரையன் மதுரை மீது படையெடுத்தான். நன்றி மறந்த குலசேகரனை மதுரையிலிருந்து நீக்கி வீரபாண்டியனை அரியணையில் அமர்த்தினான். ***

---

* மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, 1959 மூன்றும் பாகம், பக். 69 - 70.

** K.A. Nilakanta Sastri, A History of South India, 1976, P. 195.

*** N. சேதுராமன், பாண்டிய வரலாறு , 1989, பக். 63.

தொடரும் ஆட்சி மாற்றங்கள்

தோல்விகளால் தளர்ச்சி அடையாத பராக்கிரமபாகு சோழர்களை எதிர்ப்பதில் மீண்டும் முனைந்தான். தன்னுடன் சேர்ந்து சோழர்களை எதிர்ப்பதற்கு பாண்டிய மன்னன் வீரபாண்டியனை இசைய வைத்தான். வீரபாண்டியனும் சோழர்கள் செய்த உதவிகளை மறந்து விட்டு இலங்கை மன்னனின் அணியில் சேர்ந்து கொண்டான்.

இந்த வேளையில் குலசேகரபாண்டியன் இறந்து விட்டான். அவனது உறவினரான விக்கிரமபாண்டியன், வீரபாண்டியனுக்கு எதிராக சோழ மன்னன் குலோத்துங்கனுடைய துணையை நாடினான்.

விக்கிரமபாண்டியன்

சோழப்படை விக்கிரமபாண்டியனுக்கு ஆதரவாக படையெடுத்துச் சென்றது. பாண்டியர் படைகள் தோற்கடிக்கப்பட்டன. வீரபாண்டியன் நாட்டை விட்டு ஓடினான். விக்கிரமபாண்டியன் அரியணையில் அமர்த்தப்பட்டான். * இந்நிகழ்ச்சியை குலோத்துங்கனது சிதம்பரம் கல்வெட்டுயாண்டு 9 நாள் 88 மெய்கீர்த்தியில் தெளிவாகத் தெரிவிக்கிறது.

நெட்டூர் போர்

தோற்று ஓடிய வீரபாண்டியன் திரும்பவும் படைகளைத் திரட்டிக்கொண்டு வந்து நெட்டூரில் விக்கிரமபாண்டியனை எதிர்த்தான்.

விக்கிரமபாண்டியனுக்கு ஆதரவாகப் போரிட்ட சோழன் குலோத்துங்கன் நெட்டூரில் வீரபாண்டியனைத் தோற்கடித்தான். விக்கிரமபாண்டியனே தொடர்ந்து மதுரையில் ஆட்சி புரிந்தான். இது குலோத்துங்கனின் சிதம்பரம் கல்வெட்டுயாண்டு 11 நாள் 118 மெய்கீர்த்தியில் சொல்லப்பட்டிருக்கிறது.

வீரபாண்டியனின் மறைவு

வீரபாண்டியன் மீண்டும் படையெடுத்தான். கேரள மன்னனுடன் சேர்ந்து

---

* கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென்இந்திய வரலாறு, தமிழாக்கம். மு.ரா. பெருமாள் முதலியார் முதல் பகுதி, 1973, பக். 306.

கொண்டு குலோத்துங்கனை எதிர்த்துப் போரிட்டான். அப்போது நடைபெற்ற போரில் வீரபாண்டியனைக் குலோத்துங்கன் கொன்றுன். கேரள மன்னனும் தோற்று, மன்னிப்பு பெற்றுச் சென்றுன்.

தாராசுரத்தில் கிடைத்த குலோத்துங்கனின் கல்வெட்டு இதனை அறிவிக்கிறது; குகையூர் கல்வெட்டும் உறுதி செய்கிறது.

விக்கிரமபாண்டியன் மறைவு

மூன்றும் குலோத்துங்க சோழன் கி.பி.1178 முதல் 1218 வரை அரசாண்டவன். அவனது காலத்தில் பாண்டியர்கள் சோழர்களுக்கு திறை செலுத்தி வந்தனர். கி.பி 1190 - இல் விக்கிரமபாண்டியன் விண்ணுலகை எய்தினான். *

அவனது மகஞன சடையவர்மன் குலசேகரபாண்டியன் கி.பி. 1190 - இல் முடிசூடினுன். ** இவன் சோழமன்னருக்கு திறை கொடுக்க மறுத்தான். எனவே குலோத்துங்க சோழன் மதுரை மீது படையெடுத்தான். இப்படையெடுப்பால் மதுரை நகர் பெரிதும் அழிவிற்கு உள்ளாக்கியது. *** போரில் வெற்றி பெற்ற சோழன் மதுரை நகருக்கு "முடித்தலை கொண்ட சோழபுரம்" என்ற பெயரையும் சூட்டினுன். சேர, பாண்டிய நாடுகளை வென்றதால் "திரிபுவன வீரதேவன்" எனவும் சோழன் மூன்றும் குலோத்துங்கன் போற்றப்பட்டான். ****

இவ்வாறு பாண்டியரின் தாயாதிச் சண்டை நடந்து முடிந்தது. இந்த தாயாதிச் சண்டையில் சுல்தான் சையிது இபுராஹீம் ஷஹீது வலியின் பங்கு குறித்து பாரசீக 'ஷஹாதத் நாமா' என்ற நூல் தெரிவிக்கும் செய்திகள் எவை? அது தென்னக வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறதா?

---

* அ. கிருஷ்ணசாமி, தென்னிந்திய வரலாறு, 1977, பக் 100.

** N. சேதுராமன், பாண்டியர் வரலாறு, பக் 73.

*** மேலது, பக் 91.

**** பா. இறையரசன், தமிழ்நாட்டு வரலாறு, 1983, பக் 228.

ஷஹாதத் நாமா

அகிலத்தில் நிலைத்து நிற்க வேண்டிய அரிய செய்திகள் பல அனைவராலும் அறியப் படாமலேயே அழிந்து போய்விட்டன. பல்வேறு விஷயங்கள் மக்களின் பார்வைக்கு வராமலேயே அழிந்து கொண்டும் இருக்கின்றன. பல விஷயங்கள் உலகிற்குத் தெரியாமலேயே போய் விடட்டும் என்று அமுக்கப்பட்டும் அல்லது மறைக்கப்பட்டும் காரியங்கள் நடைபெறுகின்றன. சில செய்திகளை அறிவித்திட வாய்ப்பு இல்லாதும் போய் விடுகின்றன. இன்னும் சில செய்திகளை வெளிக்கொண்டு வர முயற்சிகள் இல்லாதும் போய் விடுகின்றன.

வற்றாத ஜீவநதி வரலாறு

வற்றாத ஜீவநதியான வரலாற்றின் வளமை மிக்க பக்கங்கள் பலவற்றை கடற்கோள்கள் கொள்ளை கொண்டு போய்விட்டன. சரித்திரத்தின் சிறப்பை அறியாதவர்களாகவும், உணராதவர்களாகவும் நம் முன்னோர்கள் வாழ்ந்து மறைந்தனர். சிறப்பு மிக்க வரலாற்றுச் செய்திகளை முறையாகச் சேகரித்து வைத்திடாமலும், பேணிப் பாதுகாத்திடாமலும் அவர்கள் சென்று விட்டதால் பின் சந்ததியினரின் சிந்தைக்கு வராமலேயே பல்வேறு செய்திகள் மறைந்தே விட்டன. குறிப்பாக தமிழகத்தின் வரலாற்றில் இந்தக் கொடுமை மிக அதிகமாகவே நடந்து முடிந்து விட்டது.

நம் முன்னோர்களுக்குச் சரித்திர உணர்ச்சி கிடையாது என்ற பழிச் சொல் இருந்து வருகிறது. ஆனால் நாம் இப்போது விரும்பும் முறையில் நாட்டுச்சரித்திரத்தை நம்முன்னோர்கள் எழுதி வைத்துச் செல்லவில்லை என்பது உண்மைதான். ஆனால் அவர்களுக்குச் சரித்திர உணர்ச்சி இல்லையென்றோ, சரித்திரங்களை அவர்கள் எழுதிவைக்கவே இல்லையென்றோ கூறமுடியாது; கூறுவதும் தவறாகும்.

முன்னோர்களின் சரித்திர உணர்வு

நாம் இக்காலத்தில் கொண்டிருக்கும் மனப்பான்மைக்கும், நம்முன்னோர்கள் பெற்றிருந்த மனப்பான்மைக்கும் மிகுந்து வேறுபாடுகள் உண்டு. அவர்கள் தங்கள் மனத்திற்கு இசைந்தவாறு சரித்திரத்தை எழுதி வைத்தே சென்றிருக்கிறார்கள்.

நமது முன்னோர்கள் சரித்திரத்தையும், காலமுறையையும் இப்போது நாம்

கருதுவதைப் போன்று மதிப்பிடவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு இறைபக்தியும், காவியரசனைகளுமே முக்கியமானவைகளாகத் தோன்றிருக்கக்கூடும். எனவே அவர்கள் காவிய நாடகங்களையும், புராணங்களையும் அதிகமாக எழுதி வைத்துச் சென்றிருக்கக்கூடும்.

புராணங்களும் வரலாறும்

அன்றைய காலகட்டத்தில் அவைகள் தாம் பொதுமக்களுக்கு மிகவும் உபயோகப்படக்கூடியதாக இருந்திருக்கக்கூடும். அவர்களின் மனத்தை நல் வழியில் திருப்பக் கூடியவையாக அவைகள் அமைந்திருக்கக்கூடும்.

நம்முன்னோர்கள் சரித்திரங்களை புராணங்களாகவே எழுதிச் சென்றனர். (அதில் பல இடைச் செருகல்களும் திருத்தங்களும் பின்னாளில் நுழைந்திருக்கவும் செய்கின்றன) பல வேளைகளில் புராணங்களில் காணப்படும் செய்திகளைக் கொண்டே வரலாற்றின் முடிவுகளை வரையறுக்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

மிகச் சிறந்த இலக்கியங்களையும், உரைகளையும் படைத்திட்ட பழந்தமிழர்கள் தங்களின் வரலாற்று நிகழ்ச்சிகளை முறையாகத் தொகுத்து வைத்திடாமற் சென்றதை எண்ணுகிறபோது வியப்பினும் வியப்பாகவே இருக்கிறது. இதனால் தென்னக வரலாற்றை எழுதுவதில் சரித்திர ஆசிரியர்கள் சிரமத்திற்குள்ளாயினர்.

உருவாக்கப்பட்ட தென்னக வரலாறு

பழந்தமிழரின் புதை பொருட் சின்னங்கள், இலக்கியக் குறிப்புக்கள், அயல்நாட்டு வரலாறுகளில் காண்ப்படும் செய்திகள், புராணங்கள், சமய இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், சிற்பங்கள், நாணயங்கள், ஓவியங்கள், அயல் நாட்டுயாத்திரிகர்களின் குறிப்புகள், கடிதங்கள், ஆவணங்கள், அறிக்கைகள், நாட்குறிப்புகள் போன்றவைகளின் உறுதுணையோடு சரித்திர ஆய்வாளர்களால் தென்னக வரலாறு உருவாக்கப்பட்டது.

இவ்வாறு தென்னக வரலாறு உருவாக்கப் படுகிறபோது அதில் சில சிரமங்களும் எழுந்திடத்தான் செய்தது.

கர்னல் மெக்கன்ஸி

சென்ற நூற்றுண்டின் துவக்கத்தில் கர்னல் மெக்கென்ஸி (Mackenzie) என்பவர் நமது நாட்டுச் சரித்திரத்தை ஆராய்ந்து எழுதவேண்டும் என்னும் நோக்கத்துடன் அதற்குத் தேவையான ஆதாரங்களைத் தேடிச் சேகரிக்கத் திட்டமிட்டார்; பின்னர் அதற்காகப் பல உதவியாளர்களையும் நியமித்தார். அவர்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்றனர். அங்கங்கே கிடைத்த பழைய நூல்களையும், கர்ணபரம்பரைச்செய்திகளையும், ஸ்தலபுராணங்களையும், நாட்டுச் சரித்திரங்களையும் வயது முதிர்ந்தவர்களிடம் தகவல்களையும் அவர்கள் பெற்றனர். கோயிற் சுவர்களில் இருந்து பெயர்த்தெழுதிய கல்வெட்டுக்கள், செப்பேட்டுப் பிரதிகள், சில்லறைப் பிரபந்தங்கள் நாட்டுப் பாடல்கள் முதலியனவற்றையும் பெற்றனர். இவைகளையெல்லாம் சேகரித்த கர்னல் மெக்கன்ஸி அதனை உபயோகப்படுத்திட முன்வரவில்லை. அவைகள் இன்னும் முழுமையாக ஆராயப்படவுமில்லை.

பிஷப் கால்டுவெல்

கி.பி. 1835 - இல் டெயிலர் என்பவர் மெக்கன்ஸி சேகரித்து வைத்திருந்த சிலவற்றை ஆராய்ந்து 'ஓரியண்டல் ஹிஸ்டாரிகல் மானுஸ்கிருப்ட்ஸ்' (Taylor's Historical Manuscripts) என்ற பெயரில் வெளியிட்டார்.

இருந்தபோதிலும் மெக்கன்ஸி சேகரித்துவைத்திருந்த நூல்களை ஆராய்ந்த சரித்திர ஆசிரியர்கள் அவற்றைப் புராணக்கதைகள் என்றும், சரித்திர ஆதாரமாகக் கொள்ள இயலாதவை என்றும் ஒதுக்கிவிட்டனர். இவைகள் கர்ணபரம்பரைச் செய்திகளை விட மிகவும் மட்டமானது; கட்டுக்கதைகள்; ஆதாரமானவை அல்ல. * என்று கால்டுவெல் போன்ற அறிஞர்களும் அப்போது கருதினர்.

தி.நா. சுப்பிரமணியம்

அக்காலத்தில் நம் நாட்டுப் பூர்வீக சரித்திரத்தைப் பற்றிய ஆராய்ச்சி ஆரம்பப் பருவத்திலேயே இருந்தது; முன்னேற்றம் அடையவில்லை. அதை நடத்தி வந்த ஆராய்ச்சியாளர்களுக்கும் நம் நாட்டுக் கலைச் செல்வம், மனப்பான்மை

---

* Bishop. R. Caldwell, A History of Tinnevelly, 1881, Madras, P. 55

ஆகியவைகளின் அடிப்படைத் தத்துவம் தெரியாது. மேலை நாடுகளில் உள்ள சரித்திர நூல்களுடன் இவற்றை ஒப்பிட்டே அந்த விதமான முடிவுக்கு வந்தனர் அது மிகவும் தவறு என்று பின்னுளில் வந்த தி.நா.சுப்பிரமணியம் போன்றோர் அதனை மறுத்தனர்.* இதில் உண்மை நிலை என்ன?

மஞ்சு ஸ்ரீ மூலகல்பம்

கி.மு. 700 முதல் கி.பி. 770 வரையில் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்குரிய இந்த நாட்டின் சரித்திரம் ' மஞ்சு ஸ்ரீமூலகல்பம்' என்னும் புத்தமத நூலில் காணப்படுகிறது.

' சமஸ்கிருதத்தில்' எழுதப்பெற்ற அந்த நூலுக்குத் ' திபெத்திய' மொழியில் மொழிபெயர்ப்பும் இருக்கிறது

காசிப் பிரசாத ஜயஸ்வால்

சமஸ்கிருத மூலத்தையும், திபெத்திய மொழி பெயர்ப்பையும் ஒப்பிட்டுப் பார்த்த காசிப் பிரசாத ஜயஸ்வால் என்ற வரலாற்று அறிஞர் 'ஆன் இம்பீரியல் ஹிஸ்டரி ஆப் இந்தியா' (இந்தியப் பேரரசின் வரலாறு) என்ற பெயரில் நூலொன்றை வெளியிட்டார்.

ராஜ த ரங்கிணி

காஷ்மீர் தேசத்தின் சரித்திரத்தைக் கூறுவது 'ராஜ தரங்கிணி' என்ற நூல். இது கி.பி. 1148 - 1149- ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்டது. சேஷமேந்திரர் எழுதிய நிருபாவலி, ஹேலாராஜர் என்பவர் 12000 செய்யுள்களில் எழுதிய பார்த்திவா வலி, நீலமுனி எழுதிய நீலமதபுராணம் மற்றும் ஸுவ்ருதர், பத்மமிஹிரர் ஆகியோர் இது குறித்து எழுதிய நூல்களும் இருந்தது. எனினும் இவைகளில் காணப்பட்ட குறைகளை நீக்கி உண்மைச் சரித்திரத்தை இராஜதரங்கிணியில் எழுதியதாக 'கல்ஹணர்' குறிப்பிடுகிறுர்.

பதினெரு ராஜ கதைகளையும், நீலமத புராணத்தையும், முதிர்ந்தோர் வாய்மொழிகளையும், சுவடிகளையும் ஆராய்ந்து கல்ஹணர் எழுதிய இராஜதரங்கினியைப் போன்ற சரித்திரங்களும் தமிழ்நாட்டில் இருக்கத்தான் செய்கின்றன.

---

* தென்னிந்திய கோயிற் சாசனங்கள், பாகம் 3, பகுதி, 2, 1957, பக் உருச (254)

கர்நாடக தேசராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம்

'கொங்கு தேசராஜாக்கள்', 'மதுரைத்தல வரலாறு', 'தஞ்சாவூரி ஆந்த்ர ராஜுலுசரித்திரமு' (தெலுங்கு) 'கர்நாடக தேச ராஜாக்கள் சவிஸ்தார சரித்திரம்' போன்ற நூல்கள் அத்தகையது. இவைகளின் உதவியோடு தான் தமிழகத்தின் கி.பி. 15,16,17வது நூற்றாண்டுகளின் சரித்திரத்தை எழுதிட முடிந்தது என்பதை ஆய்வாளர்கள் அறிவர்.

நாட்டின் பலபாகங்களையும் ஆண்டு வந்த சிற்றரசர்கள் ஆகியோர்களுடைய சரித்திரங்களுக்கும் அவற்றைத் தவிர வேறு வகை ஆதாரங்கள் கிடையவே கிடையாது என்பார் தி.நா. சுப்பிரமணியம். *

பேராசிரியர் ஆர். சத்தியநாத ஐயர்

மதுரை நாயக்கமன்னர்களது சரித்திரத்தை 403 பக்கங்களில் எழுதி வெளியிட்ட பேராசிரியர் ஆர். சத்தியநாத ஐயர், 'இத்தகைய நூல்களை நடுநிலைமையோடு ஒப்பிட்டு ஆராய்ந்து கண்ட முடிவே வரலாறு எழுதுவதற்கு முக்கிய ஆதாரமாக அமைந்தது' ** என்றும் தெரிவித்திருக்கிறுர்.

க.அ. நீலகண்ட சாஸ்திரி

. பிற்காலத்தில் தொகுக்கப்பட்ட காலவழிச் செய்திக் கோவைகளும், தலபுராணங்களும் நாட்டில் ஏராளமாகக் கிடைக்கின்றன. .வீரசைவர் ஒருவரால் தொகுக்கப்பட்ட நவ சோழசரிதம் தெலுங்கு, கன்னட மொழிகளில் உள்ளது. வடமொழியிலுள்ள .பிரகதீசுவர மகாத்மியம்., அல்லது .சோழ வமிச சரித்திரம். மெகன்சி கையெழுத்துப் பிரதித் தொகுப்பில் காணப்படும் அதன் தமிழாக்கம், கொங்குதேச இராசாக்கள் போன்றவை இவ்வகையைச் சார்ந்த தலை சிறந்த உதாரணங்களாகும். என்று பேராசிரியர் க.அ. நீலகண்ட சாஸ்திரி தெரிவித்துள்ளார்.***

---

* முற்கூறிய நூல், பக் 254.

** R. Sathyanatha Aiyar, History of the Nayaks of Madura, 1924, P. 33

*** K.A. Nilakanta Sastri, The Cōlas, 1984, P. 14.

ஓரியண்டல் மானுஸ்கிரிப்ட்ஸ் லைப்ரரி

'கொங்கண தேச ராஜுல் வ்ருத்தாந்தமு' என்னும் தெலுங்கு நூல் ஓரியண்டல் மானுஸ்கிரிப்ட்ஸ் லைப்ரரியில் உள்ளது. ஒரிஸ்ஸா தேசத்தை ஆண்டு வந்த கீழைக் கங்க வமிசத்து மன்னர்களின் வரலாற்றைக் கூறும் வாஸீதேவரத ஸோமயாஜி என்பவரால் எழுதப்பட்டது 'கங்க வம்சாங சரித்திரம்' எனும் நூலும் இங்கு இருக்கிறது.

சரித்திரமாக இல்லாது இலக்கியச் சுவை பெற்ற காவியமாகக் காணப்படும் இந்த நூலைப் போன்று, பாரசீக மொழியில், வாலாஜா நவாபுகளின் சரித்திரத்தைக் கூறும் 'துஸ்கத்இ வாலாஜாஹீ' என்று நூலும், 'சாதத் நாமா' போன்ற நூல்களும் இருக்கின்றன.

ஷஹீது சரிதை

பல நூற்றுண்டுகளுக்கு முன் பிரபல சரித்திராசிரியர் அப்பாஸ் பின் அப்துல்லா என்பவரால் வரையப் பெற்ற பார்ஸீ கிரந்தமான 'ஷஹாதத் நாமா' எனும் கையேட்டுப் பிரதியினை, ஏர்வாடி தர்ஹா ஷரீபு மு.வா.வ. சய்யிது இபுருஹிம் லெப்பை ஆலிம் சாஹிபு கி.பி. 1953 - இல் தமிழில் முதன்முறையாக 'ஷஹீது சரிதை' என்ற தமிழ் நூலாக அதனை மொழி பெயர்த்தார்கள்.

இராமநாதபுரம் ஜில்லா ஏர்வாடி மாநகரில் ஷஹீதாயிருக்கும்* (இறைவனின் பாதையில் போரிட்டு மறைந்தவர்) அல்கௌதுல் அஃலம் வல்குத் புல் அக்ரம் வசுல் தானுஸ் சிந்து, வல்ஹிந்து, சய்யிதுனு சய்யிது இபுருஹீம் ஷஹீது வலிய்யுல்லாஹ் அன்னவர்களின் உண்மையான வாழ்க்கை வரலாறுகளைக் கொண்ட பூரண ஜீவிய சரிதை தான் ' ஷஹாதத் நாமா' ஆகும்.

தமிழக வரலாற்றில் 'ஷஹாதத் நாமா' வைப் பற்றிய குறிப்புகள் எங்கேனும் காணப்படுகின்றதா? எந்த சரித்திர ஆசிரியராவது அதனை மேற்கோள் காட்டியிருக்கிறுர்களா? என்று எனது ஆய்வைத் தொடர்ந்தேன்.

தென்னிந்திய கோயிற் சாசனங்கள்

அன்றைய சென்னை அரசாங்கத்தின் வெளியீடாக 1957 -இல் வெளிவந்த தென்னிந்திய கோயிற் சாசனங்கள் பாகம் 3, பகுதி 2 இல், பக்கம் 255 (உருரு) இல் .சாதத் நாமா. போன்ற நாட்டுச் சரித்திரக்கதை நூல்கள் பாரசீக மொழியாலும் இருக்கின்றன என்ற குறிப்பைப் பார்த்தேன்.

எஸ். ஏ. க்யூ. ஹுஸைனி

கல்கத்தா பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய டாக்டர் எஸ்.ஏ.க்யூ. ஹுஸைனி அவர்கள் 1962 -இல் காரைக்குடி செல்வி பதிப்பகம் சார்பில் கல்கத்தாவில் அச்சிட்டு பாண்டிய நாட்டு வரலாற்றை ஆங்கிலத்தில் வெளியிட்டார்கள். 192 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் 47 முதல் 49 வது பக்கங்கள் வரை இராமநாதபுரம் ஏர்வாடியில் அடக்கஸ்தலம் பெற்றுள்ள சுல்தான் சையது இபுருகீம் அவர்களின் தமிழக ஆட்சியைப் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுகிறுர்கள்.

According to the Manaqib of Ibrahimu' sh-shahid, composed by a scholar of Kilakkarai from older works, which he has not acknowledged by name, one Sayyid Ibrahim bin Ahmad bin 'Abdi' l - Ghafur' *

கீழக்கரையைச் சேர்ந்த அல் ஆலிமுல் .பைளுள் மஜீத்ஃபீ மனுக்கி பி இப்ராஹீமிஷ் ஷஹீத். எனும் மௌலிது நூலினை ஆதாரமாகக் கொண்டு ஹீசைனி இந்த வரலாற்றைத் தெரிவிக்கிறுர்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு

மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் 1986-இல் வெளியிட்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு நூலில் ம.முகம்மது உவைஸ், பீ.மு. அஜ்மல்கான் ஆகியோர் பக். 18, 19, 20 -இல் சுல்தான் சையது இபுருகீம் ஒலி அவர்களின் வரலாற்றுச் செய்திகளைத் தெரிவித்திருக்கின்றனர்.

டாக்டர். S.M. கமால்

'முஸ்லிம்களும் தமிழகமும்' என்ற ஆய்வு நூலை கி.பி.1990-இல் டாக்டர் S.M. கமால் வெளியிட்டார்கள். அதில் பக்கம் 67, 68, 69 களில் இஸ்லாமியப் பிரச்சாரகரான புனித ஸையது இபுருகீம் (ஷஹீது) அவர்களைப் பற்றி டாக்டர் ஹீசைனியின் பாண்டிய வரலாற்று நூலையும், முகமது இப்ராஹிம் லெப்பையின் 'ஷஹீது சரிதை' நூலையும், மேற்கோள் காட்டி தெரிவித்திருக்கிறுர்.

---

* Dr. S.A.Q. Husaini, The History of the Pandya Country, 1962, P.48.

தீன் விளக்கம்

தமிழ்நாட்டில் நடைபெற்ற புனித ஸையது இபுராஹீம் (ஷஹீது) அவர்களின் ஆட்சியைப் பற்றியும், அவர்களது இஸ்லாமிய மார்க்கப் பிரச்சாரத்தைப் பற்றியும் பாரசீக மொழியில் எழுதப்பட்ட 'ஷஹாதத் நாமா' வையும், அதன் தமிழாக்கத்தையும் தவிர தமிழில் இது குறித்து ஏதேனும் நூல்கள் இருந்ததா? இருக்கிறதா? ஆய்வைத் தொடர்ந்தேன். வண்ணக்களஞ்சியப் புலவரின் .தீன் விளக்கம். எனும் நூல் கிடைத்தது.

வரலாற்றின் பின்னேக்கி

'தீன் விளக்கம்' குறித்து வரலாற்றுப் பார்வையை பின்னேக்கிச் செலுத்தினேன். 1984 - இல் எம். செய்யிது முஹம்மது ஹஸன் அவர்களால் திரும்பவும் பதிப்பிக்கப்பட்ட 'தீன் விளக்கம்' நூலின் முந்தைய பதிப்புகள் பற்றிய விவரங்களைத் தேடலானேன்.

கி.பி. 1890-இல் கண்ணகுமது மகுதூம் முகம்மதுப் புலவரவர்கள் 'தீனெறி விளக்கம்' என்று அந்த காப்பியத்தை வெளியிட்டிருக்கிறுர்கள். ஆனுல் அது இரண்டாம் பதிப்பு. அப்படியாஞல் முதற் பதிப்பு எப்போது வெளிவந்தது? தொடர்ந்து தேடினேன்.

தீன் விளக்கமெ ன்கின்ற புராணம்

பிசுமில்லாகி, மதுரைமீசல் வண்ணக் களஞ்சியப் புலவரவர்களாற் கவிகளாகச் செய்யப்பட்ட தீன் விளக்க மென்கின்ற புராணம். இது காயற்பட்டணம் காலி-அலாவுத்தீனவர்கள் குமாரர்களாகிய முகம்மது அப்துல் காதிறு அவர்களின் தம்பி முகம்மதிபுருகீம் லெப்பை ஆலிம் இவ்விருவர்களின் முயற்சியால், மேற்படியூர் உவைசு நயினர் லெப்பையவர்கள் குமாரராகிய சைனுத்தீன் புலவரவர்களாற் பரிசோதித்து சென்னபட்டணம் கல்விப்பிரவாக அச்சியந்திரத்திலியற்றப்பட்டது. கிசுறத்து - சூஉஅசாஙு ஜமாதுல்லவ்வல் மீ இச்சரியான சுக்கில ஙு - ஆவண மீ (அதாவது கி.பி 1868 - 1869) என்று முதற்பக்கக் குறிப்பைக் கொண்டே நூல் கிடைத்தது (இது மேலப்பாளையம் புலவர் செய்யது முகம்மது மகன் புலவர் முகைய்யதீன் அவர்களின் புத்தகம் என்ற குறிப்பும் அதில் உண்டு). இந்த நூலுக்கும் முதல் நூல் வேறு ஏதேனுமிருந்ததா?

ஏர்வாடி தர்கா அம்மானை

"அம்மனையா யிருந்த ததனையவர் தம்பாலராகி
வளர் முசாவர்களாய்த் தோன்றிஞேர்க
டம்மனத்தின் மகிழ்ச்சி பொங்கப் படலஞ் சேர்ந்த
தானுலவு காவியமாய்ச் சாற்ற வென்று"

என்று வண்ணக்களஞ்சியப் புலவர் தமது நூலில்* குறிப்பிடுவதைக் கொண்டு இந்த வரலாற்றுக் காப்பியத்திற்கு மூல நூலாக அமைந்தது இபுருகீம் சாகிபு படைப்போர் என்றும், ஏர்வாடி தர்கா அம்மானை. என்றும் குறிப்பிடப்படும் படைப்பாகும் என்று ஹஸன் அவர்கள் கருதுகிருர்கள்.** இந்த அம்மானை எப்போது இயற்றப்பட்டது?

காதிப்புலவர் (கி.பி. 1782)

. தீன் விளக்கம் காப்பியத்தின் இருபத் தோராம் படலத்தில் கண்டுள்ளபடி ஒலியுல்லா அவர்களின் சந்ததியில் வந்த நல்ல இபுருகீம் லெப்பை தாம் கனவில் பெற்ற உத்திரவின்படி ஏர்வாடி சென்று குடியேறி அவர்களின் அடக்கவிடத்தைப் பராமரிக்கத் தொடங்கியவர். அவருக்கு முத்து இபுருகீம், வரிசை இபுருகீம், செய்கு இபுருகீம் ஆகிய மூன்று ஆண்மக்களும் கேட்டுக் கொண்டபடியே அவர்கள் உரைத்த வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு ஹிஜ்ரி 1196 (கிபி 1782) ஆம் ஆண்டில், .கவிராசன், ஆசு, மதுரம், விஸ்தாரம் பேசும் அவதானி பெற வந்த மால்மேகம், காதியார் மகன் சேகு மீருவின் மகன் 'காதிப் புலவர்' அம்மானை வடிவில் படைப் போர் நூலாக இயற்றினார். இது 3606 கண்ணிகளையும் 90 விருத்தங்களையும் கொண்ட ஒரு பெரு நூலாகும். இந்நூல் இதுவரை அச்சேறவில்லை. ஏர்வாடியிலுள்ள ஒலியவர்களின் வழித்தோன்றல்களிட2728ம் குறைந்தபட்சம் இரு ஓலைச் சுவடிகளாவது இருக்குமெனத் தெரிகிறது.

அச்சில் வராத அம்மானை

அவற்றையன்றி தொல்பொருள் துறையினருக்கு ஒரு சுவடியும் கிடைத்துள்ளது. மதுரையில் 1981 ஜனவரித் திங்களில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினையொட்டி தமிழக அரசு 100 ஓலைச்சுவடிகளை அச்சிட்டு

---

* தீன் விளக்கமென்கிற புராணம், கடவுள் வாழ்த்து, பாடல் 25.

** ஹஸன், தீன் விளக்கம், பக் 10.

வெளியிட முடிவு செய்திருந்தது. அத்திட்டத்தின்படி சில ஓலைச்சுவடிகளே இதுவரை அச்சிடப்பெற்றுள்ளன. அவை போக அதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டு இன்னும் அச்சிடப்பெறாத நூல்களுள் இந்த அம்மானையும் என்றாகும்'' என்று ஹஸன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதோடு,

''துலங்க இபுறாகீம் சுலுத்தான் செகராசர்
விலங்க லதனைத்திருப்ப வெகுவீகாரமாக
வளமை திகழ் பவுத்திரமாணிக்கப்பட்டணத்தில்
தளசேகரமாகத் தானடந்தார் அம்மானை'' *

என்று அந்த அம்மானை பாடல் வரியையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தீனெறி விளக்கம்

செய்யது இபுறாகீம் ஷஹீது ஒலி குறித்து, கி.பி. 1892இல் தீனெறி விளக்கம் வசன காவியம் என்றொரு உரைநடை நூல் கண்ணகுமது மகுதூமுகம்மதுப் புலவர் அவர்களால் எழுதப்பட்டு வெளிவந்திருக்கிறது.

தீன்விளக்கச் சந்தமாலை

அதனைத்தொடர்ந்து, கி.பி. 192`இல் இளையான் குடியைச் சேர்ந்த புலவர் செ.அ.சீனியாபில் ராவுத்தர், 631 விருத்தப்பாக்களையும் 243 அடிகள் கொண்ட 15 சிந்துகளையும் கொண்ட ''தீன் விளக்கச் சந்தமாலை'' என்ற நூலை வெளியிட்டிருக்கிறார்.

ஏர்வாடி வாழும் ஏந்தல் ஷஹீது

கி.பி.1970இல் ஜமால் எழுதிய ஏர்வாடி சுல்தான் செய்யது இப்ராஹீம் ஷஹீது வலியுல்லாஹ் வரலாறு என்ற நூலும், 1981இல் எம். அஹமதுகான் எழுதிய நூலும், கி.பி. 1984இல் தேங்கை மு. ஷறபுத்தீன் மிஸ்பாஹி எழுதிய ''ஏர்வாடி வாழும் ஏந்தல் ஷஹீது'' என்ற நூலும், கி.பி.1984இல் ச.சி.நெ.அப்துல்றஸாக் எழுதிய ''தென்பாண்டிச் சீமையிலே'' என்ற நூலும், கி.பி.1990இல் ஜுல்பிகார் எழுதிய ''ஏர்வாடி பாதுஷா நாயகத்தின் ஆன்மீக அரசாட்சியின் அற்புதங்கள்'' என்ற நூலும், கவிஞர் எம்.எம். காதிர் (அமுதகவி) பாடியுள்ள ஏர்வாடி சுல்தான் என்னும் மாலை

* மேலது, பக் 12.

நூலும், மதுரை எஸ்.மீர்அஹமத் இப்ராஹிம் எழுதிய நூலும் 96இல் அஷ்ஷெய்கு எம்.ஜி. முகம்மது ஹுஸைன் சாகிபு காதிரி, எம்.ஏ. ஹைதர் அலி எழுதிய சுல்தான் சையது இப்ராஹீம் (ஒலி) என்ற நூலும் தமிழில் இது குறித்து வெளிவந்திருக்கிறது.

தமிழக வரலாற்றில் குறிப்பிடப்படாத சுல்தான் செய்யிது இபுறாகீம்

இத்தனை இலக்கியப் பின்னணியைக் கொண்டிருந்தும் தமிழகத்தில் ஏர்வாடியிலும், வைப்பாற்றிலும் கடற்கரைப் பகுதிகளில் இறைவழியில் உயிரைத் துறந்த தீரர்களின் கல்லறைகளும் கண்கூடான சாட்சியங்களாகத் திகழ்ந்தும் பாண்டிய நாட்டு வரலாறு எதிலும் சுல்தான் செய்யிது இபுறாஹீம் ஷஹீது ஒலி அவர்களின் வருகையைப் பற்றியும் அவர்களின் ஆட்சியைப் பற்றியும் குறிப்புக்கள் காணப்படவில்லை என்பது விசித்திரமான ஒன்றாகும்.

சையது இப்ராஹீம் ஷஹீதுவலி

மொரோக்காவில் ஹிஜ்ரி 530 ரமலான் பிறை 3இல் சையிது அஹ்மது, பாத்திமா தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். இறைநேசச் செல்வர் சையிது இப்ராஹீம் ஷஹீதுஒலி.

இளமையில் மதீனாவில் கல்வி கற்ற இவர்கள், ஹுஸைனியூசுப் என்ற தர்வேஷுடன் சேர்ந்து பலநாடுகளுக்கும் சென்று இஸ்லாமியப் பிரச்சாரம் செய்தார்கள்.

ஹுஸைனி யூசுப் இறந்ததும் இவர்களே அக்குழுவிற்குத் தலைமை தாங்கி டுனிஸ், திரிப்போலி, எகிப்து, லிபியா, எரிட்ரியா, அல்ஜீரியா ஆகிய நாடுகளுக்குச் சென்று மார்க்கப் பிரச்சாரம் செய்தனர்.

சிலுவைப்போரில்

செய்யது இப்ராகீம் ஷஹீது வலி மூவாயிரம் பேர்களுடன் சென்று சிலுவைப் போர் வீரர்களை எதிர்த்து வீரப்போர் புரிந்தார். பாலஸ்தீனின் ஆளுநராக நியமிக்கப்பட்ட இவர் 24வது வயதில் சையிதாஅலீ பாத்திமா என்ற மாதவியை

மணந்தார். அவருக்கு அபூதாஹிர், ஜைனுல்ஆபிதீன் ஆகிய நன்மக்களும் பிறந்தனர்.

கனவில் நபி (ஸல்)

ஒரு நாள் அண்ணல் நபி (ஸல்) இவரது கனவில் தோன்றி பணித்ததற்கேற்ப ஆயிரம் வீரர்களுடன் ''சிந்து' விற்கு வந்தார்கள். அங்கு மார்க்கப்பிரச்சாரம் செய்தும், போரிட்டும் பின் தாயகம் திரும்பினார்.

தொடர்ந்து இஸ்லாமிய மார்க்கப் பிரச்சாரம் செய்திட தமது குடும்பத்தார் 121 பேர்களுடன் 9000 படைவீரர்களுடன் மக்காவிற்கு வந்து உம்ரா* செய்து விட்டு, பின் அங்கிருந்து ஜித்தா வந்தார்கள். ஹிஜ்ரி 571 ரபீயுல் ஆஹிரில் கப்பல்களில் ஆயிரக்கணக்கானோர்களுடன் புறப்பட்ட இவர்கள் நாற்பது நாட்கள் கடல் பயணத்திற்குப் பிறகு மலபார் கடற்கரையோரம் கண்ணனூர் வந்து சேர்ந்தார்கள்.

அப்போதுதான் பாண்டிய நாட்டில் தாயாதிச் சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. குலசேகரபாண்டியன் கண்ணனூர் வந்து சையிது இப்ராஹீம் வலி அவர்களின் உதவியை வேண்டினான்.**

சமாதானத் தூது

செய்யது இப்ராஹீம் ஷஹீதவர்கள் தம் தொண்டர்களுடன் கண்ணனூரிலிருந்து புறப்பட்டு, ஆலப்புழை, கொச்சி, கொல்லம், கன்னியாகுமரி வழியாக நெல்லைச் சீமையை வந்தடைந்தார்கள். *** நெல்லைச் சீமையை ஆட்சி செய்த குலசேகரபாண்டியனிடம் சம்மதம் பெற்று மார்க்கப்பிரச்சாரத்தை, தீன்குரலை தெற்கிலே ஒலித்தார்கள்.

சகோதரர்களிடையே ஏற்பட்ட தகராறைத் தீர்த்து வைக்கும் நோக்கத்துடன் குலசேகரன்பட்டினத்திற்கு அண்மையிலுள்ள காயல்பட்டிணத்தில் வந்து தங்கிய இவர்கள் முஹ்யித்தீன், இம்யான் ஆகிய இருவரை பாண்டிய மன்னனிடம் தனது சார்பில் தூது அனுப்பினார்கள்.

குலசேகரபாண்டியனுக்கு ஆதரவாக சையிது இப்ராஹீம் ஷஹீது வலி தூது அனுப்பியதைக் கண்டதும் விக்கிரமபாண்டியன் போருக்கெழுந்தான். தாம் மார்க்கப் பிரச்சாரகரேயன்றி வேறில்லை என்று எவ்வளவோ எடுத்துக்கூறினார்கள். ஆனால் அது பலனளிக்கவில்லை. முடிவில் விக்கிரபாண்டியன் போருக்கு வந்தான். போர்க்களக் காட்சிகளை விளக்கினால் அதுவே தனி நூலாகி விடுமென்பதால் ரத்னச்சுருக்கமாக அதனைப் பார்ப்போம்.

---

* உம்ரா - ஹஜ்ஜின் ஒரு செயல்

** அப்துர்-றஹீம், இஸ்லாமியக்கலைக்களஞ்சியம், தொகுதி மூன்று 1979, பக் 173 - 175.

*** எஸ்.மீர். அஹமத் இப்ராஹீம், ஏர்வாடி குத்புஸ் சுல்தான் சையத் இப்ராஹீம் ஷஹீத் ஒலியுல்லாபாதுஷா (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு பக். 5

முதல் நாள் போர்

பாண்டியனின் கட்டளையேற்று முதல் நான் விக்கிரபாண்டியனின் குமாரர்கள் இந்திர பாண்டியன், சந்திரபாண்டியன், தளபதிகள் சவுந்திரபாண்டியன்; பராக்கிரமபாண்டியன், செயவீரபாண்டியன், கலிகாலபாண்டியன் ஆகியோர் படைகளுடன் வந்தார்கள்.

போர் துவக்கம்

நாங்கள் இங்கு வந்துள்ளது நாடு பிடித்து அரசாள்வதற்கல்ல; சன்மார்க்கப் பிரச்சாரம் செய்வதற்காகவே இதைத் தெளிவு படுத்தி உங்களின் மன்னனுக்குத் தூது அனுப்பினோம். அவர் அச்சொல்லை ஏற்காது போருக்கு ஆயத்தமாகிவிட்டார். இப்போதும் காலம் கடந்திடவில்லை என்று மன்னரிடம் சொல்லுங்கள் என்று இஸ்லாமியப் பிரிவைச் சார்ந்த அப்பாஸ் கேட்டுக் கொண்டார். ஆனால் அதிவீரபாண்டியன் அப்பாசை நோக்கி அம்பைத் தொடுத்துவிட சண்டையும் துவங்கியது.

போரில் செய்யிது காதிர் வீரமரணமடைந்தார். சுந்தரபாண்டியனும், சவுந்திரபாண்டியனும் களச்சாவை யேற்றனர். விக்கிரமபாண்டியன் இதனைக் கேள்வியுற்று கொதித்தெழுந்தார்.

இரண்டாம் நாள் போர்

இருபக்கத்தினரும் ஒருவருக்கொருவர் இளைத்தவராயில்லை, சண்டை வலுத்துக்கொண்டே வந்தது. இரத்தம் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது. அதிவீரபாண்டியன் வெட்டிச் சாய்க்கப்பட்டார். போரில் தந்திரமாக சம்சுத்தீன் குத்திக் கொல்லப்பட்டார். செயசூரனும் மடிந்தான்.

மூன்றாம் நாள் போர்

அப்பாசு ராஜதந்திரமான முறையில் கொல்லப்பட்டார். இளவரசன் சந்திர பாண்டியன் போரில் மாய்க்கப்பட்டார். தளபதிகலிகாலபாண்டியனும் மறைந்தார்.

நான்காம் நாள் போர்

மாவீரன் கோப்பாண்டியனும், மகமதிய முகியுத்தீனும் நான்காம் நாள் போரில் மடிந்தனர்.

ஐந்தாம் நாள் போர்

இஸ்லாமிய வீரன் இமையானின் தாக்குதலினால் பராக்கிரமபாண்டியன் போர்க்களத்திலே மடிந்தார்.

ஆறாம் நாள் போர்

சையிது இப்ராஹிம் வலி அவர்களின் மைத்துனரான செயினுல் ஆபீதின் போரில் மடிந்தார்.

ஏழாம் நாள் போர்

விக்கிரமபாண்டியனின் எஞ்சியிருந்த குமாரன் இளவரசன் இந்திர பாண்டியனும் ஏழாம் நாள் போரில் கொல்லப்பட்டான்.

எட்டாம் நாள் போர்

விக்கிரமபாண்டியனே களத்திற்கு வந்தான். இமையான் எதிர்த்துப் போரிட்டு வீரச்சாவைத் தழுவினார். ஒலியவர்களின் கூடாரங்களும் தீக்கிரையாக்கப் பட்டது.

ஒன்பதாம் நாள் போர்

விக்கிரமபாண்டியனை எதிர்த்து சையிது இப்ராஹீம் ஷஹீது அவர்களின் புதல்வர் செய்யிது அபூதாஹீர் களத்திலே நின்றார். அம்புகளால் சல்லடையாகத் துளைக்கப்பட்டு வீரச்சாவைத் தழுவினார் அபூதாஹீர்.

பத்தாம் நாள் போர்

செய்யிது இப்ராஹிம் ஷஹீது அவர்கள் படைக்கு தலைமை தாங்கிச் சென்றார். விக்கிரம பாண்டியனும் வீராவேசத்தோடு போரிட்டார் ஒரு கை செயலிழந்தபின்னும் விக்கிரமபாண்டியன் வீரப்போர் புரிந்ததைக் கண்டு செய்யிது இப்ராஹீம் ஷஹீது பெருவியப்பு கொண்டார்கள்.

ஒலியவர்களுக்கும் மன்னனுக்கும் இடையே மீண்டும் போர் கடுமையாயிற்று ஒலியவர்களின் குதிரையின் கால்களை பாண்டிய மன்னன் வெட்டி வீழ்த்தினான். குதிரையிலிருந்து கீழே குதித்த ஒலியவர்கள் கையில் வேல் எடுத்து மன்னனைக் குறி வைத்து வீசினர். அது அவனது புயத்தை ஊடுருவிச் சென்றிட மன்னன் கீழே விழுந்து மடிந்தான்.* பாண்டியர் படை சிதறுண்டது. போர் வெற்றிக்கு பிறகு சையிது இப்ராஹீம் அந்தப் பகுதியினை ஆட்சி புரியத் துவங்கினார்கள். இஸ்லாமியப் பிரச்சாரம் தொடர்ந்தது. தெற்குத் திசையில் தீன்குரல் ஒங்கி ஒலித்தது.

பாண்டிய மன்னனின் சகோதரர் திரும்பவும் படையெடுத்து வந்தார். மதுரையில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த சையிது ஜைனுலாபீதீன் கொல்லப்பட்டார். பாண்டியர் படை பவுத்திரமாணிக்கப்பட்டினத்திற்கு வந்தது. சையிது இப்ராஹீம் ஷஹீதுவலி போரில் பாண்டியனை எதிர்த்து நின்றார். தனது கரங்களினால் ஈட்டி ஒன்றை பாண்டிய மன்னன் மீது வீச அவன் சாய்ந்தான். அவன் மடிந்தான் என்று எண்ணி இவர்கள் ஓய்ந்திருந்த பொழுது, அவன் மயக்கம் தெளிந்து எழுந்து தன் கையிலிருந்த ஈட்டியால் குத்திட சையிது இப்ராஹீம் ஷஹீது ஒலி இறப்பெய்தினர். ஈட்டிக் காயம்பட்டிருந்த பாண்டிய மன்னனும் மூன்றாவது நாளில் மறைந்தார்.

ஏர்வாடி

மதினா நகரில் ஒரு பகுதியான யர்புத் (யர்பதி) என்ற இடத்திலிருந்து சுல்தான் இப்றாஹீம் அவர்கள் புறப்பட்டு வந்ததால் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கும் யர்புத் என்றே பெயர் சூட்டப்பட்டது. **

யர்பாத்தே நாளடைவில் எர்பாத் ஆகி, எர்பாதி ஆயிற்று. பிறகு காலப்போக்கில் ஏர்வாடி என்று மாறியது. மதுரை இராமநாதபுரம் சுற்றியுள்ள பகுதிகளில் கன்னிவாடி, வாடிப்பட்டி என்று அந்தப்குதி மக்களின் வளமையான

* எம். செய்யிது முஹம்மது ஹஸன், தீன் விளக்கம், 1984, பக் 232.

** ஏ.கே. ரிபாயி, தமிழகத்தில் இஸ்லாமியர் வரலாறு, 1988, பக்.82.

சொற்கள் அமைந்து விடுவது இயல்பு. அதுபோலத்தான் ஏர்பாதி என்பது ஏர்வாடி என்று மாறியது.*

காலத்தால் அழியாத கண்கூடான சான்றுகள்

ஏர்வாடி பெரிய தர்காவிலும், காட்டுப்பள்ளியிலும் அடங்கியுள்ள ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள், மகான்கள், மாது சிரோமணிகளின் பட்டியல் இதோ:

சுல்தான் செய்யது இப்ராஹீம் அவர்களின் அன்னையார் செய்யிது பாத்திமா, துணைவியார் செய்யது அலி பாத்திமா, திருமகனார் செய்யிது அபுத்தாஹீர், தங்கை செய்யது ராபியா, மைத்துனர் செய்யிது ஜெய்னுலாபீதின், தளகர்த்தர்கள் ஷம்சுத்தீன், கமருத்தீன், நூருத்தின், பிரதமதளபதி அப்பாஸ், ஹக்கீம் அப்துல்கரீம், அப்துல்லா, செய்யிது அஹமது, செய்யிது முகியித்தீன், செய்யிது காதிறு, அப்துல்லா, சந்தனப்பீர், அப்துல்காதினு சமதானி, பட்டாணி சாஹிப், செய்யது இஸ்மாயில், செய்யது இஸ்ஹாக், செய்யது ஹுசைன், செய்யிது அபூபக்கர், செய்யிது பக்கீர், குஸ்லம் பீவி, பல்கீஸ் பீவி, சபூரா அம்மாள், ஜைனபு பீவி **, மரைக்காயர்பட்டினத்துச் சீனியப்பா சாஹிபு, காயல்பட்டினம் கீழநெய்னுர் தெருவில் அடக்கஸ்தலம் கொண்டுள்ள கலீபா அப்பா, காயல்பட்டினம் முத்துவாப்பாதைக்கா தெருவில் அடக்கஸ்தலம் பெற்றிருக்கும் ஈக்கி அப்பா என்ற பள்ளுல்லாஹ் வலி***

வைப்பாற்றில் அடைக்கஸ்தலம் பெற்றுள்ள சய்யிது ஷம்சுத்தீன், சய்யிது காதிர்****

இப்படி தெற்குச் சீமையில் கடற்கரை ஓரங்களில் காலத்தால் அழியாத கண் கூடான சான்றுகளாக முஸ்லிம் வீரப்பெருமக்களின் நூற்றுக்கணக்கான கல்லறைகளை இன்றும் காணலாம்.

இவ்வளவு சான்றுகள் இருந்தும் இந்த தியாக சரித்திரத்தை தென்னக வரலாற்றில் மறைத்திட முயல்வது நியாயமா? தென்னக வரலாற்றில் இந்த சரித்திரச் செய்திகளைச் சேர்த்திடும் வண்ணம் வரலாற்றைத் திருத்திடவேண்டாமா?

---

* ஜுல்பிகார், ஏர்வாடி பாதுஷா நாயகத்தின் ஆன்மீக அரசாட்சியின் அற்புதங்கள், 1990, பக். 32

** ஜமால், ஏர்வாடி சுல்தான் செய்யது இப்ராஹீம் ஷஹீது வலியுல்லாஹ் வரலாறு, 1984, பக். 217, 218.

*** R.S. அப்துல் லத்தீபு, காயலின் இறைநேசச் செல்வர்கள், 1992, பக். 19-24

**** மு.வா.வ. சய்யிது இபுருஹீம் லெப்பை ஆலீம் சாஹிபு, ஷஹீது சரிதை, 1953, பக். 92

பழம் பாடலின் பாண்டியரின் புதிய சரிதை

தெற்குக் கோடியில், தென்மேற்குப் பகுதியில் செந்தமிழ் வழங்கும் சீமையில், தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தியவன் பராக்கிரம பாண்டியன். (கி.பி.1422 - 1461)

ஒருநாள் முருகப்பெருமான் முனி உருவங்கொண்டு பாண்டியரின் படுக்கை அறையில் புகுந்து படுத்தான். அருகில் முருகன் கோவிலில் பெருமானையும் வள்ளி, தெய்வயானையையும் வழிபட்டிருந்த மன்னருக்கு முருகப்பிரானுடைய உடலிலிருந்து புதுமணம் வீசியது. அதனைப் பின்பற்றிய பாண்டியர் தூங்குவார்போல இருந்த முருகனை வந்து கண்டவுடன், ஓர் உருண்டை பெருமான் வாயிலிருந்து வெளிவந்தது. ஆறுமுகன் அக் குளிகையைப் பாண்டியரிடம் தந்து, மந்திரமும் அருளி மறைந்தார். பராக்கிரமன் அதன் உதவியால் நாள்தோறும் பிறர் அறியாமல் காசி சென்று வழிபட்டு வந்தான். பராக்கிரமனின் மனைவி வில்வவதி இதனைத் தெரிந்து தானும் உடன் வருவேனென்று சொல்ல, அவளையும் அழைத்துச்சென்று காசிபோய் வந்து கொண்டிருந்தான்.

காசியிலிருந்து வரும் வேளை ஒரு நாள் மதுரைக்கருகில் வரும்போது அரசியாருக்கு மாதவிடாய் ஏற்பட்டு விட்டது. அதனால் அரசனும் அரசியும் நான்கு நாள் மதுரையிலே தங்கியிருந்தனர். ஐந்தாம் நாள் பராக்கிரமன் சொக்கநாதரை வணங்கியபோது, 'ஊர்பக்கத்தில் காசிகாண்' என்று அருளினார். *தென்காசிக் கோவில் நுழைவாயில் அருகிலுள்ள கல்வெட்டு இதனைக் கூறுகிறது.*

தென்காசி ஆலயம்

தென்காசி வந்தடைந்த மன்னனது கனவில், .நாளை இங்கிருந்து எறும்பின் வரிசை அவ்விடம் வரை போகும், அதைத் தொடர்ந்து செல். என்றார் இறைவன். விடிந்தவுடன் பராக்கிரம பாண்டியன் எறும்பொழுக்கு வழியே சென்று சித்திரையாற்றின் கரையிலே நந்தியைக் கண்டு, அதன் அருகிலேயிருந்த மடுவிலே சிவலிங்கப் பெருமானையும் கண்டான்.

வடக்கே கங்கைக்கரையில் இருந்த காசி விசுவநாதர் ஆலயம் சிதலமாகிவிட்டது; தென்னாட்டில் சித்திரா ஆற்றின் வடகரையில் தனக்கு ஓர் ஆலயம் கட்டித் தர வேண்டுமென்று காசி விசுவநாதர் பராக்கிரம பாண்டியரிடம்

---

* Annual Report on Epigraphy (Journal) 1918. P 61.

வேண்டியதை பாண்டிய குலோதயம் எனும் வடமொழி வரலாற்றுக் காவியமும் உறுதி செய்கிறது.

சந்திரகுலத்தில் அவதரித்த பராக்கிரமன் கி.பி. 1446 சூன் 6 இரவில் புதிய கோயிலுக்குக் கடைக்காலிட்டு கி.பி. 1467 சூன் 10 இரவில் கர்ப்பகிரகமும் பூர்த்தியாகி, சிவலிங்கத்தையும் பிரதிஷ்டை செய்தான்.

பாதியில் நின்ற கோபுரம்

கலியுக ஆண்டு 4558-ன் மேல் கார்த்திகை மாதம் ஐந்தாம் தேதி வியாழக்கிழமை மிருகசீரிஷ நட்சத்திரத்தில் 1457 நவம்பர் 3-ல் இராஜகோபுரத்திற்கு அடிக்கல் நாட்டினான். மனித முயற்சியால் அல்ல, இறைவனின் அருளால் பதினேழு ஆண்டுகளில் கோவிலைக் கட்டினானென்று கால்டுவெல் தனது திருநெல்வேலி சரித்திரத்தில் சொல்லியிருக்கிறார் (that it was not work of man, but a divine work. P. 53) ஆனால் கோபுரம் கட்டத் துவங்கிய ஆறு ஆண்டுகளுக்குள் பராக்கிராமன் இறந்துபோனான்.

குலசேகரன் கட்டிய கோவில்

" விண்ணாடர் போற்றும் தென் காசி கோபுரமீதில் எங்கள்
அண்ணாழ்விசெய்த பணி இப்படி குறையாகக் கிடக்க
வொண்ணாதது எனக்கண்டு உயர்ந்ததட்டோடெங்கு மூன்றுவித்தான்
மண்ணாளும் மாலழகன் குல சேகர மன்னனே "

என்ற கல்வெட்டுப் பாடல் நிறைவுபெறாமலிருந்த தென்காசி இராஜகோபுரத்தை பராக்கிரமனின் இளவல் குலசேகரன் ஐம்பதாண்டுகள் கழித்து 1505-ல் நிறைவு செய்தான் என்பதனை அறிவிக்கிறது.

கோபுரத்தில் தீ

சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட தீக்கோளினால் கோபுரத்தில் தீப் பிடித்தது; மின்னல் தாக்கியதால், இடி விழுந்ததால் விபத்தேற்பட்டது; கோபுரத்தின் மேற்பகுதி உத்திரங்களும், நிலைகளும் மரத்தால் ஆனவை. நவாபின் ஆட்சியில் பனை ஓலைகளினால் ஆன ஆவணங்கள் இங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதில் எழுந்த தீ மேல்தட்டுகளில் பரவி கோபுரம் அழிந்துவிட்டது என்றெல்லாம் பலவாறாகச் சொல்லப்படுகிறது.

திருப்பணி துவக்கம்

1962-ல் தமிழகத்தின் முதல்வரான காமராஜர், தென்காசியில் பொதுகூட்ட நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். கூட்டம் நடைபெற்ற திடலோ மொட்டயாய் நின்ற கோபுரத்தின் முன்னால். அப்போதே இதனைப் புனர் நிர்மாணம் செய்திட எண்ணி பி.டி.ராஜன் தலைமையில், எஸ். அருணாசலம் பிள்ளை, கே.எஸ். சண்முகவேல் நாடார், எம்.டி.கே. இராமலிங்கம், டி.எஸ். சங்கரநாராயண பிள்ளை, ஐ.ஏ. சிதம்பரம் பிள்ளை, பி.எஸ். பிச்சாண்டி செட்டியார், எம். சிவகுருநாதன் ஆகியோர் பங்கேற்க கமிட்டி அமைக்கப்பட்டு, நான்கு லட்ச ரூபாய் பொது மக்களிடம் வசூல் செய்து திருப்பணி ஆரம்பமானது.

கல்காரத்துக்கு மேலே இருந்த சிதைந்த கோபுரத்தை அகற்றியதோடு, அக் குழு அதற்கு மேல் பணியைத் தொடரவில்லை. 9.11.1981-ல் தமிழக அரசு புதிய திருப்பணிக் குழுவை பா.சிவந்தி ஆதித்தன் தலைமையில் அமைத்தது. அவரின் நன்கொடையாலும், திருச்செந்தூர், பழனி, திருப்பரங்குன்றம், திருத்தணி, சமயபுரம், மதுரை மீனாட்சி தேவஸ்தானங்கள் அளித்த நிதியாலும் 28.11.1984-ல் கால்கோள் நடத்தப்பட்டுத் துவங்கிய திருப்பணி 25.6.1990-ல் முடிவுற்றது.

பராக்கிரமனின் பாடல்

வரலாற்று சிறப்புமிக்க இக் கோபுரம் முன்பு எப்போது மொட்டைக் கோபுரமாயிற்று? அதன் சரித்திரப் பின்னணி என்ன?

பராக்கிரமன் காலத்தில் கோவில் குடமுழுக்கு நடந்த போது நான்கு பாடல்களை அவனே பாடி, அவற்றைக் கோவில் கற்சுவர்களில் பொறித்தும் வைத்திருக்கிறான்.

'மனத்தால் வகுக்கவும் எட்டாத' என்று துவங்கும் முதல் பாடலில் இக் கோவிலுக்குக் காவலாக இருப்போர் பாதங்களை என தலைமேல் கொள்வேன் என்றும்,

ஆராயினும் இந்தத் தென்காசி மேவும் பொன்னாலயத்து

வாராததோர் குற்றம் வந்தால் அப்போது அங்கு வந்து அதனை

நேராகவே ஒழித்துப் புரப்பார்களை நீதியுடன்

பாரார் அறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே*

என்று இரண்டாவது பாடலிலும்,

‘சேலேறிய வயல் தென்காசி ஆலயம்’ என்று துவங்கும் மூன்றாவது பாடலில் இக் கோவிலை விரிவுபடுத்துவோருக்கு நான் ஏவல் செய்வேன் என்றும்,

‘சாத்திரம் பார்த்து இங்கு யான் கண்ட’ என்ற நான்காவது பாடலில் இக்கோவிலில் பூஜைகள் தவறாது புரப்பவர் பராக்கிரம பாண்டியனுக்கு அடைக்கலம் அளித்தவராவார் என்றும் பாடியுள்ளான்.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மங்கல வாழ்த்துப் பாடலில் ‘காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல்’ என்று கோவலனும் கண்ணகியும் இணை பிரியாமல் வாழ வாழ்த்துவார். அவருக்கு அப்போதே தெரியும் இவர்கள் விரைவிற் பிரிய இருக்கிறார்கள் என்பது. அதைப்போலத்தான் பராக்கிரம பாண்டியனுக்கும் முன்கூட்டியே தெரியும் இந்த ஆலயத்திற்கு அழிவு வருமென்று. அதனால்தான் ‘வராததோர் குற்றம் வந்தால் அதனை நீக்கிட உழைப்பவர் பாதம் பணிவேன்’ என்று முன் கூட்டியே பாடி, எந்த மன்னனும் இதுவரையில் செய்யாத செயலாக அவைகளைக் கோவிலிலும் பொறித்து வைத்தான் என்று உறுதியிட்டுச் சொல்லலாம்.

ஹெச். ஆர். பேட்

கோபுரம் பற்றி சரித்திரத்தில் காணக் கிடக்கும் செய்திகள் என்ன?

ஹெச்.ஆர்.பேட். ஐ.சி.எஸ் 1917-ல் வெளியிட்ட திருநெல்வேலி கெஜட் பக்கம் 468-ல் பாரதியார் ஜெனக்கி (jaenicke) தனது நாட்குறிப்பில் 12.2.1792-ல் தென்காசி கோவிலும் கோபுரமும் நல்ல நிலையில் இருந்ததைத் தானே பார்த்ததாக எழுதி வைத்திருக்கிறார். ஊசியால் துளைசெய்த கிண்ணம் தண்ணீர்த் தொட்டியில் மிதந்து கொண்டிருக்கும்; துளைவழியே தண்ணீர் கசிந்து உள்ளே செல்லச்செல்ல கிண்ணம் மூழ்கிவிடும். கிண்ணம் இப்படி மூழ்கும் நேரம் ஒரு நாழிகை (இரண்டரை நாழிகை ஒரு மணிநேரம்) இதனை நாழிகை வட்டில் என்று தமிழர் அழைத்தனர். தென்காசி ராஜகோபுரத்தின் மேல் நாழிகை வட்டிலும் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நிலத்தைச் சர்வே செய்த சர்வேயர்களின் குறிப்புகளால் 1824-25-ம் ஆண்டு வாக்கில் கோபுரம் பழுதுபட்ட செய்தியை அறியலாம். இனி வெளியுலகறியாத வெளிவராத சரித்திரச் செய்திக்கு வருவோம்.

ஹுசைன் அரபி

சையிது இப்ராஹிம் சஹீது வலி இந்தியாவிற்கு வந்த போது அவருடன் வந்த படைத் தளபதி ஹுசைனரபி. ஆற்றலும், புலமையும் கொண்ட இவருக்கு

ராமநாதபுரம் பகுதியை ஆண்டுவந்த மன்னர்கள் தங்கம் என்று பொருள்படும் பங்காரு என்ற பட்டத்தை அளித்தனர். படிப்படியாக மார்க்கப் பிரசாரத்திற்கு வந்த இவர்கள் தென்காசி நகருக்கு வந்து, அங்கே அரசாட்சி செய்து கொண்டிருந்த பாண்டியர்களின் அன்புக்குப் பாத்திரமாகி முத்து என்ற விருதையும் பெற்றனர். அவரின் வம்சாவளியினர் இன்றும் பத்மனாபுரம், திருநெல்வேலி, ஏர்வாடி, தென்காசியில் .பங்காரு முத்துமீரான் குடும்பத்தினர். என்று வாழ்ந்து வருகிறார்கள்.

அரபித் தலைவர் ஹுசைனரபியின் புதல்வர் மீரான் பாண்டிய அரசனின் அன்பைப்பெற்று இஸ்லாம் மதத்தின் போதனையைப் பரப்பிக் கொண்டிருந்தார். சகோதரத்துவத்துடனும், அமைதியுடனும் ஒற்றுமை பேணப்பட்டும் தெற்கில் தீன்குரல் ஒலித்தது. இந்நிலையில் பாண்டிய மன்னனின் மகள் சுந்தரி சாஸ்திரங்கள் பல கற்றுத் தேர்ந்ததுடன், இஸ்லாம் பற்றி அறியவும் ஆவல் கொண்டாள். தினமும் அரண்மனையில் அவருக்கு இஸ்லாம் பற்றிய கருத்துக்களை போதித்திட பங்காரு முத்துமீரான் அனுமதிக்கப்பட்டார்.

மன்னன் மகளின் மனமாற்றம்

இந்த நிலையில் ஒரு நாள் "உங்கள் மகள் சுந்தரி உவகையுடன் இஸ்லாத்தில் சேர்ந்து, அரண்மனையில் மேல்மாடியில் அரபிக்குருவோடு தனித்திருக்கவும் கண்டேன்" என்ற ஒற்றனின் செய்தி மன்னனுக்கு எட்டியது. கடிதத் தொடர்பு வேறு அவர்களுக்குள் என்ற சேதியும் வந்தது. கயவர்களின் சதியும் அரங்கேறியது.

மகளின் மனதை மாற்றியதோடு, மார்க்கப் பிரசாரமும் செய்துவரும் இவரை விட்டுவைத்தால் ஆகாது என்றெண்ணி, அவர்மீது அரசத் துரோகக் குற்றஞ்சாட்டி, கொன்றிட உத்திரவிட்டான் அரசன். "எந்தன் கல்விக்கேற்ற கணவன் எங்கள் மரபில் இல்லை. எனக்கேற்ற கணவனைத் தேர்ந்தெடுத்துத் தாருங்கள்" என்று சுந்தரி கடிதம் எழுத, "உன் கடிதம் கிடைத்தது. உனது தாய் தந்தையர்கள் குடும்பத்தினர் குணமறிந்து உனது விஷயத்தில் தலையிடுகிறேன். அதுவரையில் அரண்மனையில் உனது கற்பைக் காத்து இறைவனை வணங்கி இன்புற்றிரு" என்று பதில் கடிதம் தந்த அந்த இறை அருளாளரை ஆராய்ந்து பாராமல் பாண்டிய மன்னன், தசைகளைத் துண்டுதுண்டாக வெட்டி வீழ்த்தக்கூடிய சூறை வண்டியில் ஏற்றி அதன் சூட்சமதைத் திருகச் சொல்லி கொன்றுபோட உத்திரவு பறந்தது.

மகானும், மகளும் கொல்லப்படுதல்

அதைக் கேட்ட சுந்தரி அரசனிடம், "அரசுக்கு ஈனம் விளைவிக்காதீர், அண்ணல் ஒலியை வதைக்காதீர்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அவளின்

அமுத மொழிகள் மன்னன் காதில் கனலை மூட்டியது. அவளின் சிரசையும் வெட்டிச் சாய்த்தான் அரசன்.

ஆபாத் ரோட்டில் அடக்கஸ்தலம்

சூறை வண்டியில் தன்னை ஏற்றி தன் தேகம் துண்டு துண்டாக விழுந்து சிதறுவதற்கு முன் பங்காரு முத்துமீரான்,

"தென்காசி கோபுரமாம் தெருவீதியாம்
திசைமேவும் ரத்தினக் கம்பளமாம்
பங்காரு முத்துமீறான் வைத்தகீர்த்தி
நின் மண்டைபிளக்குமடா பாப்பரசே"

என்று சொல்லிக்கொண்டே மன்னனின் தண்டனையால் கொல்லப்பட்டார். இறந்து போன அவரின் உடல் அருகே, அரசி சுந்தரியின் உடலும் தனித்தனியாக அடக்கப்பட்டு பங்காரு முத்துமீரான், சுந்தரி அடக்க ஸ்தலங்கள் இன்றும் தென்காசியில் ஆப்பாத் ரோடு நடுத்தெரு பகுதியில் உள்ளது. அந்தத் தெரு முத்துமீரான் தெரு என்றும் அழைக்கப்படுகிறது. பாண்டிய மன்னனும் தலைவெடித்து மாண்டு போனான்.

"அவரை வதைத்த பாப் அரசன் அடியோடு கிளைகள் நாசமாச்சு
அரசன்தேசம் அவர் கவியால் அழகு குன்றி குறைவேயாச்சு
அவரின் சொல்லால் கோபுரமோ அன்று முதல் பாழாச்சு."

(அப்போது இருந்த கோவிலில் சேதம் எதுவும் ஏற்பட்டிருக்கக்கூடும்) என்ற பாடலைப் போன்ற எண்ணற்ற பழம் பாடல்களை முத்துமீரான் குடும்பத்தினர் தலைமுறை தலைமுறையாகப் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர்.

பராக்கிரமனின் பாடல்கள்

ஏற்கனவே தம் மூதாதையர் இவ்வாறு பெற்றிருந்த சாபத்தால் தமக்கும் வாரிசு இல்லையென்பதையும் தாம் கட்டுகின்ற கோவிலுக்கும், கோபுரத்திற்கும் தீங்கேதும் வந்துவிடுமோ என்றும் உணர்ந்து உள்ளம் உருகித்தான் தானே கவிதை எழுதி தன் காலத்திலேயே அதனை உலகறிய கோவிலில் பதிய வைத்தான் பராக்கிரமன் என்று எண்ணிட வேண்டிய நிலையும் ஏற்படுகிறதல்லவா?

ஓலைச்சுவடி மரபுவழிச் செய்தி மூதாதையர் மொழி ஆகியவைகளின் அடிப்படையில் தென்காசி இ.மீரான்கனிஎழுதிய, குடும்ப சரிதையைபங்காரு முத்துமீரான் குடும்பத்தினர் போற்றிக் காப்பாற்றி வரும் பாடல்களைப் பார்ப்போம்.

பங்காரு குடும்ப சரிதை

இறைவணக்கம்

அல்லாதனையே மிகவே போற்றி அருளும் நபியின் சலவாத்தோதி
நல்லார் புகழும் அஸ்ஹாபிகள் நவிலுமிமாம்கள் தமையும் போற்றி
பொல்லாதகற்றும் முஹியித்தீனை புகழும் நாகூர்வலியும் போற்றி
எல்லா மூமீன் முஸ்லிம்களை இறைஞ்சி வாழ்கிற என் மரபு சொல்வாய்

சீரும் சிறப்பும் பெரிதான சிறந்த நகரம் தென்காசி
தேரும் நல்லோர் குடியிருக்கும் திரண்ட தெருவாம் நடுப்பேட்டை
சாருங் கல்விக் களஞ்சியமாய் ஜகத்தி லிருந்தார் **இஸ்மாயில்கனி**
நேர்ந்த மகனாம் **மீறான்கனி** நிகழ்த்தினே னேநற் கவிதையாக.

சொல்லும் கவியில் தவறுவரில் சுகுறத்தாய் திருத்தி அமைத்துக்கொள்வீர்
சொல்லும் சரிதை தனிற்பிசகு சுலபமாகத் தெரிந்துகொள்டால்
மெல்ல எனக்கு அறிவித்திட மிகவும் விரும்பிக் கேட்கின்றேன்
நல்ல விதமாய்ப் பதில்மொழிகள் நவின்றால் பொருந்திக்கொள்வீரே.

என்றன் தாதா முஹையதினும் எங்கள் மரபிற் ஹாஜியான
என்றன் தாதா முறையிலான இணங்கும் கொடுமன் மீறானாலும்
என்றன் பிதாவோ ஓலையிலும் இறுதி வரைந்த புக்குவாலும்
என்றன் பிதாவின் மொழியினாலும் எவர்க்கும் இயம்ப உரைக்க....

5. எங்கள் மரபி லுள்ளவரே இப்போ திருக்கும் இளைஞர்களே
உங்கள் குடும்ப வரலாறை ஒழுங்காய் உரைக்க முதியோறிலை
நீங்கள் விளங்க விபரங்களை நிகழ்த்தி விட்டேன் கவிதையாக
உங்கள் மனது உருக்கமதாய் உடையோ னிடமே துஆ இரப்பீர்!

குலவமிசாவளி

உலக மெங்கும் கீர்த்திபெற்ற உயர்ந்த அரபு நாடதற்கு
திலகம் போல் புகழ்பெற்ற திறத்த மக்கா நகர்க்கருகில்
தலத்திற் சிறந்த எமன்பதியிற் றங்கு மரபிக் குலமதனில்
பெலத்த தலைமை வகித்திருந்தார் பெரியோ ரான ஹுஸைனரபி

எங்கள் நபியாம் இஸ்மாயீல் இணங்கு மரபில் உதித்தவரும்
திங்க ளிறைஞ்சும் நபிறசூலின் தீனி லான உம்மத்* தோரும்
எங்க ளிமாமாம் அபூகனிபா இணங்கு மதுகப்** சார்ந்தோறாம்
எங்கும் அறியஇக் கவிஉறைத்த என்றன் பாட்டன் ஹுசைனாரே.

கல்வி தனிலும் சிறந்தவராய் கவிக ளியற்றும் நிபுணருமாய்
புவியில் மார்க்கத் தீரருமாய் புண்ணிய கலைக ளுணர்ந்தவறாய்
திவ்விய குணமு முடையவறாய் திறத்த அழகு புருஷருமாய்
புவியாம் எமனில் ***குடியிருந்தார் புகழும் அரபி ஹுசைனாரே.

ஹுசைனரபி

மக்கள் பவிசும் பொருள்பவிசும் மலிந்து பெற்ற பாக்கியராம்
திக்கோர் போற்ற மக்கள்தமை தீற்ந்த கல்வி மான்தளாக்கி
மிக்கோர் போற்றும் ஜிகாதுதன்னில் மிகவும் பழக்கி வைத்தவராய்
தக்கோர் போற்றும் ஹுசைனரபி தயங்கா திருந்து வாழு(ம்)நாளில்.

10. ஹக்கன் நபியின் மரபிலான கனத்த **செய்கு இபுறாகிமொலி**
ஹக்கன் தீதார் தனைநாடி கருதி ஜிகாதில் மரணமாக
மிக்க உருகி துஆ**** இரந்து மேலாம் மதினா தனிலிருந்தார்
ஹக்கன் கிருபை பொங்கியவர் கருதும் துஆக பூலாச்சே*****

செழித்து வளரும் மதுராபுரி செங்கோல் நடத்தும் அரசனிடம்
களிப்பாய் சென்று மதிகூறி கருதி இஸ்லாம் தனில்அழையும்
களிப்பாய் கனவில் நபிகள்நாதர் கருதி உறைத்த திருமொழியை
இழிவை யகற்றும் இபுறாகிமொலி இணங்கி சிரமேற் கொண்டாரே.

மக்கா மதினா எமன்பதிக்கும் மற்றும் பற்பல தேசங்கட்கும்
ஹக்கன் வேத உறைப்படிக்கு கருதி பீஸ பீல் ****** செய்ய
மிக்க குழாங்க ளுடன்வரயே மிகவும் விரைவா யெழுதிவிட்டார்
திக்காம் மதினா நகர்வாழும் தீரர் இபுறா கீமொலியே.

---

* உம்மத் - சமுதாயம்

** மதுகப் - மத்ஹப் - வழிமுறை

*** எமனில் - அரபுநாடுகளில் ஒன்று.

**** துஆ - பிரார்த்தனை

***** கபூல் - ஒப்புக்கொள்ளுதல்

****** பீஸபீல் - இறைப்பாதை

இஸ்லா மரசர் தங்களுக்கும் இடர்கள் நீக்கும் செய்குகட்கும்
துஸ்மன்* நீக்க உதவிசெய்ய துய்தாம் படைக ளனுப்பும்படி
இஸ்லா மதத்தின் குருவான எங்கும் புகழும் இபுறாகீமொலி
விஸ்தா ரமான எல்கைகாட்டி விரைவாய் வரும்படி எழுதிவிட்டார்.

ஜிகாத்

ஹக்கன் ஒலியாம் இபுறாகீமொலி கருதி வரைந்த வாசகத்தை
மிக்க ஆவல் கொண்டுணர்ந்தோர் மிகவும் ஜிகாதி** லாசை பொங்கி
பக்க பலனாய் சேர்ந்துகொள்ள பகர்ந்த இடத்தை நோக்கி செல்ல
திக்கு திசைகள் மனிதரெலாம் திரண்டார் கூட்டம் கூட்டமாக.

15. சிறந்த மக்கா பதிவாசி சிறக்கும் ஏமன் பதிவாசி
துறந்த மனித ரனைவருமே துடறாய்*** எல்கை செல்லலுற்றார்
சிறப்பு ஓங்கும் மதினாவாசி சிறந்த கூட்டம் பெரிதாக
இறப்பை நாடி அல்லாவுக்காய் இணங்கி எல்கை செல்லலுற்றார்.

மக்கள் தமையே வரவழைத்து மகிழ்வாய் புத்திமதி கூறி
பக்க பந்து உறவினர்க்கும் பதிவாய் சுருதி முறைகூறி
துக்க துயர்வு கொள்ளாமல் துய்யோ னிடமே புறஞ்சாட்டி
மக்கள் தனிலே மீறானை மகிழ்வாய் அழைத்தார் ஹுசைனரபி.

பீச பீலில் பிரியமானேன் பெரியோன் நபியின் பேரரான
தேசம் புகழும் இபுறாகீமொலி சிறந்த செய்கு பின்சென்று
வாசங் கமழும் நபிபால் செல்ல வருசையாக விருப்பமுற்றேன்
நேச னான என்மகனே நினது நோக்கம் உரைத்திடுவாய்!

புனிதத் திருநகரிலிருந்து

மக்கள் தனிலே சிறந்தவரும் மறைகள் பலதில் தேர்ந்தவரும்
மிக்க இறைவன் வணக்கத்தில் மேலாம் தவங்கள் செய்பவரும்
ஹக்கன் கிருபைக் குகந்தமீறான் கருதும் பிதாவின் மொழியுணர்ந்து
திக்கோர் புகழ பதிலுரைத்தார் தீரர் பிதாவின் மனம்குழைய.

உங்கள் பிதாவின் மூதாதை(யர்) உயிரைப் பெரிதென் றெண்ணாமல்
திங்கள் நபியின் கதீதின்படி திரும்பா(து) சுவனம் சேர்ந்திலையோ
எங்கள் பிதாவே உம்முடனே இசைந்து நானும் வருவதற்கு
தங்கள் மனது திருப்தியாக தயங்காது விடையே அளித்திடுவீர்!

---

* துஸ்மன் - விரோதி ** ஜிகாத் - அறப்போர்

*** துடறாய் - தொடராய்

20. மைந்தன் இளமைப் பருவத்திலே மகிழ்வாய் உரைத்த நன்மொழியை
மையல்விழி யாள் மனைவியுடன் மயங்கித்தயங்கி முடிவெடுத்தாற்
ஐயய மரவே தலீல் ஹதீதில்* அவருக் கெதிரே நவிலஏலாது
அய்யம் அகற்றும் மீறானை அன்பாய் நோக்கி சாற்றலானார்.

அல்லா தனக்காய் பீசபீலில் ஆவல் கொண்ட என்மகனே
பொல்லா தகற்றும் புத்திரனே! பொருத என்னுடன் வாருமென்று
நல்லோர் புகழும் ஹுசைனரபி நவின்ற சொற்கேட் மீறானும்
எல்லாம் வல்ல அல்லாவுக்கே இணங்கும் புகழே என்று ரைத்தார்.

சொந்த பந்து உறவினரும் சுகுர்த்தாய்ப் பணியும் அப்துகளும்
சொந்த பரிவா கனங்களுடன் ஜொலிக்கும் வாட்கள் பலதரித்து
எந்தத் திசையும் போற்றுமக்கா இணைங்கும் பதியே தனைநாடி
சொந்தப் பதியார் விடையும் பெற்று சுருக்காய் எழுந்தார் ஹுசைனரபி.

சொந்த பந்து உறவினர்கள் சுகமாய் வாழும் மக்காதனில்
பந்து மித்திரர் தமக்கான பரிவாய் குழாங்க ளுடன் சென்றார்
வந்து அவர்கள் வரவழைத்து வரிசை யாக உபசரித்தார்
கந்தம் கமழும் நபிபிறந்த கனத்த மக்கா** உள ரவறே!

உடையோ னொலியா மிபுறாகீம் உண்மை லிகிதம் தனையுணர்ந்து
சடையா தெழுந்து பீஸபீலின் சஹீதுமுறையை யுணர்ந்துவந்தோம்
மடைமை நீக்கி ஜிகாதுசெய்ய மன[illegible]தா டென்னு [illegible]ன் வருவாருண்டோ
இடர்கள் அகற்றும் ஹுசைனரபி இனிதா யெடுத்து ஓதினாரே!

25. ஓது முறைகள் தனையுணர்ந்து உடையோன் தனக்காய் வருவோமென்றும்
தீது அகற்றுமிவ் வூர்வாசிகள் தினமும் திரளாய் செல்கின்றார்
மாது மைந்தர் யாவருக்கும் மகிழ்வாய் உறைத்துச் செல்ல நாடி
தீது அகற்றும் குசைனாருடன் திரளாய் எல்கை நாடிச் சென்றார்.

கடிதம் பார்த்துப் பலவூரார்கள் கருதிக் கூட்டம் பெருங்கூட்டமாய்
சடுதி யாக எல்கை சார்ந்த சரிதை விபரம் தனையறிந்து
கடிதிற் மதினா வாசியுடன் களிப்பாய் செல்ல இபுறாகீமொலி
துடியாய் திக்கீர்*** தக்பீறுடன்**** துரித மாகச் செல்லலுற்றார்.

---

* ஹதீதில் - நபிபெருமானார் (ஸல்) அவர்களின் நல்லுபதேசம்

** மக்கா - அரபியகத்திலுள்ள முஸ்லிம்களின் புனித ஸ்தலம்

*** திக்கீர் - தியானம்

**** தக்பீர் - இறைவனைப் பெருமைப்படுத்துதல்

பழமைநகர் நோக்கி

சுல்த்தான் ஆரிபு இபுறாஹிமொலி சொல்லுக் கிணங்கி எல்கைநாடி
எல்லோர் வரவும் தக்பீருடன் இறைச்சல் முழக்கம் பெரிதாகி
சொல்லும் சலவாத்* தோசையுடன் சுருதி நபியின் பேரர் பின்னால்
கல்லும் மலையும் வனம்கடந்து கருதும் மதுரை யருகிற் சென்றார்.

வந்து பார்த்து வசதியான வைகை நதியின் சமீபத்திலே
சொந்த மாகக் கூடாரங்கள் சுகமாய் வசிக்க அடித்துக்கொண்டார்
பந்தம் போல வதனமுள்ள பைகாம்பர்** நபியின் பேரரானோர்
எந்த(ன்) முஸ்லிம் கூட்டமதின் எண்ணம் அறிய ஆவலுற்றார்.

நூறுக் கொருவர் தலைவராக நூறுபேரை யாக்கிபின்னே
ஆறுநூறு பேர்களுமே அப்து முதியோர் வேலையாளாம்
நூறு தலைவர் தமையாள நுவலும் அரபி ஹுசைனாரை
சோர்வு வராமல் தளம்நடத்த சுகுர்த்தாய் அமீரெனும்*** பட்டமீந்தார்.

30. இளமை மீறான் ஆலிமை இறையோன் கௌது இபுறாகீம்
தளங்கள் திரண்ட குழாங்களுக்கு தக்கோன் தலீல்ஹ தீதுகளை
பழக்க மாகவு பதேசித்தே பக்தி ஜிகாதில் கொள்ளும்படி
அழகாய் உறைக்க அனுமதியே அவருக் கீந்தார் அரசனொலி.

அரபி பார்ஸி உருதுகளில் அவரே மிகவும் தேர்ச்சியாளர்
அரபிக் கவிகள் பாடுவதில் அவருக் கேநிகர் இல்லையென்பார்
அரபிக் குழாங்கள் நடுவணியில் அவர்க ளிசைத்த பாஷைகளிற்
அறியும் படியா யுபதேசிப்பார் அழகு ஹுசேன் புதல்வருமே.

விக்கிரமபாண்டியன்

நீண்ட காலம் மதுராபுரி நிகழ்த்தும் தென் தே சமெல்லாம்
ஆண்டுக் கணக்காய் ஆட்சிசெய்த அரசன் பாண்டியன் தன்மரபில்
மீண்டாக் கர்வ முடையவனாய் மிகவும் கொடுமை செய்பவனாய்
நீண்ட நாளாய் அரசனாக நிலைத்தான் விக்கிரம பாண்டியனே!

---

* சலவாத் - நபி (ஸல்) மீது புகழ்ந்துரைப்பது

** பைகாம்பர் - நபி

*** அமீர் (உருது) - தலைவர்

மந்திரிக் கூட்டம் பெருத்தவனாய் மயங்கா சைன்னியம் மிகுந்தவனாய்
தந்திரி களிலே சிறந்தவனாய் தரணியிற் செல்வம் பெருத்தவனாய்
எந்தத் திசையின் அரசர்களும் இறைஞ்சிப் பகுதி கட்டும்படி
மந்த மான மீருதலாய் மகிழ்வாயிருந்தான் பாண்டியனே!

மதிப்பில் அடங்கா கோட்டைதனில் மாமதையாக அரசு செய்தும்
மதிப்பில் ஒவ்வா வீரர்கள்தம் மனதில் அஞ்சி வாட்களுடன்
கதிப்பாய் அருகிற் காத்துநிற்க களிப்பாய் அனேகர் துதிபாட
மதிப்பாய் தவிசில் வீற்றிருந்து மகிழ்வாய் அரசு செலுத்து நாளில்

தூது சென்ற தீரர்

35. இறையோ னின்னபி பேரரான இபுறா கீமொலி லிகிதம்கொண்டு
மறையோர் போற்றும் ஓர் அரபி மனதில் தீரத் துடன்சென்று
முறையாய் மன்ன னிடங்கொடுக்க முனிந்து மந்திரி பாவீந்தார்
திரைகள் பெற்று வீற்றிருக்கும் தீரன் அரச னிடம் கொடுத்தார்.

அரபி யான தூதுவனே அஞ்சா தென்னிடம் வந்ததென்ன
மறையின் நபியின் பேரர்கையால் மகிழ்வாய் வரைந்த கடிதந்த
சிறமேற் வைத்துத் தங்களிடம் சிறப்பாய் ஈய வந்தே னென்றார்
மறையின் நபியின் பேரர்தூதர் மற்றோர் நடுங்கத் திடனாய் சொன்னார்

சொன்ன மொழியைக்கேட்டரசன் சொல்ல வொண்ணு கோபமீறி
என்னை யெதிர்க்க எவருமுண்டோ என்று இசைத்து மந்திரியை
அன்னோன் கொடுத்த கடிதந்தனை அறையும் படியே சினந்து சொன்னோ
முன்னோ னொலியின் வாசத்தை முழுதும் உறைக்க முயன்றாரோ.

ஆதி பிஸ் மிலை* அழகாகவே ஓதி
நீதி இஸ்லாமில் நிலையா இருந்துகொள்ளும்
சோதி மர்க்கமதை துடறாதிருந்தக் கால்
நீதி முறையின்படி நிலையாய் திரைகட்டும்.

இம்முறை இரண்டில் ஒன்று இணங்கத் திருந்தாலோ
உம்மின் சிரசை வெட்டி உம்மூரைக் கைப்பற்றி
எம்மின் தீனதுவை எங்கும் நிலைநாட்டி
உம்மின் தேச மதில் உடையோனைத் துதிக்கச் செய்வேன்.

---

* பிஸ்மில் - இறை திருப்பெயர்

தூதர் தாக்கப்படுதல்

40. என்று எழுதும் வாசகத்தை இசைத்தார் மந்திரி எவரும் கேட்க
சொன்ன மொழியைக் கேட்டரசன் சொல்லும் நிபந்தனை ஒப்பமாட்டேன்
என்றும் புகழைக் கீர்த்தியோங்க எதிர்த்து வெட்டி நாசஞ்செய்வேன்
என்று உரைத்து தூதுவனை இணங்கா தடித்துத் துரத்தச் சொன்னான்.

உரைத்த மொழியை கேட்டரபி ஓடி வந்து ஒலியினிடம்
உரைத்த செய்தி அடங்கலையும் ஒழுங்கா யுரைத்தார் தூதுவரே
மறையோர் போற்றும் இபுறாகீம் மற்றும் தீனோர் தமை நோக்கி
இறையோன் தனக்காய் ஜிகாதுசெய்ய எழுங்க ளென்று இயம்பினாரே

போருக்குத் தயாராகுதல்

பீச பீலில் ஆவல் கொண்டு பிரிய மாக வந்தசேனை
தேசம் புகழும் அரபி வீரர் தீன்தீன்* என்ற முழக்கத்துடன்
நேச னான அல்லாவின் நிலையாம் திக்கீரை ஓதிக்கொண்டு
மோச மான பாண்டியனின் முதலாம் கோட்டை அடைக்கச் சென்றார்.

அடுத்துச் சென்று அணிவகுத்து அதபாய் தலைவர் உரைப்படியே
கடுத்துச் சினமாய் நிற்கிறதை கடிதில் அறிந்தான் அரசனுமே
தடுத்து யுத்தம் செய்துவெற்றி தடையில் லாமல் செயத்தைஎண்ணி
அடுத்து இருந்த தளகர்த்தர்களை அநேகக் கூட்டம் சேர்க்கச் சொன்னான்.

வீரப்போர்க்களம்

சேனைத் திரள்கள் அலைகடல்போல் செருமி நிற்கும் கூட்டமதில்
சேனைத் தலைவர் தமைநோக்கி சினந்து தீரத் துடன்சென்று
ஏனை யோரும் புகழும்படி எதிர்த்து வெட்டி தலைவனையும்
ஆணை பரிவா ரங்களை அடக்கியே சிறைவா ரும்என்றான்.

45. **அரசன் சேனை கடல்போலும் அரபிச் சேனை நதிபோலும்**
உரமாய் நின்று போர்செய்த உறுதி நிலைமை என்சொல்வோம்
பரனைத் துதித்து தக்பீறுகள் பார இடிகள் போல் முழக்கி
திரமாய் நின்று போர்செய்தே தினமும் பத்து நாளாச்சே.

நம்மில் முன்னோர் மூதாதை நடுங்கும் படியாய் செய்ததுவை
நம்மில் எவரும் அறியும்படி நவின்றார் மீறான் ஆலிமே**

---

* தீன்(தீன்) - மார்க்கம்

** ஆலிம் - மார்க்க அறிஞர்

எம்மின் வூரைக் காக்கும் எங்கள் இளமைச் சிங்கம் பாண்டியன்
உம்மின் மனைவி மக்கள்தமை உறித்தாய்ப் பேண அடருவீக.

என்று அரசன் இயம்பவுமே இணங்கி சேனமும் மரமாய்
தொன்று தொட்டு வாழுமிந்த துடறாமதுரா புரியை நாங்கள்
என்று மிகழ எதிரிகையில் இழந்து நகைக்க கொடுப்போமோ
என்றும் புகழ அரபிகளை இன்றே நாசஞ் செய்திடுவோம்.

ஜயபேரிகை

மன்ன னொலியா மிபுறாகீம் மறதி இல்லான் தன்னிடமே
மன்னன் சேனை மணவெண்ணம் மேல்மயங் காதிருப் பதும்புகன்று
மன்னன் கலையின் உரைப்படியே மகிழ்வா எதிர்க்கும் சிறுமடம்
உன்னிப் பாய்ந்து மேலிடவே உருகிக் கெஞ்சி துவா இரந்தார்.

அல்லா ஒலியா மிபுறாகீம் அஞ்சி இரந்த துஆவதனை
பொல்லா காபர் மறித்தெழுந்து புகழும் தேசம் ஒலிபால்வர
எல்லா மூமின் முஸ்லிம்கள் எங்கும் இஸ்லாம்தான் பரத்த
அல்லா வோகபூல் செய்துவிட்டான் அரபிகளுமே புதுமைப்பட.

50. சேனைத்தலைவர் ஹுசைனரபி செப்புகிறார் கூட்ட மத்தியிலே
சேனை அமீர் நமக்காகச் செய்யும் துஆஇன்று கபூலாகும்
மானை மீட்டும் நபிஅவர்கள் மார்க்கம் தவறா முஸ்லிம்களே
தீனை நிறுத்தி சொர்க்கம் சேர தீபரமாகப் போர் செய்வீர்.

சுவனம் சேர ஆசை கொண்டு சுருக்காய் நின்று போர் செய்தார்
புவனம் போற்றும் அரபிச் சேனை புகுந்து கோட்டை உட்சென்று
கவனம் செலுத்தி அரசன்தனை கடிதிற்கொன்று ஜயபேரிகை
புவனம் அதிர அடித்த உடன் போந்தார் காபர் திசைதிசையாய்.

இஸ்லாமிய அரசு

தேச மதையே கைக்கொண்டு திசைகள் அதிரத் தக்பீருடன்
தேசம் புகழும் இபுறாகீமொலி திசைகள் நடுங்கத் தகுத்தேரினார்
வாசங் கமழும் நபியுல்லாவின் வருசை பேரர் அரசராகி
நேசங் கொள்ள குடிகளெல்லாம் நிலையாய் வாழ அரசு செய்தார்.

அடங்கி நடக்கும் அரசர்களை அவர்கள் மனம்போல் நடக்கவுமே
திடனாய் மார்க்கம் உறுதிகொண்டால் தீபர மாய்த்தீ னிற்சேர்ப்பார்
மடமை நீங்க மார்க்கமதை மகிழ்வாய் உரைத்து தீனிலாக்க
திடனாய் ஆலிம் களையனுப்பி தீரமாயத் தீனில் லாக்கச் செய்தார்.

முஸ்லிம் கூட்டம் பெருக்கமாக முதலோன்* தனையே வணக்கம் செய்ய
இஷ்டம்போல பள்ளிகட்டி இடர்கள் நீக்கி செய்துவைத்தார்
முஸ்லிம் அல்லா(த) அரசரிடம் முறைபோல் திறையும் ஏற்படுத்தி
கஷ்டம் செய்யாமல் நாட்கடத்தி கருதி அரசு புரிந்தாரே.

55. அரபிச் சேனை அடங்கலையும் அன்பாய் அழைத்து உபசரித்து
அரபு தேசம் செல்ல நீங்கள் ஆசைகொண்டால் விடையளித்தேன்
துறவி யாக நாடினாலோ துன்பம் வாரா தென்னுடனே
மறதி இல்லான் தனைவணங்கி மகிழ்வாய் தனித்திருங்களென்றார்.,

இஸ்லாமிய மார்க்கப்பிரச்சாரம்

அரபி வீரர் பெரும்பாலோர் அவர்கள் தேசம் செல்லலுற்றார்
அரபி வீரர் சில பேர்கள் அவர்கள் இசைந்த தேசம் சென்றார்
அரபி வீரர் அறிவொளி அன்பாய் இஸ்லாம் பரப்பச் சென்றார்
அரபி வீரர் சிலபேர்கள் அரசின் வேலை தனில் அமர்ந்தார்.

அரபித் தலைவர் ஹுசைனரபி அவர்தம் மகனாம் மீறானும்
அரபி அப்து அவர்கள்கிளை அடங்கல் ஒலிபா விருந்தார்கள்
உரமாய் உளரைக் காத்துக் கொள்ள உயர்நத வேலை ஹுசைனிருந்தார்
அரபி ஆலிம் மீறானும் அன்பாய் காளி வேலையானார்.

அரபி புலவர் மீறானுக்கு அன்பாய் விவாகம் நடப்பிவிக்க
அரசன் பாண்டியன் அழகாம் பெண்ணை நடத்தி வைத்தார்
அரபி அரசர் இபுறாகீம் அவரின் அனுமதிப்படி நடந்து
ஷரகு தவறா ஹுசேனரபி சரியாய் நடந்து வாழுநாளில்

தனக்கு வேண்டும் கிளைகள் அப்து தக்க இளமை வாலிபர்க்கு
தன்க்கு உரித்தாம் கோத்திரத்தில் தக்கமணங்கள் செய்துவைத்தார்
பிணக்கு வராமல் பிரஜைகளை பிரியமாக நடத்தி வைத்தார்
குணக்கே டகற்றி குடிகளையே குசேன் அரபி காத்து வந்தார்.

60. துய்யோன் நபியின் பேரரான துலங்கும் இமாம் குசேன்மரபில்
மெய்யாம் தலைமுறை பதினாறில் மேவும் சமானில் ஒலியாக
துய்தாம் மதினா தனிலிருந்து துலங்கும் மதுரா புரிவந்து
மெய்யாம் தீனைப் பரப்பிவைத்து மிகவும் நீதி நடத்துநாளில்

---

* முதலோன் - இறைவன்

மீண்டும் போர்

முன்னே மதினா தனிலிருந்து முறையாய் ஜிகாதில் மரணமாக
தன்னந் தனியா யிருந்துகெஞ்சி தக்கோ னிடமே கேட்டதுஆ
இன்னம் நாட்களிதுவரையும் இருதி ஜிகாதில் மரணமில்லை
முன்னோனான ரஹுமானே முடிவில் துஆவைக் கபூல்செய்வாய்!

அழுது ஜிகாதில் மரணமாக அல்லும் பகலும் துஆ இரந்து
தொழுது பனிரெண் டாண்டாக துடராய் நீதி அரசும் செய்து
பழுது வராமல் குடிகள் பேரில் பட்சம் வைத்துச் சேனைகளை
ஒழுங்காய் அவர்க ளிஷ்டப்படி ஒதுங்க அனுப்பித் தனித்திருந்தார்

சேனை தளங்க ளில்லாமல் சிறப்பா யிருப்பதறிந்து கொண்டு
சேனைத் தளங்கள் பலதிசையாய் சிதறிப்போன பாண்டியர்கள்
சேனைத் தளங்கள் சேர்த்துக்கொண்டு சினமாய் வந்து சதியுண்டாய்
சேனைக் காவல் இல்லாத சிறந்த குடிகளை வெட்டினாரே.

ஹுசைனரபி சஹீது

வெட்டும் சத்தம் இரவிலாக விசையாய் கூக்குரல் பலஇடமும்
மட்டுதிட்டம் இல்லாம் மனங்கள் நடுங்கக் கேட்கலாச்சு
வெட்டும் ஆயுதம் பலதெடுத்து விரைவாய் செய்ய ஏலாமல்
தட்டு கெட்டுத் தடுமாறி தரையில் வீழ்ந்து மாண்டார்கள்

65. சேனைத்தலைவர் ஹுசைனரபி திரளாய் ஜனங்கள் சேகரிக்க
ஏனைய வசதி இல்லாமல் எதிர்த்து வந்த காபர்களை *
மானம் காக்க வெட்டிமாய்த்து மாய்கை துன்யா தனைநீங்கி
சுவனவாழ்வை தனைநாடி சொர்க்கப்பதியை சார்ந்தாரே!

பார்தனில் கீர்த்தி மிகப்பெற்ற படையின் தலைவர் ஹுசைனரபி
நேர்பெறவே சஹீதாகி நிலத்தில் வீழ்ந்த விபரமதை
கூர்மையாக கேட்டெல்லோரும் கூடி சிதறி ஓடலுற்றார்
நேர்மையான இபுறாகீம் நிலையாய் கோட்டை வுள்ளிருந்தார்.

வல்லோ ஹெலியாம் இபுருகீம் வருசை தஹஜ்ஜத்** தொழுது கொண்டு
வல்லோனிடமே சஹீதை நாடி வணங்கிக் கேட்கும் சமயமதில்
பொல்லா காப ருள்புகுந்து புகழும் ஒலியை வெட்டினுர்கள்
நல்லார் வாழும் சுவனநாட்டில் நல்கி சுகமாய் வாழச்சென்ருர்

---

* காபிர் - இறைமறுப்பாளன்

** தஹஜ்ஜத் - நடுநிசித் தொழுகை

வல்லோன் நபியின் தவமுறையில் வருசையாய்வரும் பதினெட்டில்
வல்லோ ஞெலிகள் புகழும்படி வந்தார் மதிஞ தனிநகரில்
எல்லோரும்புகழ் ஒலியுல்லாவின் இரந்த துஆ நிறைவேறி
நல்லோர் வாழும் சொர்க்கபதி நாடிச் சென்ருர் பவுசுடனே!

புதிதாய் இஸ்லா மார்க்க மதில் புகுந்த முஸ்லிம் எல்லோரும்
சதிவாய் வந்து போர்செய்யும் சதிவை உணர்ந்து மறைந்தோரும்
பதிவாய் பணிந்து கொண்டோமென்று பகர்ந்து ஒத்து பூரணமாய்
அதியாம் பதியாம் அரசனுக்கு அடங்கி நடந்து இருந்துகொண்டார்

வீரர்களின்வீழ்ச்சி

70. வாசங் கமழும் நபிபேரர் வருசை சுவனம் சென்றதுவும்
நேசமான அருமைப்பிதா நிகழும் இரவில் மாண்டதுவும்
பாச மான அரபிவீரர் பகரும் ஷஹீதில் மாண்டதுவும்
மோச மான நிலைமைதனை முற்றும் அறிந்தார் மீருனே!

யுத்தம் செய்து நிலையறிந்து யூகம தாகப் பின்வாங்கி
தத்தம் மனைகள் விட்டகன்று தனித்து ஒரிடம் மறைந்துகொண்டார்
நித்தம் நாயன் தனைத்தொழுது நிறைந்த முஸ்லிம் குழாங்களுடன்
பத்தம் வைத்து பணிந்துகொண்டார் பகரும் ஆலி மீருனே

பகர்ந்த முஸ்லிம் அனைவருமே பயகாம்பர் பேரர் சகீதொலியின்
அயர்ந்த மேனி குளிப்பாட்டி அன்பாய் திக்கீர் முழகத்துடன்
உயர்ந்த சந்தூக்* கில்வைத்து உகப்பாய் ஏர்வாடி தனிலடக்கி
உயர்த்தி யான ரஹ்மானிடம் உருகி துஆ இரந்து சென்ருர்

முஸ்லிம் தலைவா குசேனுடனே முன்ஞேன் தனக்காய் மரித் தோரையும்
இஸ்டப் படியே பூரணமாய இஸ்லாம் ஒழுங்குப் படிஅடக்கி
கஸ்டமில் லாமல், ஒற்றுமையாய் கலந்து மதுரை புரிஊரில்
நஷ்டம் வருமல் நாயன்தனை நடுங்கித் தொழுது வாழுநாளில்

பாண்டிய அரசில் பணியில் அமர்தல்

75. பாண்டி அரசன் மீருனை பண்பாய் அழைத்து உபசரித்து
"மாண்டு போன மனிதர்களை மனதில் நினைத்து மயங்காதீர்
என்ற மட்டும் என்னிடத்தில் இணங்கி வேலை தனிலமரும்
நீண்ட காலம் முஸ்லிம்களுக்கு நிலையாய் நீரே தலைமையாக

*சந்தூக் - அரபிமொழியில் .பெட்டி. என்று பொருள் இறந்தவரின் உடலை எடுத்துச் செல்ல பயன்படுத்தப்படுவது.

பாண்டி அரசன் மொழிகேட்டு பகரும் முஸ்லிம்களை ஒற்த்து
பாண்டி அரசன் குடிகட்கும் பகரும் காளி யாயிருந்தார்
பாண்டி அரசன் தன்னிடத்தில் பரிசும் சம்பளம் பலதும் பெற்று
பாண்டி அரசன் தேசமதில் பலஆண் டாக வாழ்ந்திருந்தார்.

இஸ்லா மதத்தின் போதனையை எங்கும் பரத்த* நாட்டமுற்று
இஸ்லா மதத்த ரவர்களிடம் இணங்கி விடையும் பெற்று பின்னே
அவஸ்தை நீக்கி ஆட்கை செய்யும் அரச னிடமும் விடைபெற்று
அவஸ்தை யில்லான தனை நாடி அன்பாய் வருவோர் வாருமென்ருர்.

மீருன் குடும்பம் அனைவர்களும் மிகவும் அன்பாய் தொடர்ந்தவரும்
சீராய் சேர்ந்து புறப்படவே சிறக்கும் கூட்டம் பெரிதாச்சு
நேராய் நடத்தும் அரசனிடம் நிகழ்த்தி செல்ல மீருனும்
சீராய் நடந்து குழாங்களுடன் சிறந்த அரசன் சமூகம் சென்ருர்

பட்டங்கள் பெறுதல்

சென்று அரசன் பால் பணிந்து சிறப்பா யிருந்து உறைத்திட்டு
என்றும் அரசன் நிலைக்கும்படி இயம்ப நாமம் சூட்ட எண்ணி
எண்ணும் மதிப்பில் அடங்காத இணங்கும் மொழியாம் முத்தைசேர்த்து
என்றும் விளங்க முத்துமீருன் என்று இசைத்துப் பட்டமீந்தார்

சேதுநாட்டில் மார்க்கப் பிரச்சாரம்

பட்டம் பெற்று பரிசுபெற்று பக்கத் துணையாய் குழாங்களுடன்
பட்டம் ஈந்த அரசனுடன் பலர்கள் கூடி வழியனுப்ப
திட்ட மான பதியைவிட்டு திரண்டு நடந்தார் முத்து மீருன்
வட்ட மான பதியதுவாம் வளரும் சேது பதியே சென்ருர்.

80. சேது பதியில் சென்றிடவே சிறக்கும் அரசன் எதிர்அழைத்து
போது மான வசதிகளை பொதுவா யளித்து இருக்கச் செய்தார்
நீத மான இஸ்லாமதை நிரப்ப நாடி அங்கி கிருந்துகொண்டு
ஏதும் அறியா மனிதரிடம் இணக்க மாக அறிவுரைத்தார்

குர்ஆன் ஹதீதுகளை குறிப்பாய் மனதில் பதியும்படி
சறுகி டாமல் நேர்வழியேவர சராத்து முதலிய எடுத்துரைத்தார்
கருதி தீனில் கூட்டங்களாய் கலிமாச் சொல்லி சேர்ந்தார்கள்
பெருத்த கூட்டம் சேர்ந்ததின்பின் பெரிய பள்ளி கட்டி வைத்தார்.

* பரத்த - பரப்பிட

அநேக நாளாய் அங்கிருந்து அன்பாய் எவரும் பிரியமாகி
சிநேக வாஞ்சை அதிகரித்து சிறப்பாய் ஜாதிபேதமின்றி
அநேக ஆண்கள் பெண்கட்கும் அழகாம் விவாகம் நடத்திவைத்தார்
சிநேக மதிகம் ஆனதினுல் சிலர்கள் அங்கே இருந்து விட்டார்

தென்பாண்டி நாட்டில் தீன் பிரச்சாரம்

அறிவிற் சிறந்த முத்துமீருன் அவர் களிடமும் விடைபெற்று
பரிகள் சகிதம் குழாங்களுடன் பகரும் அரசன் பரிசும்பெற்று
துரித மாக தேசம் விட்டு துலையாம் வழிகள் தான் கடந்து
விரிவா யிருக்கும் தேசமதாம் வீர கேரளம் புதூர்தமக்கே
பெரிய அரசர் தங்களிடம் பெரிதாய் பரிசும்பட்டங்களும்
பெரிதாய் பெற்று கூட்டத்துடன் பெயர்ந்து வந்த விபரமதை
சிறிதாய் இருந்து அரசாளும் சிறந்த பதியின் அரசனென் போன்
துரித மாக எதிரேவந்து துதித்துப் புகழ்ந்து உபசரித்தான்

85. சிறிய அரசன் பதிதனிலே சிறந்து விளங்கும் படியாக
உரித்தாய் அவிடம் பதிவாளுர் உயர்ந்த குலமே முத்துமீருன்
தெரியும் படியாய் தமிழ் தெலுங்கு தெளிவு பெறவே தேரசையனுர்
உரித்தாம் இஸ்லாம் மார்க்கமதை உரைத்து தீனை பரப்பிவைத்தார்

மதுரா புரியில் பாண்டியன் தேசத்துப் பெண்ணை
மதுரா புரியில் தான்வைத்து மகிழ்ந்து விவாகம் செய்துபின்னே
மதுராபுரியில் மக்கள் இன்றும் மக்கள் பெருகி வாழுநாளில்
மதுர மான மொழியுடைய மனைவிந் நாட்டில் மரித்துவிட்டாள்

மனைவி இறந்த முத்துமீருன் மக்கள் தமக்கு அறிவுருத்தி
மனைவி தனையே குளிப்பாட்டி மதிப்பாய் தொழுது அடக்கிவிட்டு
கனதி துஆ பாத்திகா* கருதி ஓதி தர்மம் செய்து
அனைவோ ரெவர்க்கும் ஆசிகூறி அன்பாய் தென்காசி செல்லலுற்ருர்.

முத்துமீருன் - ஆலீம் சாகிபாதல்

அறிவில் படிப்பில் தேர்ச்சையில் அவரின் நாமத்துடன் சென்று
அறியும் படியாய் முத்துமீருன் அருளும் ஆலிம் சாகிபென்று
தெரியும் படியாய் விளம்பலுற்ருர் தென்மது ரைநக ரத்தார்கள்
அறையும் படியாய் அறிவோர்க்கு அதுமுதலே சாகிபாச்சு.

---

*பாத்திகா - திருமறையின் முதல் அத்தியாயம்; இதனை இறந்தவரின் ஆத்ம சாந்திக்காகவும் ஓதுவது வழக்கம்

அரபி வீரர் ஒருவருக்கு ஆயிரம் பேர்கள் நிகரே இல்லை
அரபிக் குதிரை தனைப் போல ஆலம் பார்த்தால் கிடையாது
அரபி வீரர் திடன்பார்த்து அதற்குத் தக்க நாமமாக
அரபிக் குகந்த இந்தியர்கள் அதை ரா வுத்தர் என்றறைந்தார்

90. அன்று முதலே இதுவரையும் அவரின் மக்கள் ராவுத்தராய்
என்றும் உரைக்க அனுபலமாய் இருப்ப தெவரும் அறியலாமே
தொன்று தொட்டு அவருடனே துடர்ந்தே ரெவரும் ராவுத்தராய்
இன்றும் தென்தேச மெல்லாம் இலங்க வந்த நாமமாட்சே

குதிரைவீரர் - ராவுத்தர்

ராவுத்தர் என்ற நாமமது ராசர் புகழும் குதிரைவீரர்
ராவுத்தர் என்ற நாமமது நலமாய் முதலே இவர்களுக்காம்
ராவுத்தர் என்ற நாமமதில் நவில பலர்கள் ஆசைகொண்டு
ராவுத்தர் என்ற கூட்டத்துடன் நல்கி திரளாய் கூட்டமாச்சே

தேச மதிலே சிறந்ததுவாம் தென் மதுரை நாட்டார்கள்
பாசம தாகவே வந்து பணிந்து குற்ருலம் தனிலிருந்து
நீசச் செய்கை நீங்குமென்ற நினைப்பை வைத்துக் குளிப்பார்கள்
ஆசா பாசம் மாநகரம் அழகாம் தென்காசி ஊராமே

தென்காசி நகர் வருதல்

செழிப்பில் மிக்க தேசமதாம் சிறப்பாய் நதிகள் ஓடுமிடம்
புளிப்புரை யாபழ வர்க்கங்கள் பகரும் பூஞ்சோலை ஊராம்
இழிவு மொழிகள் உரையாவிடம் இனிய மொழிகள் பேசுமூராம்
செழிப்புற் றிருக்கும் சீமான்கள் சிறந்திலங்கும் தென்காசியாமே

கல்வி அறிவிற் முதிர்ச்சிபெற்ற கவிஞர் இருக்கும் ஊரதுவாம்
கல்வி அறிவால் கடாட்சமதாய் கழரும் கவிஞர் தேசமதாம்
கல்வி அறிவால் பக்தியொடு கட்டு மடங்கள் கோவிலூராம்
கல்வி சாலை மிகப்பெருக்கும் கனத்த தென்காசி மாநகரே

95. **ஏழு தலைமுறை யாககெட்டி இலங்கும் கோபுரம் அமைந்த ஊராம்**
எட்டாம் தலைமுறை அரசஞக இறைவன் பாபு அரசுகாலம்
பாழுகள் இல்லாமல் இடங்களெல்லாம் பகரும் ரத்தினம் விற்கும்காலம்
ஆளுகை செய்யும் அரசனிடம் அடங்கா வீரர் இருக்கும் காலம்.

முத்து மீரூன் ஆலிமென்ற முதியோரான சாகிபுடன்
பத்தம் வைத்து துடர்ந்து கொண்ட பந்து மித்திரர் நாற்பதுபேர்
உத்த மருய்துணை சேர்ந்து ஊரின் அருகில் வரும்போது
பத்தம் வைத்து எதிர்சென்று பணிந்து பாபு* அழைத்துவந்தார்

அழைத்து வந்து எல்லோரும் அழகு மண்டபம் தனிலிருக்க
முளைத்து ஒருவர் எழுந்திருந்து முத்து மீரூன் ஆலிமை
மழைபோர் கவியால் புகழ்ந்திருந்தார் மறையோர் ஒருவர் பின்எழுந்த
இழையில் லாமல் இவரின்செய்கை இனிதா யெழுந்து சாற்றுலுற்ருர்.

சிறந்த தேசத் தலையவரின் சிறக்கும் செல்வ மகனுரே
பரந்த தேசம் தனிலே சென்று பகரும் வேதம் உரைப்பவரே
சிறக்கும் தேசத் ததிபதியால் சிறந்த பட்டம் பெற்றவரே
துறக்கும் மனிதர் தங்களுக்கு துலங்க ஞானம் மொழிவோரே.

நீவி ரிங்கு வந்ததுவே நிகழும் எங்கள் தவப்பலனும்
ஆவி யுடலும் போலஇங்கே அன்பா யிரும்என் றுரைத்தார்
புவியின் அரசர் பாபுஎன்போர் புகழத்தக்கப் பட்டமீய
மேவிக் குடிகளிடமி *** மிகவும் எல்வர் ஒப்புக்கொண்டார்.

‘பங்காரு’ பட்டம் பெறுதல்

100. நாமோ தெலுங்கு நமதுபாஷை நவிலும்படியே அமையவேணும்
ஆமோ தித்து ஒருமித்து அரசன் சபையில் உரைக்கலுற்ருர்
கோமா னுன பூபதியோ குறிப்பாய் பங்காரு** பட்டமீந்தார்
சீமானுன சபையோர்முன் செப்பினுரெவரும் வியப்புரவே

பங்காரு என்ற நாமமுடன் பகரும் முத்து மீரூன் என்று
திங்கள் போல எனும் விளங்கி திடனுய் வருவதைப் பாருமையா
உங்கள் முழிப்பில் உணரும்படி ஓதும் நாமம் கேட்டிலையோ
எங்கும் புகழ்ந்து கவிபாடும் இறைச்சல் மொழியை அறிந்துவிட்டோம்

இஸ்லாமை வெளியாக்கி இவ்வூரில் பரப்பிவைத்து
பஸ்காரமாய் கீர்த்திபெற்ற பங்காரு முத்துமீரூன்
விஸ்தாரமாய் நடந்த விபரம் உரைக்கின்றேன்
உற்சாகத்துடன் உணர்ந்து பார்

---

* பாபு - பாண்டிய அரசன்

** பங்காரு - (தெலுங்கு) - தங்கம்

தெற்கில் ஒலித்த தீன் குரல்

தெருவில் திரண்ட கூட்டமதில் தெளிவாய் கடவுள் தனையறிய
பருவ மாகக் கல்பதனில் பதியும் படியாய் எடுத்துரைப்பார்
தெருவில் தேர்கள் உற்சவங்கள் திரண்டு நடத்தும் சமயத்திலும்
கர்வம் அடக்கிக் கடவுள்தனைக் கெஞ்சி இரந்து வணங்கச் சொல்வார்
பொய்கள் களவு சூதுமோசம் பொல்லா வட்டி விபசாரம்
வாய்மை தவறு வல்வந்தங்கள் வம்பு வழக்கு வீண்பேச்சு
மாய்கை துன்யா* வலையில் சிக்கி மருண்டுபோ காமல் மன்னேன்பால்
தூய்மை யாகத் துதிகள்கூறி துடரும் வழியைத் தேடச் சொல்வார்

105. ஞான வான்கள் கவிகளாலும் நவிலும் மறையின் மொழியினாலும்
தீனர்க ளாக குபிரேர்களை திரண்ட குழாங்க ளாக்கிவிட்டார்
மான ஒழுங்கு கற்புடைய மாதர் களுமே அறிவைக்கேட்(டு)
ஈன பக்தி தனையொழித்து இஸ்லா மதிலே சேரலுற்றார்

இஸ்லாம் மார்க்கம் பரவுதல்

ஆண்கள் பெண்கள் அனைவருமே அல்லா தனையே தொழுவதற்கு
தூண்கள் நாட்டிப் பள்ளிகட்டி துதிக்கும் படியாய் செய்துவிட்டார்
கோன்கள் போற்றும் பாப்அரசர் குலத்தில் ஆண்கள் பெண்களுமே
தீனி லாசை மிகக்கொண்டு தீனி லாகி மறைந்திருந்தார்.

அரசர் வேலை தனிலமர்ந்து அழகாய் ஊரைக் காத்துவரும்
தரத்தில் சிறந்த உத்தியோகஸ்தர்கள் தனித்து சிலர்கள் ஈமான்கொண்டார்
திரத்தில் கீர்த்தி புகழைப்பெற்ற திரல்வர் அநேகர் ஈமான்கொண்டார்
அரசன் பாபு இதுகளையே அடங்காச் சினமாய்ப் பார்த்துவந்தான்.

அரண்மனையின் மாதர்களோ அடங்கா தீனில்ஆசை கொண்டு
பரன்தனையே அறியும் பாங்கு பகரும் படியே அழைத்திடுவார்
திரனுய் ஹதீது தலீலுகளை தீர்க்கமாக எடுத் தோதி
பரனை நாடி தினமே போய் பகர்ந்து திரும்பி வந்திடுவார்

மன்னன் மகளும் மார்க்க நெறியும்

மாதர்க் கரசி மன்னன்மகள் மங்கைப் பருவம் வருமுன்பே
மாதர்க ளரியும் படிப்புகளும் மற்றும் ஹிந்து சாஸ்திரமும்
மாந்தர் போற்ற கற்றுத்தேர்ந்து மகிழ்வா யிருக்கும் சமயமதில்
மாந்தர் தீனி லாகும் செய்தி மனதில் அறிய ஆவலுற்றாள்

---

* துன்யா - உலகம்

அரண் மனையில் தினமும்வந்து அரபிவேந்தர் அருளும் நூலை
திரனுய் அறிய ஆசைகொண்டு திடனுய் அங்கே சென்றுவந்தாள்
பரனே ஒருவன் என்றுகாட்டும் பகரும் மொழியை உண்மைகொண்டு
திரனுய் அரபி ஆலிமுடன் திரமாய்ப் பேசி தர்க்கிப் பாள்.

பலகலை யின்பல நூல்கள் பகரும் உரைகள் தனையுணர்ந்து
திலக மதேஇஸ் லாம்என்று தீனி லாக எண்ணமுற்று
குலங்கள் தம்மில் பெண்கள்தமை கூட்டி தீனி லாகச் சொல்லி
பலம் தாக உறுதிகொண்டு பதிவாய் தீனி லாக்கிவிட்டாள்

மன்னனின் ஆணை

குலத்தில் ஆண்கள் பெண்களுமே குறிப்பாய் இஸ்லா மானதுவும்
தலத்தைக் காக்கும் வீரர்களும் தக்க சிப்பாய் ஆட்களுமே
பலத்த குடிகள் மிகுதம்பேர் பிரியம் வைத்துச் சேர்ந்ததுவும்
தலத்தை ஆளும் பாபுஅரசன் தனித்தி ருந்தே யோசித்தான்.

தேச மதிலே இஸ்லாமது சிறந்து நிரம்பி பரவிவிட்டால்
தேச மதிலே ஆள்கைசெய சிறந்திலங்க அரபியாவார்
பாசம தாக இஸ்லாமதில் பற்றிப் பிடிக்க ஒட்டாமல்
நீசச் செய்கை செய்ய எண்ணி நினைப்பில் உறுதி வைத்தானே!

தீனி லான பேர்கள் தானும் திசையைக் காக்க எண்ணுது
தீனி லான பேர்களுமே திரத்தசே வுகம்தனி லாகாது
தீனி லான பேர்களுமே திடனுய் கோவில் போகாமல்
தீனி லான பேர்கள் தமை திறமாய் ஆணை பிறப்பித்தான்.

115. இழிவு செய்தும் இஸ்லாமானேர் இணங்கும் தீனை விடவேயில்லை
பழிப்பு வராமல் ஜூம்ஆ* அன்று பகரும் தொழுகை முடித்திடுவார்
இழிவு சொற்கள் அகற்றும் தக்பீர் இறைச்சல் மொழியைக்கேட்பான்
இழிவு நமக்கு வந்ததென்று இடைஞ்ச லுடனே சலிக்கலுற்றான்.

அரசிளங்குமரிமீது அபாண்டப்பழி

117. என்ன செய்வோம் ஏதுசெய்வோம் என்று மந்திரி மார்களிடம்
முன்ன தாக மொழியும்படி மூர்க்க மாக இருக்கும் வேளை
பின்னே ஒருவன் ஓடிவந்து பெரிய அரசன் சமூகம் நின்று
மன்னன் மதிகள் பரிதபிக்க மயங்கி பயந்து நவிலலுற்றான்.

* ஜூம் ஆ - வெள்ளிக் கிழமை விசேஷத் தொழுகை

எங்கள் தேசத் ததிபதியே எங்கும் புகழும் பாபரசே
உங்கள் மகளாம் சுந்தரியோ உகப்புடனே தீனிலாகி
எங்கும் புகழும் நும் அரண்மனையில் இலங்கும் மேன்மாடியிலே
தங்கும் அரபிக் குருவிஞேடு தனித்திருக் கவும் கண்டேன் என்றுன்.

சொன்ன மொழியைக் கேட்டவுடன் சொல்ல வொண்ணு கோபமீறி
மின்னல் போல விரைவில்ஓடி மெதுவாய் உற்று நோக்கும் போது
மன்னன் மகளாம் சுந்தரியோ மகிழ்வாய் தோழிமார்களுடன்
பின்னல் அகற்றும் கலைநூலை பேசி அரபி எதிரிருந்தாள்.

பங்காரு முத்து மீரான்என்ற பகரும் ஆலி மாஞேரே
பங்கம் வருமல் உடல்ஆவியை பயந்து பேணிக் காத்துக்கொள்ளும்
எங்கும் இலங்கும் அரண்மனையில் இனிமேல் சென்ருல் கொன்றிடுவேன்
எங்கும் அரச செலுத்தும்பாபு எழுதி தாக்கீது கொடுத்துவிட்டான்.

120. பெண்கள் ஆண்கள் வருமிடங்கள் பேணி வசதி குறித்துவிட்டார்
தினங்கள் தவருது குபிரோர்கள் தீனிலாகி சேர்ந்துகொள்வார்.
பணங்கள் பெருத்த பாக்கியர்கள் பங்கம் வருமல் காத்திருந்து
தினங்கள் தவருது பள்ளிசென்று தீபர மாக தியானம்செய்வார்.

தலீலு கதீது எடுத்துரைக்கும் தக்க சபையில் பெண்டிர்களும்
இழிவு அகற்ற அறிவுகற்க இளைஞர் பிராயர் முதியோர்களும்
பழிப்பை அகற்ற வந்துகேட்டு பண்பாய் தீனில் சேருவதை
களிப்பாய் கண்டு முத்துமீரான் ஹக்கன் தனக்கே சுஜூது* செய்வார்.

அந்தப் புரத்து மாதர்சிலர் அறிவைத் தெளிய ஆவல்கொண்டு
எந்தப் புறத்தில் வகுலுறைகள் இயம்பும் நேரம் தனையறிந்து
சொந்த மான கூட்டத்துடன் துடர்ந்து வந்து விபரமான
பந்தம் போல விளங்கி பின்னே பகரும் தீனிலுறுதியாஞர்.

மன்னன் மகளின் மடல்

சொந்தத் தேசத்திபஞன சூரன் பாபு அரசன் மகள்
பந்தம் போல அழகுடைய பத்தினி சுந்தரி நாயகியும்
சொந்தத் தோழி அடிமையுடன் சுருதி முறையை பணிந்துகேட்பார்
எந்தக் கல்வி தேர்ச்சியிலும் இவளுக கெதிரி இல்லை என்பார்.

தீனின் கூட்டம் பெருக்கமாயும் தீரர் மக்கள் நெருக்கமாயும்
பேணும் பந்து உறவினர்கள் பிரியா திருக்கும் சபைதனிலே
தோணும் குபிரோர் கூட்டம்வந்து தூய்தாம் தீனி லாகும்போது
கோனின் மகளாம் சுந்தரியின் குறித்த லிகிதம் வந்ததுவே

* சுஜூது - இறைவனை சிரம்பணிந்து வணங்குதல்

ஒற்றனின் உரை

125. குறித்த லிகிதம் தனையுணர்ந்த கோமான் வேதக் கடலான
தெரிந்த பங்காரு முத்துமீருன் திரத்த ஆலிம் சாகிபானோர்
உரித்தா ய்சில வசனங்களை உகப்பா யெழுதித் தூதன் கையில்
குறிப்பாய் கரத்தில் கொடுவென்றே குணமாய் உறுதி வாங்கிக் கொண்டார்
கடிதம் வரவும் பதில் எழுத்தும் கருதி உணர்ந்த கடுங்காபர்
சடுதியாக அரசனிடம் சாற்ற எழுந்து போய் பணிந்து
கொடூரமான மொழியாக குறிப்பாய் படுதூர் கடிதமென்று
திடுகூருக மொழிந்துவிட்டு தீர்க்கம தாய அருகில் நின்ருர்.

அருகில் நின்ற காபர்களை அரசன் சினந்து கூர்ந்து பார்த்து
உறுதியாக சபைதனிலே உரைத்த மொழிகள் அடங்கலுமே
கருத்தாய் கடிதம் தனிலிருந்தோ கருதி அரசன் கேட்கவுமே
பெருத்தக் கேள்வி தனிலிருந்தே பிறந்த மொழியை நவின்ரேமென்ருர்.

தூதன் தனையே விளித்தரசன் துலங்க உரைத்தால் உயிர்பெருவாய்
நீதம் தனையே விட்டுரைத்தால் நிலத்தில் சிரசை விழச் செய்வேன்
பதர உரைத்த மொழியைக் கேட்டு பார்ஆ ளும் அரசே நான்
விதர்ப்பம் அறியேன் கடிதமீந்தேன் விரைவில் பதில் வாங்கி ஈந்தேன்.

பாண்டிய அரசன் கட்டளை

செங்கோல் நடத்தும் பாப் அரசன் செலுத்தும் சைனியத் தலைவர்களை
பங்கும் வராது பாதுகாக்கும் பகரும் மந்திரி கூட்டங்களை
எங்கும் இடர்கள் வராதகற்றும் இலங்கும் கண்ணிய பிரபுக்களை
செங்கோல் புரிசிற் றரசர்களை சிறப்பா யழைத்துச் சாற்றலுற்ருன்.

பொங்கும் கடல் சூழ் புவியிடத்துப் புகழே பெற்று ஓங்கும் போது
எங்கு மில்லா மார்க்கம்தனை இனிதா யுரைத்து பிரித்துவிட்டான்
பங்கம் இல்லா நம்மதத்தைப் பாழாய் ஆக்கிப் பேசுகிருன்
சுங்கம் வருத குடும்பங்களில் சுகுர்த்து நீங்கச் செய்துவிட்டான்.

மனைவி புருஷன் மத்தியிலே மதத்தால் இரண்டு படுத்திவிட்டான்
சுனையின் நீர்கள் பெருகுமாப்போல் சுகுர்த்தாய் கூட்டம் பெருக்கிவிட்டான்
முனையாய் கூட்டம் சேர்த்துக் கொண்டு முடிவில் அரசும் பறித்துடுவான்
இணையாயிருக்க என்மகளை இணங்கக் கடிதம் வரைந்துவிட்டான்.

தேச மதிலே இடர்கனீங்க தீபரமாகச் செய்யாவிட்டால்
பாசம் நீங்கிக் குடிமகள் தம்மில் பாழும் குழப்பங்களாகும்
நீசச் செய்கை யகற்ற நீங்கள் நிலையாய இச்சமயம் செய்யவேணும்
நேசம் வாய்ந்தஎன் பிரஜைகளே நீங்கள் அறிந்து முடிவுசெய்வீர்.

அரசன் துயரம் மிகக்கொண்டு அழுது உரைத்த மொழியைத்
திரமாய் சென்று அவர்தமையும் தீனிலான அனைவரையும்
உரமாய் வெட்டி வேரறுத்த உலகம் போற்ற செயஉரைத்தால்
தரமாய் இருக்கும் மற்ருேர்களில் தகுதி உடையோர் வேருரைத்தார்.

தீனி லான அனைவரையும், தீயும் செய்கை பலசெய்து
தீனில் சேர்க்கும் போதகரை தீபர மாகத் தடுக்க வேண்டும்
தீனில் சேர்ந்து மறைந்திருக்கும், தீர வான்க ளான சிலரையும்
தீனில் சேர்க்கும் குருவானுேரையும் தீர்க்க விசாரணை செய்ய வேண்டும்.

135. மற்ற குடிகள் தனில்சிறந்தோர் மஹாபா தகம்கொலை செய்வது
உற்ற குற்றம் தனையறிந்து உலகோர் புகழ தெண்டிக்கனும்
பற்றம் வைத்துக் கடவுள்தனை பணியும் குருஅறிவாளியை
குற்றம் காணுது இடறுசெய்தால் குலத்துக்கிடரே சிலருரைத்தார்.

கொடூர் கோபம் நெடுநாள் கொண்ட குணத்தில் கெட்டபாப்அரசன்
படுதூர் விளைக்கும் பாதகனை பட்டு மாயச் செய்யவேண்டும்
கடிதில் தேரப் போக்கில்லாமல் கடிப்பாய் சொல்ல எழுதிவிட்டான்
கொடூர கோபம் தனையறிந்து குறித்த அநேகர் ஒப்பமிட்டார்.

கருணையாளரைக் கொல்ல ஆணை

இந்தச் செய்தி தனையறிந்து எல்லோரும் ஒருமித்து ஒன்றுகூடி
பந்தம் போல வதனமுள்ள பங்காரு முத்துமீருன் ஆலிமிடம்
வந்து பணிந்து சலாமுறைத்து வகுத்தார் விபரம் அனைத்தையுமே
எந்த முறையில் எங்களையே ஏவினுலும் செய்வோமென்ருர்.

என்னை விளித்துக் கேளாமல் இருதி கொலைக்கி ஆளாக்கி
என்னைக் குற்றம் தனிலாக்கி மன்னன் பாபு செய்துவிட்டார்.
என்னைப் பற்றி நீங்களெல்லாம் இனிதும் கவலை கொள்ளாமல்
என்றும் அல்லா தனைப்போற்றி இறைஞ்சி ஈமான் விலக்காதீர்.

ஜிகாது செய்ய வசதியில்லை சிறிதும் அதிலே பிரியமில்லை
மஹா தீய செய்கைவிட்டு மகிழ்வாய் ஆவி உடலும் போல
தாஹா நபியின் ஹதீதுபடி தயங்கா திருந்து வாழ்ந்துகொள்வீர்
மஹா மேன்மை யானமீருன் மகிழ்வாய் பின்னும் நவிலலுற்ருர்.

முன்னோர் வழியிலே தனக்கும் மரணம்

140. எந்தன் மரபிலுள்ளோர்கள் இணங்கிச் சகீதில் மாண்டார்கள்
எந்தன் பிதாவோ சஹீதை நாடி எழுந்து ஜிகாதில் மரணமானுர்
எந்தன் குருவோ இபுருகீம் இணங்கிச் சஹீதை விரும்பிச் சென்ருர்
எந்தன் குலத்தி லுரும்கதியே எனக்கும் அல்லா தந்துவிட்டான்.
என்று உரைத்து மக்கள்தமை இணங்கும் பந்து உறவினரை
சொந்தமாக அழைத்திருத்தி சுகுர்த்தாய் பலவும் அறிவுபூட்டி
எந்தன் நினைப்பே இல்லாமல் இறைவன் தனையே வணங்கிடுவீர்
சொந்தமாக உங்களுக்கு துய்யோன் கிருபை செய்திடுவான்.
அல்லா தனையே நெக்குருகி அருளும் குர்ஆன் ஓதிக்கொண்டு
வல்லான் தனையே தொழுதுகொண்டு வணங்கி யிருக்கும் சமயமதில்
பொல்லாக் காபர் படைகூட்டம் பொருதும் வேல் வாள் தடிகளுடன்
எல்லாம் புகழும் செய்கொலியை இருகக்கட்டி கொண்டுபோனுர்.
கொண்டுபோய் அரசனிடம் குறித்த இடத்தில் நிர்ப்பாட்டி*
பண்டைக்கால முதற்ருெடங்கி பழிகள் துரோகம் செய்வோர்க்கு
தெண்டிப்பாகத்** தசைகளையே சிதறச் செய்யும் சூறைவண்டி***
கொண்டு வரவே ஆக்யாபித்து குறித்த தலத்தில் வந்ததுவே.
சூறை வண்டி கருவிவண்டி சூட்ச மதையே உரைக்கின்றேன்
சூறை வண்டி தனிலிருத்தி சூட்ச மதையே திருக்கிவிட்டால்
சூறை வண்டி செல்லும் போது சுருக்கித் தசையை துண்டுதுண்டாய்
சூறை கொண்டு உயிரதனை சுருக்காய் எமன்பதிக் கேகச் செய்யும்****

145. படைகளான போர்வீரர் பந்தோ பஸ்தாய் வளைந்து நிற்க
தடைகள் வராது காத்துவரும் தளகர்த்தர்கள் சூழ்ந்து நிற்க
உடைகள் அணிந்து மந்திரிகள் உயர்ந்தபிரபுகள் வீற்றிருக்க
குடைகள் பிடிக்கப் பாப் அரசன் கொலுவா சனத்தில் வீற்றிருந்தான்.

---

* நிர்ப்பாட்டி - நிற்கவைத்து ** சூறைவண்டி - கொலை செய்யப் பயன்படும் வாகனம்

*** எமன்பதிக்கேகச் செய்யும் - உயிர் நீங்கச் செய்யும் **** தெண்டிப்பாகத் - தண்டனையாக

மக்களின் கண்ணீர்

தேச வாசி அதிகம்பேர்கள் திரண்ட கும்பல் ஒருபுரமாய்
பாசம் கொண்டு பரிதவித்துப் பக்திமானை நினைந்தழுவார்
நேசம் கொண்டு தீனிலான நிறைந்த ஆண், பெண் ஆயிரம்பேர்
ஓசையுடனே தக்பீரை உரைத்து உருகி அழுதார்கள்.
பக்தி மானுக்கிடரு செய்தால் பாழாம் தேசம் அரசன்சாவான்
ஹக்கன் முனிவு உண்டாகி கனத்த சேதமாகிவிடும்
துக்கமான சம்பவங்கள் துடருய்த்* தேசம் தனிலாகும்
ஹக்கன்** உகந்த அறிவாளிகள் கருதி உரைத்தார் பலவிதமாய்

சுந்தரியின் சொற்போர்

பக்தி மான்கள் குருவான பங்காரு முத்துமீரான் ஆலீமை
திக்கோர் இகழத் தன்தந்தை திடுகூருக வதையே செய்ய
மிக்கோர் சபையில் கூடியதை மிகவும் அறிந்து சுந்தரியும்
தக்கோர் புகழும் ஞானவானை தம்மால் கெடுதி செய்யலாட்சே.

என்று நினைத்து ஈமானை இருத்தி சகாதத்*** ஓதிக் கொண்டு
இன்னும் மவுத்து தனை நினைத்து இருக்கும் அரண்மனை விட்டகன்று
மின்னும் கொடியாள் மன்னன்மகள் மிகவும் விரைவாய் தந்தையிடம்
உன்னிமுன்னே வந்துநின்று உறுதி புடனே உரைக்க லுற்றாள்.

150. அரசுக்கீனம் விளையாதீர் அண்ணல் ஒலியை வதையாதீர்
தரத்தில் மேலாம் ஒலியாமவர் தனியோன் கிருபை பெற்றோராம்
பரனை அறியும் பாங்குஎலாம் பலர்க்கும் காட்டும் அறிவோரவர்
தரத்தில் குலத்தில் சிறந்தோரவர் தனியோன் தனக்காய் விடுமேஎன்றாள்.

பாண்டிய இளவரசி கொல்லப்படுதல்

அமிர்த மொழிகள் அவன்காதில் அளவு மிஞ்சி அணல் தீயை
அமிர்த மொழியாள் பாவித்தல் போல் அடங்காக் கோப மீறியதால்
அமிர்த மொழியாள் சிரசைவெட்டி அவளின் உயிரைச் சுவனம் சேர்த்தான்
அமிர்த மொழியாள் சுந்தரிக்கு அல்லா ரஹ்மத்**** செய்வானுக.

---

* துடருய் - தொடராய் ** ஹக்கன்- இறைவனை இப்படியும் அழைப்பார்கள்

*** சகாதத் - கலிமா -இறைசாட்சியத்தை உறுதிப்படுத்தும் வாக்கியம்

**** ரஹ்மத் - இறைஅருள்

சூறை வண்டி தனிலேற்றி சுருக்காய் வேலை நடத்தும்படி
பெயரை விழித்து உரைத்துவிட்டான் பெரியவம்பன் பாப்அரசன்
உறையை விட்டு நீக்கி வாளை உயர்த்திப் பிடித்து அருகிற்சென்று
குறைகள் இல்லா மீருனை குறிப்பாய் தூக்கி வைத்தனரே.
அல்லா அருளைப் பெற்றஒலி அன்பாய் எவர்க்கும் உகந்த ஒலி
பொல்லா பிளவுகள் அகற்றுமொலி புகழும் ஞானம் காட்டுமொலி
எல்லாம் புகழும் இபுருகிமொலி இணங்கும் மூரிதில் சேர்ந்தஒலி
வல்லான் தனையே புகழ்ந்துகொண்டு வருசை திக்கிரில் இருந்துவிட்டார்.
பொல்லா சூறை வண்டிதனில் புகலும் சூட்சம் தனைத்திருக்கி
வெல்லா தூலம் தனை நறுக்க இசைவாய் முருக்கு ஏற்றிவிட்டான்
வல்லான் கருணை சுந்தரியும் வருசை சஹீதில் மாண்டதுவும்
எல்லாம் விளங்கி வருத்தமாகி இறைஞ்சி சுஜூதில் விழுந்தனரே.

155. தசைகள் விழுந்த துண்டுடனே தறித்த தேங்காய் துண்டுகளை
பசையாக சேர்த்து திண்ணும்படி பகர்ந்து அடித்தார் வீரர்களே
விசையாய் வண்டி செல்லும்போது விரைவாய் - வருத்தம் பெரிதாகி
திசைகள் எங்கும் கீர்த்தியாக திகைக்கும் படியாய் கவியுரைத்தார்.

சத்தியவானின் சாபம்

தென்காசி கோபுரமாம் தெருவீதியாம்
திசைமேவும் ரத்தினக் கம்பளமாம்
பங்காரு முத்துமீருன் வைத்தகீர்த்தி
நின்மண்டை பிளக்குமடா பாப்பரசே!

துய்தாம் ஒலியின் வாக்கில் நின்றும் துலங்க வந்த கவியினாலே
மெய்யாய் கொலுவில் வீற்றிருந்த மேலாம் அரசன் சிரம் பிளந்து
துய்தாம் விரிப்பில் இரண்டுதுண்டாய் துலங்கவிழுந்து ரத்தம் சிந்த
அய்யகோ வென்ற அழுகுரல்கள் ஆகாசமுட்ட எட்டியதே!
துய்யோன் ஒலியாம் முத்து மீருன் துய்தாம் நபியை ஆவல்கொண்டு
மெய்யாய் விருப்பமேலிட்ட மேலாம் உயிரைத் துறந்துவிட்டார்
ஹய்யுல் கய்யூமானவனே !* கனத்த செய்கு ஆலிமுக்கு
மெய்யாம் உனது தீதாரை மிகவும் நல்க துஆ இரந்தார்!

ஹய்யுல் கய்யூமானவன் - இரண்டும் இறைவனின் திருப்பெயர்கள். முதலாவது உயிருள்ளவன், இரண்டாவது நிலையானவன்

அழிவும் - அழுகையும்

பாவி பாபு செய்ததோசம் பகரும் தென்காசி அழுகையாச்சே
பாவி பாபு பக்திமானை பதறச் செய்தது குற்றமாச்சே
பாவி பாபு செய்தகுற்றம் பட்டு சாபம் பலிக்கலாச் சே
பாவி பாபு நாசத்துக்கே பலியே யாஞ னென்ருரே!

160. நீதியான ஞானவானின் நிலையை அறிந்து அறிவுகற்ற
பதியில் கற்புக் கரசியான பகரும் சுந்தரி எனுமகளை
கதியை அடைய நவின்றமொழி கசப்பா யெண்ணிக் கொன்றுவிட்டான்
பதியில் இறந்த அறிவுடையோர் பகரும் மொழியே இதுவாச்சே!

அரசன் பக்கம் சார்ந்திருந்து அன்பாய் ஒப்ப மிட்டபேர்கள்
அரசஞன அவன்பால் அழுது பயந்து சலித்தார்கள்
உரமாய் நின்ற வீரர்களோ, உருகி யழுது பயந்தார்கள்
பரனைத் துதித்து வணங்கும் நல்லோர் பாபு குலத்தை சபித்தார்கள்

இறுதிச் சடங்குகள்

ஊரார் எல்லோரும் ஒருங்குகூடி உறுதி நிபந்தனை செய்தார்கள்
பேரா லுயர்ந்த ஒலிமாதை பிரியமாய்க் கிரிகை நடத்திவிட்டு
மாராக் கெடுதி பாவி பாப்பின் மற்றும் கிரிகை நடத்தவேணும்
தீராக் கவலை நீங்கும்படி தீர்ப்பு மு டிவு எடுக்க வேணும்.

பின்னர் மாது சுந்தரியின் பிதற்றும் படரை அறியவேணும்
இன்மை தீனி லாகும் பேரை இடர்கள் செய்ய லாகாதென்றும்
என்னும் தீஞேர் குபிரோர்கள் இணங்கி பிரியா திருக்கவுமே
சொன்ன அஞ்சும் நடத்திக் கொள்ள சுருதிப் பிரமாணம் செய்தார்களே!

முதலாம் செய்கை நடத்தநாடி முன்ஞேஞெலியின் மகன் ஹுசைனை
பேதம் வருமல் ஒற்றுமையாய் பிணங்கா திருக்க முஸ்லிம்களுக்கு
வேதப் படியே இமாமாக்கி விரும்பும் செய்கா யடக்கிவிட்டார்
வேதம் தனிலே சேர்ந்த தீஞேர் விரைவாய் கிரிகை நடத்தலாஞர்.

165. ஜஞசா* அதனை அதபுடனே** சங்கை யாகக் குளிப்பாட்டி
ஜஞசா தனக்குத் துகிலுடுத்தி சங்கை செய்யும் முறைநடத்தி
விஞவாய் பெண்கள் கூட்டமாவந்து விளங்கும் மாதைக் குளிப்பாட்டி
விஞவாய் செய்யும் கிரிநடத்தி விளங்கும் மேஞ இரண்டில் வைத்தார்.

---

* ஜஞசா - இறந்த உடல்   ** அதபு - ஒழுக்கம்

வைத்து பள்ளி தனில் சென்று வருசை இமாமின் பின் நின்று
மதித்து அல்லா தனைத் தொழுது மகிழ்வாய் மன்னிப்(பு) துஆ ஈந்து
துதிக்கும் திக்கீர் தக்பீர்கள் தொனிக்கும் சக்தி எங்கும் பரவ
மதிக்கும் மேனு இரண்டதனை மகிழ்வாய்த் தூக்கி நடந்தார்கள்.
தீனர் கூட்டம் முன்னணியும் தென்காசி யூரார் பின்னணியும்
சேனை சைனியம் பக்கத்திலும் சிறப்பாய் துதித்து நடந்தார்கள்
ஏனை யோர்க்கும் பொதுவான இருக்கும் இடத்தில் இருவர்களை
பேணி நடுங்கி இருகுழியில் பிரிவா யிறக்கி அடக்கினுர்கள்*

இறக்கி அடக்கி மூடிவிட்டு இரப்போர் களுக்குத் தருமம் ஈந்து
கரத்தை ஏந்தி பாத்திகாவும் கருதி ஓதி பிறிந்துவிட்டார்
உரமாய் செய்த நிபந்தனையில் ஒன்றைச் செய்து முடித்துவிட்டார்
தரத்தில் கெட்ட பாப்அரசன் தலையை கழுக ஆரம்பித்தார்.
எடுத்துக் குபிரேர் களிற்சிலர்கள் எடுத்து ரத்தம் தனைக்கழுகி
அடுத்துக் கிடந்த ஜடலத்துடன் அழுத்தி சேர்த்து இருகக்கட்டி
படுத்துக் கிடந்த பாவனையாய் பலர்க்கும் தோற்றச் செய்வித்து
கடுத்த (வென்னீர்) தன்னைவிட்டு கழுகித்துயிலும் அணிந்தனரே.

170. சாபம் பிடித்து மரித்த பிணம் சான்றேர் கிரிகை நடத்தாமல்
பாபம் பிடித்த பிரேதம் தனை பார்க்க செல்ல ஆகாதென்று
கோபக் குறியாய் மொழிந்துவிட்டு குறிப்பாய் அநேகர் பின் வாங்கினர்
பாபுக் குரிய உறவினர்கள் பதறிக் கொண்டு சுட்டுநீத்தார்

பராக்கிரமன் பட்டஞ்சூடுதல்

பாபு அரசன் மகனுன் பகரும் பராக்கிரமன் தனையழைத்து
பாபு அரசன் கிரீடமிட்டு பணிவாய் அரசு செலுத்தும்படி
பாபு அரசன் கொலுவில் வைத்து பட்டம் சூட்டி உபதேசித்து
பாபு அரசன் தேசத்தார்கள் பதிவாய் ஒத்து அடங்கிவிட்டார்.

மன்னன்மகள் - உண்மைநிலை

மூன்றும் நிபந்தனை முடிவெடுக்க முற்றும் அரிய முரசடித்து
ஒன்று போல ஆண்பெண்கள் ஒருங்கு கூடித் திரண்டுவிட்டார்
பெண்கள் பலர்களை ஓரிடத்தில் பேணி ஆண்கள் ஓர் புரத்தில்
மந்திரி அரசர் நடுவணியில் மற்றும் பிரபுகள் அருகிருந்தார்.

---

* தென்காசியில் அந்த இருவரின் அடக்கஸ்தலத்தை இன்றும் பார்க்கலாம்

மங்கை மாது சுந்தரியை மன்னர் புகழும் ஞானவாளை
பங்கம் குற்றம் படுதூர்கள் பகர்ந்த விபரம் அறிவதற்கு
எங்கும் நமக்கும் பொருந்தும்படி இந்தச் சபையில் அய்வர்களை
எங்கும் புகழ தெரிந்தெடுத்து இயம்பும் அவர்சொல் பைசலாமே.

ஊரார் பேசி முடிவெடுத்தார் உகந்த அரசன் மந்திரியும்
பேரால் கீர்த்தி தளகர்த்தர் பெரிய பிரபு களிலொருவர்
சீராம் தீனில் உறுதிவுள்ள சிறந்த முஸ்லிம் பிரபொருவர்
நேராய் அறிந்து தீர்மானிக்க நிகழ்த்த அய்வர் உரித்தானுர்.

175. அரசன் எழுந்து சபையோர்க்கு அன்பாய் பணிந்து சலாம் செய்து
திரனுய் கல்வி தனில் தேர்ந்த தீரச் சகோதரி சுந்தரியும்
உரமாய் நின்று ஞானம் பேசும் உயர்ந்த அரபி வேந்தருமே
உறவாம் லீலே கண்டிருந்தால் உடையோன் தனக்காய் உரைத்திடுவீர்

சபையில் சிலர்கள் எழுந்து நின்று சங்கை அரபி வேந்தர்தினம்
சபையை விட்டு அரண்மனைக்குள் சங்கை யாகப் போய்வருவார்
சபையின் பெண்கள் நடுவணியில் சங்கை ஒருத்தி எழுந்து நின்று
சபையில் பெண்களுக்கறிவுருத்தி சங்கை தீனி லாகிடுவாள்.

மன்னன் மகள் தோழிமாரில் மற்றஒருத்தி எழுந்து நின்று
மன்னன் வேதம் தனையுணர மகிழவாய் தர்க்கம் செய்திடுவாள்
மன்னன் அரபி ஞானவானும் மனதில் பதிய உ[illegible]திடுவாள்
மன்னன் மகனும் இதுவிபரம் மறையா தெழுத உரைத்துவிட்டான்.

மந்திரி எழுந்து சபையோர்க்கு மகிழ்வாய் பணிந்து சலாம் செய்து
எந்த விதத்தில் உங்களுக்கு எதுவும் சந்தேகம் தோன்றினுலும்
சொந்த மாகப் பாவித்து துய்யோன் தனக்காய் உரையுமென்ருர்
அந்தச் சபையில் அறிந்தோர்சிலர் அழகாய் எடுத்துச் சாற்றலுற்ருர்.

மார்க்க போதனை தவிர மற்றெதுவுமில்லை

முன்னே ஒரு நாள் பெருஞ்சபையில் முறையாய் வேதம் புகலும் போது
தன்னே ஒருவன் தனியா வந்து தயாள சுந்தரி கடிதம் என்று
முன்னே வைத்து நின்ருனவன் முழுதும் உணர்ந்து பதில் எழுதி
பின்னே யனுப்பி யதுவே ஐயம் பிசகாய் வேரே இலை என்ருர்.

180. அந்தத் தூதன் எவன் என்க அன்பாய் காப்பான் ஓடிவந்து
என்னை விழித்து எஜமாட்டி இனிமையாகக் கடிதம் தந்து
என்றும் தீனைப் பரத்துகிற இனிய அரபிபால் ஈந்து
சுணங்காது பதிலை பெற்றுவர சொன்னுள் தவிர அறியேனென்ருன்.

பதிலைப் பெற்று ஓடிவந்து பணிவா யீந்தான் வேறில்...
கெதியாய் யுரைத்த வசனமதை கேட்டுச் சிலர்கள் களங்கமுற்று
மதிப்பாய் விளங்க ஆவலுற்று மனதில் ஐவர் முகநோக்கி
உதிப்பாய் பேசும் வழக்குதனை உற்றுணர்ந்து நோக்கும் நேரம்.

களங்கம் தீர்த்த கடிதம்

வீர ஜயினனியகறத்தாதீரா விரைவாய் எழுந்து சபையைப் போற்றும்
மறைவா யிருக்கும் கடிதம் இரண்டும் மகா சபையில் வரவேணும்
தீரர் உரைத்த வார்த்தை கேட்டு திரத்த இமாம் ஹுசைனரபி
விரைவாய் எடுத்துக் கொண்டுவந்து விரும்பும் சபைமுன் வைத்தாரே

தீரர் வீரர் உரைத்துநின்ற சினத்தின் குறிப்பை அறிந்துணர்ந்த
தீரன் அரசன் பராக்கிரமன் தீபரமாய் எழுந்து உட்சென்று
வீரமங்கை சுந்தரியின் விளங்கும் புக்கு பெட்டிதன்னை
தீர மாகத் துறந்தெடுத்து தீரர் முன்ஞல் வைத்தாரே

குலத்தில் பெரிய பிரபு வானோர் குணமாய் எழுந்து சபைமுன் நின்று
குனிந்து பணிந்து சலாம் செய்து குறித்த கடிதம் இரண்டதனில்
குலத்தில் சிறந்த சுந்தரியின் குறிப்பாம் முதலாம் கடிதத்தில்
குறிப்பாய் வாசித் துணரந்தபின்னே குறிப்பாம் பதிலை அறியவேண்டும்.

185. தலத்தில் கணக்கன் தன்னை தங்கும் கூட்டம் யாவருக்கும்
பலத்தால் உரைத்துக் கேட்கும்படி பகரும் படியா யுரைத்துவிட்டார்
தலத்தில் கணக்கன் எழுந்து நின்று தந்த முதலாம் கடிதம்தனை
தலத்தில் எவர்க்கும் கேட்கும்படி தரமா யுரைக்க ஆரம்பித்தான்.

எந்தன் குருவே வழிகாட்டி எவர்க்கும் பொருந்தும் குணமேறே
எந்தன் சலாம் பணிந் துரைத்தேன் இதிலே வரைந்த குறிப்பதனை
நுந்தம் கண்ணுல் பார்த்துணர்ந்து உடனே பதிலை யானறிய
என்தன் கல்பு ஆவல்கொண்டு இருக்குகின்றேன் சுந்தரியே.

என்தன் கல்விக் கிணங்கும்படி எங்கள் மரபில் புருசரில்லை
எந்தன் கற்பைக் காத்துக் கொள்ள இஸ்லாமதிலே அறிவுகற்ற
எந்தன் கல்பு பொருந்தும்படி இணங்க கணவன் வேணுமென்று
என்று எழுதி யிருந்ததையே இரைந்து உரைத்தான் கணக்கனுமே.

பராக்கிரமனின் புலம்பல்

எந்தன் தமக்கை சுந்தரியே இறுதி உன்னைக் கொல்லலாட்சே
எந்தன் தமக்கை பதிவிரதை இழிவாய் படர்கள் பேசலாட்சே
உன்தன் மனதை யறியாமல் உலகோர் நகைக்க வெட்டினரே
என்னை வளர்த்த சுந்தரியே ஏங்கி அரசன் அழுதானே.

190. அழுதகுரலை கேட்டமாதர் அனைவர் ஒருங்கு திரண்டுகூடி
பழுது அகற்றும் பாவையரே பலர்கள் போற்றும் பூவையரே
தொழுது வணங்கி அறிவுகளை துய்தாய் உரைக்கும் மங்கைய நீ
பழுது பெற்று மரித்தாயே பற்றி எரியுதே என அழுதார்

அழுகைச் சத்தம் நீங்கும்படி அலட்டி சபையோர் கூறியதும்
பழுது அகற்றும் முஸ்லிம்களில் பார பிரபு எழுந்து நின்று
குழுமி அறிய கணக்கன் தன்னை கூவி இரண்டாம் கடிதம்தனை
பழுது உருமல் பகரும் என பணிந்து சபைமுன் உரைத்தனரே.

உன்தன் லிகிதம் வரவுபெற்றேன் உகப்பாம் எழுத்தை உணர்ந்தறிந்தேன்
உன்தன் பிதா குடும்பஸ்தர்கள் உறவின் முறையார் குணமறிந்து
பின்னே கவனம் செலுத்துகிறேன் பேசா திருந்து கற்பைக் காத்து
உன்னி நாயன் தனை வணங்கி உகப்பாய் துஆ இரந்து கொள்ளு.

தவறிழைத்தவர்களின் துயரம்

என்று யெழுதி நாமம்வைத்து இருந்த எழுத்தைப் பகர்ந்தவுடன்
கன்று தாயை இழந்ததுபோல் கதறி முஸ்லிம் பிரபு அழுதார்
அன்று பிரபு அழுதவுடன் அங்கு இருந்த இஸ்லாமானோர்
என்று காணப் போறோமோ எங்கள் ஷெய்கே என்றழுதார்.

இருகக் கட்டி வற்புறுத்தி இடித்து சூறை தனிலிருத்தி
வெறுப்பா யுரைத்த வீரர்களும் விரைவாய் செய்ய வைத்த என்றன்
பருப்பமான தோசமதை பயந்து னீக்க என் செய்வேன்
விருப்பமான போர்த்தலைவர் விம்மி விம்மி அழுதனரே.

அரசன் குறிப்பை யுணர்ந்துகொண்டு அவரின் தயவை விருப்பமுற்று
பரனைப் பயந்து கவனியாமல் பகர்ந்து இணங்கி ஒப்பமிட்டோம்
கருமம் அகல என் செய்வோம் கருதி கதறி அழுதார்கள்
தருமக் குணமான சீலர்கள் தரணிக் கிடர்கள் வருமென்றூர்.

அரசன் கணக்கன் தனைவிளித்து அடங்க லெல்லாம் வரைந்துவிடும்
திரமா யுரைத்த மொழியுணர்ந்து திடனாய் எழுதி விட்டானே
உரமாய் முடித்த நாலாஞ்செய்தி உகப்பாய் பேச நேரமில்லை
சரியாய் நாளை நாழிகையை சரியாய் குறித்து பிரிந்து விட்டார்

ஒற்றுமையே உயர்வு

தவணைக் குறித்த நாள் நாழிகையை தவறாது ஜனங்கள் கூடிவிட்டார்
புவனம் தனிலே தீனைநாடி புகுதம் போன்ற தடுக்க வொண்ணுகி
சுவனம் செலுத்தும் அஞ்சாம் செய்கை கலந்து பிணக்கமில்லாமல்
புவனம் காக்க வுத்தியோகமும் பொருந்தி யிருந்து வாழவேணும்.

அஞசு செய்கை ஐவர்களால் அடங்கல ஜனங்கள் எல்பேரும்
பிஞ்சு பிளந்து பிரிவாகாமல் பிரியமாகி ஒற்றுப் பேசி
கிஞ்சிற் றேனும் ஐயமின்றி கீர்த்தி என்றும் நிலைநிற்க
அஞ்சு செய்கையின் முடிவை அழகாய் எழுத பைசலாட்சு.

ஹிஜிரி வருடம் அறுநூறில் கிரீடமான முஹற்றமதில்
கிளரும் தேதி பதினறில் கிருபை பொங்கும் ஜுூம் ஆ அன்று
வளரும் சுவனம் பிருதவுசில் வன்மை சுகதா உடன்சேர
களரும் சித்திர வதையினலே கடின சஹீதில் மாண்டனரே.

200. அன்று முதலாய் இதுவரையும் அவரின் புகழ்ச்சி மாறவில்லை
அன்று முதலாய் இதுவரையில் அநேகர் நாமம் சூட்டுகிருர்கள்
அன்று தொட்டு அவரைநாடி அநேகர் நேர்ந்து கொடியும்கட்டி
அன்று முதலே பிரமதஸ்தர்கள் அவரைப் போற்றி வாழ்கிருர்கள்.

அன்று சமாதி முதல்கொடுத்து அவரின் அற்புதம் அறிந்த பேர்கள்
இன்று வரையும் மக்கள் இயம்பி வருவதை நாமறிவோம்
சென்ற சொற்ப காலமதாய் சிறக்கும் சமாதிக் கருகாக
என்றும் தினமும் முஸ்லிம்கள் போகிருடியாய் வாழ்கிருர்கள்.

தூலம் இருக்கும் கபுறதனை* துதித்து சியாரத்து* செய்ய நாடி
மூலை முடுக்குப் பல இடங்கள் மொழியும் பற்பல ஊரிருந்து
தூலத்தோடு சுவனம் புக துலங்கும் சூட்சம் காட்டியோரை
மேளம் தூளம் இல்லாமல் மிகவும் பயந்து வருகிருர்கள்.

கியாம*** முடிவு நாள்வரையும் கீர்த்தி கவிகள் மாருது
கியாம முடிவு நாள் வரையும் கீர்த்தி சமாதி மறையாது
கியாம முடிவு நாள்வரையும் கீர்த்தி முஸ்லிம் பகருதீர்
கியாம மட்டும் பங்காருடன் கீர்த்தி முத்து மீருன் என்றே

---

* கபுறதனை - இறந்தவரை அடக்கும் மண்ணறை

** சியாரத்து - சந்தித்தல் - தரிசனம் செய்தல் *** கியாம - மறுமை நாள்

அவரை வதைத்த பாப் அரசன் அடியோடு கிளைகள் நாசமாட்சு
அரசன் தேசம் அவர்கவியால் அழகுகுன்றி குறைவேயாச்சு
அவரின் சொல்லால் கோபுரமோ அன்று முதலே பாழாட்சு
அவரை துயர்ந்த முஸ்லிம்களோ அளவு மிஞ்சி கூட்டமாச்சு

தென்காசியில் தொய்வின்றி வளர்ந்த இஸ்லாம்

205. மீறான் ஒலியின் மக்களது மிகவும் உரித்தாம் நாற்பதுபேர்
மீறான் ஒலியின் சிஷ்யர்களாய் மேலாம் ஆயிரம் பேருடனே
மீறான் ஒலியின் மகன் உசைனும் மிக்க அன்பாயிருந்து தீனை
நேராய் நடத்தி இஸ்லாமாக்கி நிலையாய் பெருகி வாழ்ந்திருந்தார்.

வாழ்ந்து புத்திரர் புத்திரர்களாய் வருசை பவுசாயிருக்கும் போது
தாழ்ந்து ஹக்கை வணங்குதற்கு தக்க பள்ளி அதிகம் கட்டி
தாழ்வு இல்லாமல் இஸ்லாம்கள் தக்க செழிப்பாய் வாழுங்காலம்
பாழாய் குபிரில் கிடக்கும் தேசம் பார்த்து தீனி லாக்கச்சென்றார்.

பிந்தி சொற்ப காலம்சென்று பேரர் பேரர் வழியிற்சிலர்
முந்தி சஹீதை நாடியவர் போல் முழுதும் சகீதை நாடிசிலர்
பிந்தி பிந்தி நவாப்களுக்காய் பிரிந்து போனர் தேசம் விட்டு
சிந்தி சிந்தி சுகத்திற்காக சிலர்கள் தேசம் பல சென்றார்

சிலர் பலர்கள் இவ்வூறிலே சிறந்த தெருக்கள் பல இடமும்
பலர்க ளுடனே சம்பந்தம் பதிவாய் செய்து வாழ்ந்தார்கள்
சிலர்கள் தொழில்கள் சேர்மானம்போல சேர்ந்து காலம் கடத்தினார்கள்
சிலர்கள் அடர்ந்த வனங்கள் சென்று சிரத்தையினால்காலம் கடத்தினார்கள்.

பங்காரு குடும்பம் பல பாகங்களிலும் பரவுதல்

பங்காரு குடும்பம் பலபிரிவாய் பரந்த தலத்தில் வசித்தாலும்
எங்கும் சேர்ந்து பின்னலினால் இனமாய் உரைக்க ஒழுங்கில்லை
பங்காரு என்று சேராமல் பையன்களுக்கு மீறான் என்றும்
எங்கும் புகழும் முத்துமீறான் என்ற நாமம் இடவேலானார்.

210. இவ்வூர் தனில்முன் முதியோ ரெல்லாம் இணங்கும் மானா மதுரை நாங்கள்
எவ்வூர் போற்றும் உயர்குலமே என்று இயம்ப நானும் கேட்டேன்
எவ்வூர் எவரும் அரபிக்குலம் இயம்பறிக்காடு இல்லை என்றேன்
எவ்வூர் தனிலும் முத்துமீறான் இயம்பு நாமம் இருக்கு தென்றார்.

இந்த வசனம் உரைத்த என்றன் இனிமை யான மரபுதனை
சொந்த மாக முற் காலமுதல் சுகுர்த்தாய் முன்னோர் வுரைத்து வந்தார்
பந்தம் போல எங்களையே பகரும் பங்காரு கிளை ஞரென்று
இந்த நாளும் கீர்த்தி யாக இயம்ப நீங்கள் கேட்டிலையோ

சொன்னே பங்காரு முத்துமீறான் சுகுர்த்து மகன் குசேன் வழியில்
பின்னே தலைமுறை பதினொன்றில் பிரியமாய் வந்தோர் உசேன் பிள்ளையாம்
பின்னே அவர்மகன் மீறான் பிள்ளை பிரியாத அவர்மகன் மீறான்கனி
சொன்னேன் அவர்மகன் செய்யது முஹியதீன் சுடறா யிருந்து வாழுநாளில்.
மைந்த னில்லாமல் வெகுநாளாக மருவிக் கடவுள் தனை நினைத்து
ஐந்தொ குத்துத் தொழுகையின் பின் அன்பா யுருகித் துஆ இரந்தும்
ஐம்புலன் அடக்கித் தவம் புரிந்த அறிவோர் தமையும் வசீலாக்கி
பயந்து இருந்து நாடியதால் பண்பாய் அல்லா ஈந்தான்

இஸ்மாயில் பிறத்தல்

எங்கும் புகழும் படியாக இசைந்த எந்தக் கல்வியிலும்
பொங்கும் அழகு குணமதிலும் பொருந்து நடப்பு யூகத்திலும்
எங்கும் எவரும் புகழும்படி இஸ்மாயீல் எனும் நாமமதாய்
துலங்கும்படியாய் இருந்து வந்தால் துய்யோன் பக்தி மிகுந்தவறாய்.

215. இளமை வயதில் முன்நடந்த இயல்பு நூதனம் அகற்றிவைத்தார்
பழமையான செய்கை களிற் பற்றும் தீனை அனுசரித்தார்
வளமை யான யில் குடிப்பை வர்த்தி மணங்கள் செய்யவொட்டார்
இளமையான ஹாபிஸ்களை* எதிரே கண்டால் பணிந்திடுவார்.

இனங்கள் தெரியா தெதிர்த்துவரும் ஈனரைக் கண்டால் பின்னிடுவார்
பணங்கள் பெருத்த பேர்களுக்கு பரிந்து பேசாது பின்னிடுவார்
தினங்கள் தோறும் மரித்தவர்க்கு திக்ரு ஹதீது ஹதியாசெய்வார்
மனதுகளிலே ஆண் பெண் என மக்களிலே பேதம் வையார்.

இஸ்மா யீல்நபி வழியில்வந்த இலங்கு ஹுசைன் தலைமுறையில்
துஸ்மன் நீக்கி சஹீதான துலங்கும் பங்காரு மீறானின்
இஸ்டமான மகன் வழியில் இலங்கும் தலைமுறை பதினைந்தினில்
திஸ்டாந் தரமாயிந் நடுத்தெருவில் திகைக்கும் படியாய் இருந்தனரே.

கவிவேந்தரின் கவிதைகள்

217. கல்விக் கனியாய் ஞானவானாய் கவிக ளியற்றும் களஞ்சியமாய்
மெல்லப் பேசும் குரலாயும் மேலோ ரெவரும் புகழவுமே

* ஹாபீஸ் - திருகுர்ஆன் முழுவதையும் மனனஞ்செய்தவர்

நல்லோர் பொருந்த நன்மொழியை நவில்வார் சபையில் விளங்கும்படி
எல்லோர் உகக்கும் படியாக இருந்தார் இஸ்மாயில் கனிசாஹிபே.

இரண்டு பத்து வருடமதாய் இருக்கும் நாள் ஒன்றதற்கு
இரண்டு தடவல் ருசியிலாத இரண மதையே அறிந்திடுவார்
மரணம் வரையில் ரமலானில்* மகிழ்வாய் மாலை சாப்பிடுவார்
மரணம் வரையும் சஹர்இரணம்** மறைவாய் தர்மம் ஈந்திடுவார்

220. இளமை வயதில் கவியினாலும் இஸ்லாம் மார்க்க புராணங்களை
இளமை வயதில் போதித்து எவர்க்கும் விளங்க உரைத்திடுவார்
பழமை யான முதியோர்களால் பகரும் புலவர் பட்டம் பெற்று
பழக்கம் வழக்கம் பேசுவதில் பண்பாய் பிரிய மாயிருந்தார்.

குடும்பப் பிரிவு சம்பந்தம் குலத்தில் குணங்கள் கெடுதிகளும்
சடுதி எவரும் அறியும்படி சரித்திர வசன மாகவுமே
கெடுதி சொற்கள் கலக்காமல் கிருபை யுடனே எழுதிவைத்தார்
நடுவாம் பேட்டை எனுந்தெருவில் நாயகர் இஸ்மாயில் கனிசாஹிபே

அல்லா வைப்புகழ் அனந்தம்கவி அதிலும் மன்னிப்பு கவி அனந்தம்
நல்லார் புகழும் நபிபேரில் நவிலும் புகழ்கள் கவிஅனந்தம்
பொல்லாது அகற்றும் நபியினிடம் புகழும் சிபாரிஸ் கவி அதிகம்
எல்லா மூமின் முஸ்லிம் களுக்காய் இறங்கு கின்ற கவிஅனந்தம்

ஒலிகள் போற்றும் அபுல்ஹசனை ஒழுங்காய் துதிக்கும் கவிஅனந்தம்
ஒலிகள் போற்றும் முகைதீன் ஒடுங்கிப் புகழும் கவிஅனந்தம்
பலவிதம் பெறவே கவுதுகளை பகரும் சிபாரிஸ் கவிஅனந்தம்
ஜொலிக்கும் படியாய் உரைத்துவிட்டார் சொல்லும் கவிஞர் இஸ்மாயீல்

நாகூர் மீறான் ஒலிபேரில் நல்ல கவிகள் அனந்த மதாம்
ஏறுபாடி இபுறாஹீம்பேரில் இணங்கும் கவிகள் உரைத்துவிட்டார்
பார்தனி லேவெகு கீர்த்திபெற்ற பகரும் செய்யது சுலைமான் பேரில்
நேர்பெறவே கவிஉரைத்து நிகழ்த்தினார் கவி இஸ்மாயீல்.

225. சுவர்க்கம் பெற்றோர் எண்ணங்களும் சூட்டுக் குரியோர் எண்ணங்களும்
மார்க்கம் காட்டும் நபிமார்களில் மறைவாய் சுன்னத்துடன் பிறந்தோர்
தீர்க்க மான ஒலிமார்களில் திடனாய் இருக்கும் அகுலம்வரை
மாற எண்ணம் விபரங்களை மயங்கா துரைத்தார் கவிகளாலே.

---

* ரமலான் - இஸ்லாமிய மாதங்களில் ஒன்பதாவது

** சஹர்கிரணம் - நோன்பிருப்பதற்காக நடுநிசியில் தூங்கி விழித்தவர் சாப்பிடும் உணவு

கடலின் நாமம் யார்கள் நிலை கருதி அவர் வா கிலிருந்த கோலம்
மடமை நீத்த நபியின் கோலம் மற்றும் பற்பல சூட்சகோலம்
திடனாய் வசனம் கவிகளாலும் திருத்த மாக உரைத்துவிட்டார்
மடமை நாமம் மிடாதுரைத்த மன்ன ரிஸ்மாயில்க் கனிசாகிபே.

துஆக்கள் கபூ லாகுமிடம் துடர்ந்தால் கிட்டும் நேரங்களும்
துஸ்மன் கள்வரும் நேரங்களும் துய்ய பிஸ்மில் வலுப்பங்களும்
துய்தாம் குர்ஆன் வலுப்பங்களும் துடராய் தொகுத்து உரைத்துவிட்டார்
துய்தாம் கலீல் நபியின் மகன் துய்தாம் நாமம் பெற்றவராம்.

வாழ்த்துக் கவிகள் மனக்கவிகள் வணங்கி துஆ கேட்கும்கவி
கேட்போர்க் குரைத்து வரைந்தனுப்பும் கிருபைக் கவிஞ ராயிருந்தார்
கேட்போர்க் கினிதாய் மதுரமாயும் மிசையும் சொற்கள் சூட்சமதாய்
வாழ்த்தும் படியாய் உரைப்பதிலே வருகை இஸ்மா யீல்எனலாம்.

எனக்குத் தெரியாக கவிஅனந்தம் இஸ்லாம் அழகுக் கவிஅனந்தம்
முனக்கம் வருத்தும் நரகத்தின் முழுதும் நாமம் மொழியும்கவி
மணக்கும் சுவர்க்கம் எண்ணங்களின் மறையாது நாமம் காட்டும்கவி
விளங்கும் வானம் பூமிகளை விபரமாக உரைத்துவிட்டார்.

ஓலையிலிருந்து ஏட்டில்

230. மேலே உரைத்த கவிகளெல்லாம் மிகவும் நன்றாய் இணக்கமாக
ஓலை புக்கு அதிலிருந்தே ஒன்றும் விடாமல் பின்சேர்ப்பேன்
மேலே நடத்த நாடுமெந்தன் மிகவும் நினைக்கும் குறிப்பெல்லாம்
மேலோன் இஸ்டப் படியேயன்றி மிகைக்க முடியா துண்மையாமே

எந்தன் தாதா முஹிதினிடம் இறையோ னுகந்த ரம்லானொலி
உந்தன் மகனாய் ஒருவனுண்டும் உடையோன் பொருத்தம் அவனுக் குண்டாம்
என்று சொல்லி என் தாதாயிடம் இனிதாய் அரைக்கால் ரூபா ஈந்தார்
அன்று தொட்டு மௌத்து* வரை அவரின் காரியம் சிறந்ததனைறே.

இரவு தனில் தஹஜ் ஜுத்நேரம் அல்லா தனைநாடி அழுதவராய்
மறவாய் தனித்து துஆஅதனை மனதில் வருத்தம் வைத்துக்கேட்டு
குரவாய் செய்த குற்றங்களை குறித்து கெஞ்சி பரிதவிப்பார்
மரவை அறியும் அல்லாஆணை மறையா துரைத்தேன் மீறான்கனி

---

* மௌத்து - மரணம்

ஏட்டிலிருந்தகவி எழுத்தில்

சீக்காய்* சொற்ப தினங்களாக சிறிது வருத்தமா யிருக்கும்போது
சீக்கைப் பார்க்க வந்தோரிடம் சிறிதும் தவறாது மன்னிப்புகேட்டார்
மார்க்கப் படியே அடக்கியபின் மன்னிப்பு கேட்க வேண்டுமென்றே
மகனாம் என்னிடம் கடமை சொன்னார் மறக்காது சமயம் உரைத்துவிட்டேன்

கனவில் காட்சி தனையுணர்ந்து கருதி ஓலை தனில் வரைந்து
தனதாய் சுருளாய் அடைத்துவைத்து தக்கோன் சமூகம் செலும் நேரம்
நினைவாய் எனது தூலமதை நிலையாய் காட்டு பாவாபள்ளி
மனையி னுள்ளே கீழோரத்தில் மகிழ்வாய் அடக்க உரைத்தனரே.

235. என்தன் பிதாவே உமது தூலம் இணங்கா தெப்படி அடக்களன்றேன்
என்னைப் படைத்த ரஹ்மானவன் இணங்கும் படியே ஆக்கிவைப்பான்
முன்னே எனக்குத் தெரியச் செய்த முன்னோ னுதவி தவருவரு
இன்னே சென்று உரியோரிடம் இணங்கக் கேட்க உரைத்துவிட்டார்.

காட்டு பாவா பள்ளி எனும் கருதும் இடத்துக் குரியோரான
நீட்டும் தர்மம் மடக்காது நிறயாய் நடத்தும் நத்தடுபாவா
தேட்டம் வைத்து சென்று கேட்டேன் திடனாய் மகிழ்ந்து வாக்களித்தார்
நாட்டத்துடனே அவர்கிளைஞர் நன்றாய் எவரும் அனுசரித்தார்.

(இதன் பின்னர் வேறு பாடல்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஒரு காலம் வரும் இறை அருளால் இந்தப் பாடல்கள் அச்சேறும் என்றும் அதில் குறிப்பெழுதியும் வைத்து இருக்கிறார்.)

---

* சீக்காய் - நோய் வாய்ப்பட்டு

தென்னக வரலாற்றைத் திருத்து

''ஏழாம் நூற்றாண்டிலேயே முஸ்லிம் வணிகர்கள் இலங்கையில் குடியேறத் துவங்கி விட்டார்கள்.''* என்று இந்தியாவைப்பற்றி வெளிநாட்டவர் குறிப்புக்கள் என்ற நூலில் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுகிறார். இஸ்லாம் உலகில் பரவத் தலைப்பட்டதும் இந்தியாவின் கடற்கரைப் பகுதிகளில் முஸ்லிம் குடியேற்றங்கள் தோன்றலாயின.

கி.பி.738 - இல் ஹாஜி அப்துல்லா வின் அன்வர் கட்டிய பள்ளிவாசல் திருச்சிராப்பள்ளியில் இன்றும் காணலாம்.

கி.பி.1050-இல் மாலிகுல் முல்க், ஹளரத் அலிஷாவும் மார்க்கப் பெரியவர்கள். அவர்கள் பாண்டிய நாட்டிற்கு வருவதற்கு முன்பே மதுரையில் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தனர்.**

' துருக்கன் அகமது முதல் இராசராசனது அவைக் களத்தை அலங்கரித்த முக்கியமான இஸ்லாமிய அரசியல் தலைவர் என்பதை ஆனைமங்கலச் செப்பேடு குறிக்கிறது.***

புகழ்பெற்ற அரபுப்பயணிகளான இப்னு குர்தாத்பிஹூ, மஸ்ஊதி போன்றோர் தமிழகத்திற்கு இதே கால கட்டத்தில் வந்தனர். மதுரை, கன்னியாகுமரி பற்றிய விவரங்களைத் தமது நூல்களில் தந்துள்ளனர்.

மனிதப் புனிதர்

ஹிஜ்ரி 570க்கும் 580க்கும் கிடையில் அறபுநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்த மனிதப் புனிதர் சையது இபுருகீம் அவர்கள் தமிழகத்தின் தெற்குத் திசையில் தீன் குரல் ஒலித் திட பெரிதும் காரணமாக அமைந்தவர்கள்.

கர்னல் வில்க்ஸ்

கி.பி.1810-இல் கர்னல் வில்க்ஸ் எழுதிய 'தென்னிந்தியச் சரித்திரக்

---

* K.A. Nilakanta Sastri, Foreign notices of South India, 1939, P.20.

மேற்கோள், Proceedings of the first International Conference Seminary Tamil Studies, Kula lumpur, Malaysia, April, 1966, P.746.

** எஸ்.எம்.கமால், தமிழக இஸ்லாமியர்கள் வரலாறு, இருபதாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, 1988, பக் 133.

***நடன காசிநாதன் - கல்வெட்டு ஒரு அறிமுகம், 1976, பக்.33

மேற்கோள், S.M. கமால், முஸ்லிம்களும் தமிழகமும், 1990, பக் 65.

குறிப்புகள்' என்ற நூலில் 'சாதாத் நாமா' விலிருந்து சான்று காட்டுகிறார். அதில் 'தென் குமரியைக் கடந்து பாண்டியர் கரையில் வந்து இறங்கி குடியேறிய மக்களின் சந்ததியினரே 'லெப்பைகள்' அழைக்கப்படும் தமிழக முஸ்லிம்கள் என்று தெரிவித்திருக்கிறார்.**

இவ்வாறு தெற்கில் தீன்குரல் ஓங்கி ஒலித்திட காரணமாக அமைந்திட செய்யது இப்ருஹீம் வலி அவர்களுடன் வந்த ஹுசைன் அரபி போன்றவர்கள் செய்த தூயமார்க்கப் பிரச்சாரத்தின் காரணமாகத்தான் இன்றைய தூத்துக்குடி-திருநெல்வேலி மாவட்டப்பகுதிகளில் காலூன்றியிருந்த, இஸ்லாம் மெல்ல மெல்ல வளரத் துவங்கியது எனலாம்.

அன்பையும் சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும் பேணிய அவர்களின் வரலாறு தமிழக வரலாற்றில் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருப்பது நியாயமா ?

சேர்க்க இயலுமா ?

முகவை மாவட்டத்தில் முதுகுளத்தூர் அருகில் உள்ள மீசல் என்ற ஊரில் பிறந்த முகம்மது இபுராஹீம் என்ற இயற்பெயரைக் கொண்ட வண்ணக்களஞ்சியப் புலவரின் 'தீன் விளக்கம்' எனும் காவியத்தை மட்டும் வைத்துக் கொண்டு தென்னக வரலாற்றில் இதனை எவ்வாறு சேர்க்க இயலும்?

அப்பாஸ் பின் அப்துல்லா என்பவர் எழுதிய 'ஷஹாதத் நாமா' என்னும் பாரசீகக் காவியத்தைக் வைத்துக் கொண்டு தென்னக வரலாற்றில் இதனை எவ்வாறு சேர்த்திட இயலும்? கேள்வி இங்கு எழுகிறது: விடை காண வேண்டாமா?

சரித்திரத்துக்குரிய ஆதாரங்கள்

" நம்நாட்டின் மிகப் பழைய காலச் சரித்திரத்தை உணர்த்ததற்கு மக்கள் நூல், மொழி நூல் முதலியவை உதவும் எனினும், நம் முன்னோரின் வாழ்க்கையையும் பழக்க வழக்கச் சடங்குகளையும் அறிதற்கு இலக்கியமே சிறந்த ஆதாரமாகும். "ரிக்" வேதகாலம் தொட்டு முகமதியர் இந்தியாவைக் கைப்பற்றிய காலம் வரை இலக்கியச் சான்றுகளைக் கொண்டே வரலாறு எழுத வேண்டியிருக்கிறது" ***

---

* K.M.K. அப்துல் காதிர் சாஹிப், (சென்னை அரசாங்க முஸ்லிம் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்) தென்னிந்தியாவும் தீனுல் இஸ்லாமும் கட்டுரை 4, நூறுல்ஹக், பிப்ரவரி மாதஇதழ், 1949. பக்.60.

** டாக்டர் மு.அப்துல் கரீம்,வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் ஆய்வுரை, 1987, பக் 1.

*** S.K. கேவிந்தசாமிப் பிள்ளை, இந்தியர் வரலாறு, முதற்பாகம், 1943, பக். 16.

M. ஸ்ரீனிவாச அய்யங்கார்

The Materials for writing a history of the Pandyas will found in

1.Current traditions and legends, 2. Some of which are distorted and interlarded with miracles in the local Puranas, 3. in early Tamil literature, and 4. inscriptions. *

பாண்டியர் வரலாற்றை எழுதுவதற்கு மரபுவழிச் செய்திகளையும், புராணங்களும் இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் பயன்படுகின்றன என்பர் பேராசிரியர் சீனிவாச அய்யங்கார்.*

கல்வெட்டு தரும் செய்தி

மூன்றும் குலோத்துங்க சோழனின் மெய்கீர்த்தி குளத்தூர் தாலுகா குடுமியாமலை சிகாநாதஸ்வாமி கோவிலில் இரண்டாம் பிரகாரத்து வடபுறம் சுவரிலுள்ள சாசனம் (புதுக்கோட்டை கல்வெட்டுக்கள் எண் 166) 13 பாராக்கள் கொண்டது. அதில் ஏழாவது பாரா இதோ,

"**வெண்ணிலக் கொடியுடைய** வீரர் புண்ணகளில் புக்கழந்தாக்கிய பொர்வயிலிருந்த தார் முத்திழந்த...(ம)ழல் மறப்படையுடனெ எழகப் படை சிறைப்பட்டு விழதடிந்து தாநதைமற (சா)ந்து உயை துரந்து செநகா அழிஞ்ச நறுந்த தென் (ம)துரை புற மதுளை தன் நெடுப் படைக்கடல் வ(ளை)யப் பெரு வழுதியரும் தம் விவ.... ற்றதா"*

வெண்ணிலாக் கொடி வீரர்கள்

மூன்றும் குலோத்துங்கனின் காலக் கல்வெட்டில் வெண்ணிலக் கொடியுடைய, வெண்ணிவாக் கொடியுடைய வீரர்கள் பற்றிய குறிப்பு வருவதை சரித்திர ஆய்வாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

---

* M. Srinivasa Aiyangar, Tamil Studies, 1914, P. 387

* வி.ரா. இராமசந்திர தீக்ஷிதர், மூன்றும் குலோத்துங்க சோழன், 1941, பக் 166.

பாண்டிய நாணயம்

ஆதாரபூர்வமான நாணயங்களின் தொகுப்புகளில் சமரகோலாகலன் என்னும் பெயருடைய ஒரு பாண்டிய நாணயம் காணப்படுகிறது. அப்பாண்டியன் யார்? எக்காலத்தவன் என்று யாரும் சொல்லவில்லை. யாரோ ஒரு பாண்டியனின் சிறப்புப் பெயராக அது இருக்கலாம் என்று கூறுகிறுர்கள்.

சுல்தான் செய்யிது இபுருகீம் ஒலி அவர்களின் வரலாற்றைக் கூறும் 'தீன் விளக்கத்தில்' அவர்களைப் போரிலே வென்று நாட்டைத் திரும்பக் கைப்பற்றிய பாண்டியமன்னன் தனக்கு வாரிசாக நியமிக்கப்பட்ட பாண்டிய இளவரசனின் பெயர் சமரகோலாகலன் இந்தப் பாண்டிய இளவரசன். பவுத்திரமாணிக்கப்பட்டினத்தில் அரியணையில் அமர்ந்த மூன்று நாட்களுக்குள் போரிலே காயம்பட்ட பாண்டிய மன்னன் மரணமுற்றுன் என்பதனைத் தெரிவிக்கிறது.*

" குழைத்த தேகமிங்கினி நிலை யின்றெனக் குறித்துத்
தழைத்த சீர் கொளுஞ் **சமரகோலாகலன்** றன்னை
யழைத்து நேயமாய்ப் புண்ணியப் புனலினி லாட்டி
யிழைக் கொடார் தரித்தரசுவர்த்தவிசினிலிருத்தி" **

செய்யிது இப்ராகீம் ஒலி காலத்தில் வெண்ணிலாக் கொடியுடைய வீரர்கள் தமிழகத்தில் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கால பாண்டிய இளவரசன் சமர கோலாகலனின் நாணயமும் தமிழகத்தில் கிடைத்திருக்கிறது.

கிடைக்காமல் போன சில விபரங்கள்

பாண்டியரின் தயாதிச்சண்டையின் ஆரம்பப்பகுதி இலங்கைச்சரித்திரமான மகாவம்சத்திலும், பிந்தைய பகுதி சோழ சாசனங்களிலும் வருகிறது. 'இவ்விதம் இரண்டையும் சேர்த்தால்தான் சித்திரம் பூர்த்தியாகும். அப்படியும் சில விபரங்கள் கிடைக்காமல் தான் போகும்' *** என்ற தி.நா. சுப்பிரமணியனின் வரிகளையும் எண்ணிப் பார்க்கவேண்டுகிறேன்.

---

* எம். செய்யிது முஹம்மது ஹஸன், தீன் விளக்கம், பக். 15.

** முற் கூறிய நூல். பக். 293. செய்யது இபுருகீம் ஒலி சகீதுப்படலம், பாடல் 125. (தீன் விளக்கம் 1612-வது பாடல்)

*** தி.நா. சுப்பிரமணியன், தென்னிந்திய கோயிற் சாசனங்கள் தொகுதி 3, பகுதி 2, பக் 152.

உண்மையான வரலாறு

தமிழ்நாட்டு வரலாற்றிலே கூட எத்தனையோ இருண்ட காலப்பிரிவுகள் உள்ளன. வரலாற்று ஆசிரியர்கள் அந்த இருண்ட இடைக்காலங்களைக் கூடுமானவரையில் ஆராய்ந்து வரலாற்றுத் தொடர்புகெடாமல் எழுத முயல வேண்டும் ஒரு வேளை அக்காலங்களுக்கு உரிய நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்பு ஒன்றும் கிடைக்கவில்லையாயினும் உள்ளதை வைத்துக் கொண்டு, வரலாற்றுத் தொடர்பு கெடாத வகையில், பயில்வார்க்குச் சுவை கெடாத வகையில் எழுத வேண்டும். அப்போதுதான் அது உண்மையான வரலாறு ஆகும் * என்ற அ.மு.பரமசிவானந்தத்தின் இக்கூற்றையும் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

'ஆதிகாலச் சோழமன்னர்களைக் குறித்து சரித்திர திட்ட வட்டமாக அறிவது எவ்வளவு கஷ்டமோ அப்படியே பாண்டிய சரித்திரத்திலும் இருக்கிறது. மேலும் பல பாண்டிய மன்னர்களுக்கு அடிக்கடி ஒரே பேர் வழங்கி வந்தால் இன்னுரென்று பிரித்து எழுதுவதில் குழப்பம் உண்டாகிறது' ** இந்த கருத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

" கல்வெட்டுக்களின் துணை கொண்டு அப்பாண்டி வேந்தர்களின் தந்தைமார், உடன் பிறந்தார் முதலானேர் யாவர் என்பதை ஆராய்ந்தறிய இயலவில்லை. அவர்களுடைய செப்பேடுகளும் அச்செய்திகளை உணர்த்துவன வாயில்லை. அன்றியும் எவ்வரசனுக்குப் பின்னர் எவ்வரசன் அரசாண்டான் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கும் அவை பயன்படவில்லை"***என்று கி.பி.1190 முதல் கி.பி. 1310 முடிய ஆட்சி புரிந்த பாண்டியர்கள் பற்றி ஆராய்ச்சி பேரறிஞர் டி.வி. சதாசிவப்பண்டாரத்தார் கூறியுள்ள கருத்தையும் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

ஆறு பெயர்களில் 47 மன்னர்கள்

கி.பி 1000 க்குப் பின் அரசாண்ட பாண்டிய மன்னர்களுக்கு சுந்தரன், வீரன், விக்கிரமன், பராக்கிரமன், குலசேகரன், ஸ்ரீவல்லபன் என்ற ஆறு பெயர்களே வரும். மாற வர்மன் அல்லது சடையவர்மன் என்ற பட்டப் பெயர்கள் இருக்கும். ஆறு பெயர்களில் இரண்டு பட்டப்பெயர்களோடு 12 முதல் 14 ஆம் நூற்றாண்டு வரை 47 பாண்டிய மன்னர்கள் இருந்தார்கள். * இதனையும் கருத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

---

* அ.மு. பரமசிவானந்தம், தமிழக வரலாறு, 1958, பக் 23, 24.

** டாக்டர். சவரிராயன் ஏசுதாசன், தமிழ்நாட்டுச் சரித்திரம், 1948, பக்.252.

*** T.V. சதா சிவபண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, 1977, பக்.81.

**** N. சேதுராமன், தமிழ்க் கல்வெட்டுகள் செய்தனவும், செய்ய வேண்டியனவும் 1989 -ல் 25, 26 தஞ்சாவூர் கருத்தரங்கு கட்டுரை, பக் 12, 13,

"பாண்டியர் வரலாற்றைத் தொகுத்து எழுதுவதில் இருந்த பல இடர்ப்பாடுகளில் தொடக்ககாலக் கல்வெட்டுச் சான்றுக்குறைவு முக்கியமானதாகும். மேலும்மாறன், சடையன் என்ற பெயர்களை அடுத்தடுத்து வந்த அரசர்கள் வைத்துக் கொண்டதும் ஒரே காலத்தில் பல பாண்டிய அரசர்கள் ஒன்றுசேர்ந்து ஆட்சி நடத்திய முறையும் சில குழப்பங்களை உண்டாக்கின. குறிப்பாக, அவர்கள் ஆட்சிபுரிந்த காலம், ஆட்சி செய்த நிலப்பகுதிகள் ஆகியவற்றை வரையறுத்துக் கூறுவதற்கு இவை இடையூறுகளாக அமைந்தன. தவிர, இடைக்காலப் பாண்டியரைப் பற்றியும் பிற்காலப் பாண்டியரைப் பற்றியும் இலக்கிய ஆதாரங்களும் மிகக் குறைவாக உள்ளன."★ இதனையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

மனிதப் புனிதரின் முழக்கம்

" இந்நாட்டை ஆளுவதற்கோ உங்களை அடிமைப் படுத்துவதற்கோ நாங்கள் வரவில்லை. மானிட உரிமை என்ற அடிப்படையில் மானிடத்தின் நன்மைக்காக பொதுப்படையாக நாங்கள் கடைப் பிடிக்கும் நல்வழி காட்டும் கொள்கைகளை உங்கள் மத்தியில் எடுத்துரைக்க வந்தோம். அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் உங்கள் விருப்பம். அதற்கு கட்டாயமோ பலவந்தமோ கிடையாது. எங்கள் வழி முறைகளை உங்கள் மத்தியில் எடுத்துரைத்த ஒரே காரணத்திற்காகத் தான் தடுக்கப்பட்டோம். இன்னல்களுக்குள்ளானோம். அதனால் தற்காப்புப் போரும் தவிர்க்கமுடியாதாகி விட்டது. இத்தொண்டர்கள் மூலம் நாங்கள் வருகை செய்திருக்கிறோமென்றால் அது மனித வர்க்கத்தின் நன்மைக்காகத் தான், மனித அழிவிற்காக அல்ல, மானிட வர்க்கத்தின் நன்மையின் சேவையைத்தான் எங்கள் இதயங்கள் இன்பமாக கருதுகிறது.*" என்று' மக்களிடையயே முழங்கியவர் செய்யது இப்ராஹீம் வலி.அதோடு அந்தப் பகுதியில் நேர்மையான அரசாட்சியும் புரிந்தவர். தனது வாழ்வின் இறுதி நாட்களைக் கழித்து அங்கேயே அடக்கமானவர். அவருடன் வந்த ஹுசைன் அரபி போன்ற மேதைகளை தெற்குப் பகுதிக்கு அனுப்பி தீனைப் பரப்பியவர்.

இராமநாதபுரத்தில் ஏர்வாடியில் ஆண்டுதோறும் இந்து - முஸ்லிம் கலாச்சார பண்பாட்டின் இணைப்பாகவும், மதநல்லிணக்கத்தின் எடுத்துக் காட்டாகவும் விளங்கி வரும் ஏர்வாடி தர்காவில் நிகழும் சந்தனக் கூடு விழாவிற்கு யாதவர்கள் கூடு தூக்க வேண்டும், ஆதி திராவிட தலித் இன மக்கள் கொடிபிடிக்க வேண்டும், நாடார் இனப் பெருமக்கள் கூடு செய்திட நார் கொடுத்தல் வேண்டும் என்று அவர்களின் நினைவாக நடைபெறும் இசுலாமியர் திருவிழாவை இந்துக்கள் முன்னின்று

ச.சி.நெ. அப்துல் ரஸாக், தென்பாண்டிச் சீமையிலே, 1985, பக் 150.

இராமநாதபுரத்தில் ஒரு மெக்ஹா, .இதயம் பேசுகிறது. 24.7.94. பக்.29.

* கே.வி.ராமன், பாண்டியன் வரலாறு, 1977 முன்னுரை பக்

நடத்துகிற மத ஒற்றுமைக்கு இன்றும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து வருகிறது. ★

கடல்களையும், திடல்களையும், பற்பல இடையூறுகளையும் இன்னல்களையும் தாங்கி, பசித்திருந்து, இரவு பகல்களில் தாகமுற்று, ஒரு துண்டு ரொட்டியோ, ஒரு கூஜா தண்ணீரோ இல்லாமல் சிரமத்திற்குள்ளாகி, சமுதாயத்தை நன்னெறியின் பால் நடத்துவதற்காக சிரமங்களை ஏற்றிட்ட ★ செய்யது இப்ராஹிம் வலி அவர்களது வருகை, போர், மார்க்கப்பிரச்சாரம், அரசாட்சி ஆகியன பற்றிய வரலாறு எதுவும் தென்னக வரலாற்றில் இடம் பெறவில்லை.

'ஏர்வாடி செய்து இப்ராஹீம் ஷஹீது வலி அன்னுரது அரசாட்சி பற்றிய வரலாறில்லாமல் பாண்டியர் வரலாறு இருளாகவே உள்ளது'** என்றும் இராசசேகர தங்கமணி பாண்டிய வரலாறு நூலில் குறிப்பிட்டுள்ளதையும் இங்கு கட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மறைக்கப்பட்ட இந்த வரலாற்றின் சிலபக்கங்களை எனது பார்வையில் அள்ளித் தெளித்திருக்கிறேன். அதனையொட்டி ஹுசைன் அரபி வழி வந்த பங்காரு குடும்ப சரிதை பாடல்களையும் தேடி எடுத்துத் தந்துள்ளேன் தென்னிந்திய வரலாற்றில் ஒரு சில வார்த்தைகளாவது இந்த வரலாறு குறித்து எழுதப்பட வேண்டும். அதற்கேற்ப தென்னக வரலாற்றைத் திருத்திட வேண்டுமென்ற எனது கோரிக்கையை வரலாற்று ஆய்வாளர்களின் முன் வைக்கிறேன். சம்பந்தப் பட்டவர்களும், அரசாங்கமும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன்: எடுக்குமென்றும் நம்புகிறேன்.

'பழங்கால மேகங்கள் வருங்கால மழை படைக்கும். என்ற கவிஞனின் வார்த்தைகளுக்கிணங்[illegible] பழமையில் நனைந்தால் தான் புதுமைகள் புலப்படும்; [illegible]லாற்று உண[illegible] பழமைபற்றிய சிந்தனைகளும் இவைகளை ஊக்குவிக்கும் [illegible] கருத்தில் இது ஒரு துவக்க [illegible], தென்னக வரலாற்றைத் திருத்துகிற காலம் [illegible]ரை தொடரும் முயற்சி என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ?

❑ ❑ ❑ ❑

---

* தேங்கை மு. ஷறபுத்தீன், ஏர்வாடி வாழும் ஏந்தல் ஷஹீது, 1984, பக் 159-160.

** ம. இராசகேசர தங்கமணி, பாண்டியர் வரலாறு, 1978, பக் 432.

நன்றி

தென்காசி பங்காரு குடும்பத்தின் புகழ்பெற்ற பெரியார்களாகத் திகழ்ந்த தாசில்தார் ஹாஜி M. முகம்மது முஸ்தபா சாகிப்பின் புதல்வர் ஏர்வாடி தலைமை ஆசிரியர் M.அப்துல் ரஹ்மான், தப்ஸீர் அன் வாருல் குர் ஆனின் விரிவுரை ஆசிரியர் தென்காசி மௌலவி ஹாபிஸ் E.M. அப்துல் ரஹ்மான் (நூரிய்யி, பாஜில் பாகவி) மௌலவி M. முகம்மது இபுறாகிம் (நூரிய்யி பாகவி) முன்னேற்றம் புக் டிப்போ மேலாளர் ஜனுப் அல்லாபிச்சை ஆகியோருக்கு எனது நன்றி உரித்தாகுக.

நெல்லை மாநகர் மாவட்ட ம.தி.மு.க.செயலாளர் டி.பி.எம்.மைதீன்கான், தேர்தல் பணி துணைச் செயலாளர் குட்டி என்ற C.A.R. சண்முகசிதம்பரம், ம.தி.தா. இந்துக்கல்லூரி நூலகர் N. பகவதி செந்தில்வேல் முருகன், பாசமிகு அண்ணன்மார்கள் பாளை ஐ.சாமுவேல், S.N. சுப்பையா, மு. அருணாசலம், ஹாஜி அசன் இப்ராஹிம், அச்சன்புதூர் அசன் மரைக்காயர், ஹாஜி செ. முகைதீன்பிச்சை, தம்பிமார்கள் புக்ரவி, புக் மணி செ. இப்ராகிம், செ. நாசர், செ. அசன், செ.இஸ்மாயில், P.S. முத்து, ப.கல்லத்தியான், பாடகர் G.S. அபுபக்கர், கா. சுப்பிரமணியன், D.V. தங்கசாமி எனது மைத்துனர் S.M.A.Q. ஜெய்லானி, சாகுல் ஹமீது, பாதுஷா, ஹபீப், வேந்தர், முஸ்தபா ஆகியோர் எனது நன்றிக்குரியவர்கள்.

இந்நூல் எழுதிட, ஐந்தாண்டு காலமாக விஷயங்களைச் சேகரித்திடும் போது எனக்கு உதவியாக இருந்த எனது துணைவியார் திவானி ஜஹானரா, மகள்கள் நஜாத், சுஹைனு எனது தந்தையார் நா. செய்யது மசூது, தாயார் செ. காசினம்மாள் ஆகியோர் காட்டிய ஆர்வம் மறக்க இயலாது.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த கனி ஆப்செட் பிரஸ் அண்ணன் ஜனாப். சாகுல் ஹமீது அவர்களுக்கு எனது நன்றியினைத் [illegible]வித்துக் கொள்கிறேன்.

செ. திவான் எழுதிய நூல்கள்

விடுதலைப்போரில் தமிழக முஸ்லிம்கள்
திருகுர்ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்
} தற்போது பிரதிகள் விற்பனைக்கு இல்லை

விற்பனையில்

நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப் *214 பக் விலை ரூ. 35*

விரைவில்

வரலாற்றின் வெளிச்சத்தில் ஔரங்கஜேப் *320 பக். விலை ரூ.60*

நூல்கள் கிடைக்குமிடம்

சுஹைனு பதிப்பகம் , 106 F5 திருவனந்தபுரம் சாலை, பாளையங்கோட்டை.
முன்னேற்றம் புக் டிப்போ, திருநெல்வேலி ஜங்ஷன் .